கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–13, இதழ் – 6 Volume - 13, Issue - 6	வைகாசித் திங்கள் May 2022	விலை ரூ. 20/– Price Rs. 20/-	ஆண்டு சந்தா ரூ. 200/– Annual Subscription Rs. 200/-	தமிழ் மாத இதழ் Tamil Monthly

Dr. R.PRAVEEN BABU,
M.D.(Gen.Med),DNB(Cardio)
Cardiologist (Reg. No.87024)

Dr.A.MANJULA DEVI,
M.B.B.S., D.A., FIC(Cardio)
Physician & Heart Specialist
(Reg. No.88222)

Dr.பிரவீன்

இருதய சிகிச்சை மையம்

சிறப்பம்சங்கள்	FACILITIES
இருதய நோய் சிகிச்சை	CARDIAC CARE
சர்க்கரை நோய் சிகிச்சை	DIABETIC CARE
ஆஸ்துமா நோய் சிகிச்சை	ASTHMA CARE
எக்கோ	ECHO
டி.எம்.டி.	TMT (TREAD MILL TEST)
இ.சி.ஜி.	ECG
ஹோல்டர் மானிட்டர்	HOLTER MONITOR
சிறப்பு இதய பரிசோதனை	SPECIAL CARDIAC TESTS
லேப் (ஆய்வகம்)	LAB
மருந்தகம்	PHARMACY

| 58/32 | Mahadhana Street |
| MAYILADUTHURAI | 609001|
For APPOINTMENT : 90037 36150 ; 63834 59838

| Hotel Noble Nest Building | 23 | Bharathiyar Street |
| Thala Theru | KARAIKAL | 609602 |
For APPOINTMENT : 90878 36150 ; 91235 69279

KALAM'S WORLD RECORDS

CERTIFICATE

EXTRAORDINARY GRASPING POWER GENIUS KID

N. ADIDEV Born on 26-11-2018 from Chidambaram, Tamilnadu, India. He has created a new world record by Identifying and Reciting 100 animal in 1 minute and 50 Seconds and 28 States 9 union Territories in 38 Seconds,10 Thirukkural, Aathichoodi,17 shapes, All planets, 30 fruits, shadow matching with object puzzle, Animals matching with their homes puzzle, 13 english rhymes. He has set a new world record dated 31.01.2022.This achievement is registered in Kalam's world records.

T. நெடுஞ்சேரி திரு. கணபதி – உஷா, மணிக்கிராமம் திரு. ஜெயக்குமார் – லதா இவர்களின் பெயரனும், திரு. நாகராஜன் – புவனேஸ்வரி இவர்களின் புதல்வனுமாகிய **N. அதிதேவ்** (3 வயது) **"Kalam's World Records"** பெற்றுள்ளது நம் கார்குல குழந்தைகளின் அறிவுத்திறமையை உலகுக்கு தெரிவித்தது நம் கார்குல மக்களுக்கு பெருமையே. குட்டிக்கு எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சிதம்பரத்தின் பெருமை

பலகாரம்.com உயர்தர சைவ உணவகம்

தென் / வட இந்திய சைவ உணவகம்

பட்சணம்.காம் இனிப்பு & காரம்

பாரம்பரியத்தின் புதிய சுவை

புதிய கிளை திறப்பு விழா – 21.04.2022

அறுசுவையின் ஆரம்ப விழாவிற்கு வருகை தந்து சிறபித்த சிறப்பு விருந்தினர்கள்

திரு. Dr.அசோக்குமார் (நிறுவனர் FWC & THOFA), திரு. பரமன் பச்சைமுத்து (நிறுவனர் மலர்ச்சி), திரு.Dr.K.R.முத்துகுமார், திருமதி.Dr.I.V.இராணி இளங்கோவன், திரு.அட்வகேட் K.ராமதாஸ், திரு.சம்பத் (கிருஷ்ணா மஹால்), திரு.Dr.சேதுமஹாதேவ தீட்க்ஷிதர், திரு.S.துரைசுவாமி (வீனஸ் எக்யுப்பென்ட்ஸ்), நண்பர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் சிதம்பரம், எண் 106 A, கீழரத வீதியில் இனிதே துவங்கப்பெற்றது.

அனைவரையும் வரவேற்று மகிழும்

V.முத்துகுமார் (CEO, NMP GROUPS) மற்றும் ஸ்ரீவித்யா முத்துகுமார்

தங்கள் நல்வரவை அன்புடன் எதிர்நோக்கும்

NMP CHARITABLE TRUST giving is living

KASTHURIBAI Company - NMP Readymades Since 1943. Chidambaram.

Palagaram.com HIGH CLASS PURE VEG RESTAURANT 156, West car Street, Chidambaram.

PAKSHANAM.com sweets & savouries The taste of tradition



OUTDOOR CATERING

SERVICES AVAILABLE

9047739755 | 9787711755

Since 2015

156, West Car Street, Chidambaram.



2016

2021

45,Sivapuri Main Road, Annamalai Nagar.

Lighting Kuthu Vilakku
KBF

Directory Release

CHENNAI RADHA ENGINEERING WORKS (P)
I.P.L. Produ

MARUTHI

KBF
Biz-Connect

Karkathar Business Forum (KBF) – ன் Biz-Connect

Karkathar Business Forum (KBF) – ன் **Biz-Connect** நிகழ்ச்சி வெகு சிறப்பாக 17–04–2022 அன்று சென்னையில் நடைபெற்றது. செயலாளர் திரு. **B ஆனந்தகுமார்** அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கி கார்காத்தார் மாநில சங்க தலைவர் திரு **K.K.R. சுரேஷ்** அவர்களின் முன்னிலை மற்றும் தலைவர் திரு. **C. ஸ்ரீதர்** அவர்களின் தலைமையில் திரு **V.R. செந்தில் குமார்** (நிர்வாக இயக்குனர், CREW) மற்றும் நம் குல தொழிலதிபர்கள், சங்க நிர்வாகிகளுடைய வாழ்த்துரை, சிறப்புரையுடன் இனிதே நடைபெற்றது.

சிறப்பு பேச்சாளர்களாக திரு. **C.K. குமரவேல்** (Co-Founder, Naturals Salons), திரு. **பரமன் பச்சைமுத்து** (நிறுவனர்–மலர்ச்சி) மற்றும் திரு **GD. தரணீதரன்** (Digital Monk) ஆகியோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். செயற்குழு உறுப்பினர்கள் பொருளாளர் திரு **S. பாலமுருகன்,** திரு. **N. பொன்னம்பலம்,** திரு **T. தரணி,** திரு **V. கண்ணன்**, திரு **A.R. பன்னீர்செல்வம்**, திரு. **K. சரவணன்** ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்திக்கொடுத்தனர்.

திரு M. **பாலமுருகன்** அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

இங்ஙனம்

திரு. **C. ஸ்ரீதர்,** தலைவர் –9840091139

திரு. **B. ஆனந்தகுமார்,** செயலாளர்–9008047700

திரு. **S. பாலமுருகன்,** பொருளாளர் – 9940408718

வாழ்க மணமக்கள்



மயிலாடுதுறை தாலுக்கா, வரகடை எரவுட தெய்வத்திரு. சிவப்பிரகாசம் – நலமுடன் வேதவல்லி அவர்களின் மகன் வழிப் பேரனும், திருச்சிற்றம்பலம் திரு. தியாகராஜன் – ஜெயலெட்சுமி இவர்களின் மகள் வழிப் பேரனுமாகிய திருவளர் செல்வன் **A. சுனில் புவனேஷ்,** B.E. (தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை). மயிலாடுதுறை தாலுக்கா, கழுக்காணிமுட்டம், வ.ஊ.சி. தெரு, புதுவுடையான் தெய்வத்திரு ர. சிதம்பரநாதன் பிள்ளை – நலமுடன் ஜெயலெட்சுமி இவர்களின் மகன்வழிப் பேத்தியும் நாகப்பட்டினம் காடம்பாடி சாத்தனூட தெய்வத்திரு சு. ராமலிங்கம் பிள்ளை நலமுடன் பானுமதி இவர்களின் மகள்வழிப் பேத்தியும், திரு. சி. ரகுநாதன் – லெட்சுமி இவர்களின் குமாரத்தியுமாகிய திருவளர்ச்செல்வி **ர. ரம்யா,** M.C.A. இவர்களது திருமணம் 1197–ம் ஆண்டு பிலவ வருடம் தை மாதம் 25–ந் தேதி (07.02.2022) திங்கட்கிழமை அஸ்வினி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 09.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள் மீன லக்னத்தில் மயிலாடுதுறை, மகாதானத்தெரு, வெண்ணிலா திருமண மண்டபத்தில் இனிதே நடைபெற்றது. 12.02.2022 அன்று மாலை 06.00 மணியளவில் 29, 31, தணிகாசலம் ரோடு, தி.நகர், சென்னை – 600 017 ஹோட்டல் மத்சயாவில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியிலும் பங்கேற்று சிறப்பித்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதழின் உள்ளே....

சங்கப் பலகை 14

நிம்மதி 17

பார்வைகள் பலவிதம் !..... 19

குற்றம் குற்றமல்ல 21

மணமகன் / மணமகள் தேவை .....24 – 28

சிறுவர் பகுதி..... 48

திருவிளையாடற் புராணம் 53

சங்க நிகழ்வுகள் 54

கார்காத்தார் ஒப்புரவு
கார்காத்தார் சங்கம் (சென்னை)
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882

ஆயுள் சந்தா ரூ. 1500/-
ஆண்டு சந்தா ரூ. 200/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் S. **அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

உக்ரேன் – ரஷ்யா போர்

ரஷ்யா உக்ரேன் நாட்டின் மீது கடந்த பிப்ரவரி மாதம் 24 ஆம் தேதி படை எடுத்ததையும் அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்கெனவே வான் மற்றும் தரை வழியாக ரஷ்ய ராணுவத்தினர் நுழைந்து தலைநகர் கியவ், கார்கிவ் போன்ற பகுதிகளில் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளதையும் பலரும் அறிவார்கள். சொல்லப் போனால் இரு நாடுகளுக்கும் இடையேயான யுத்தம் பிப்ரவரி 2014 லேயே துவங்கிவிட்டது என்று கூறலாம்.

1990கள் வரை உக்ரேன் சோவியத் ஒன்றியத்தின் ஓர் உறுப்பு நாடாகத்தான் இருந்தது. அதற்குப் பின் சோவியத் ஒன்றியம் சிதைந்தபோது, சுதந்திரம் பெற்று தனி நாடாக தங்களுக்கென புதிய அரசமைப்புச் சட்டத்தோடு செயல்பட்டு வருகிறது. இப்போதும் உக்ரேன் தன் எல்லைகளை ரஷ்யாவோடும், ஐரோப்பிய ஒன்றியத்தோடும் பகிர்ந்து கொள்கிறது. ஆனால் கலாசார ரீதியிலும் சமூக ரீதியிலும் ரஷ்யாவோடு பல தொடர்புகளைக் கொண்டுள்ளது உக்ரைன். இப்போதும் ரஷ்ய மொழி பேசுவோர் கணிசமாக உக்ரைனில் வாழ்ந்து வருகின்றனர்.

உக்ரைன் நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்கு ரஷ்யாவிடம் பல காரணங்கள் இருந்தாலும், உக்ரைன் நாட்டில் இருக்கும் வளங்கள் முக்கியமான காரணமாக இருக்கலாம். அந்த நாட்டில் இல்லாத வளங்களே இல்லை என்று தான் சொல்ல வேண்டும் அந்த அளவிற்கு வளங்கள் நிறைந்த ஒரு நாடாக உக்ரைன் உள்ளது.

உக்ரைனில் இருந்து ஏராளமான பூக்கள், பழங்கள் மற்றும் உணவுப் பொருட்கள் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உக்ரைன் நாட்டின் மூலம் சுமார் 600 மில்லியன் மக்களின் அன்றாட உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

ராக்கெட் லாஞ்சர்கள்: உலகளவில் 4வது இடம்

உக்ரைன் பெரும்பாலும் ரஷ்யாவைப் போலவே தன்னிறைவு பெற்ற பொருளாதாரமாகும், அதாவது யாரையும் சார்த்து இல்லாமல் இருக்கு.

2 நாடுகளுக்கு இடையே நடக்கிற போர் மூன்றாவதாக வேறு ஒரு நாட்டை பாதிக்குமா ? தற்போதுள்ள உலகமய பொருளாதாரத்தில், நிச்சயமாக எல்லா நாடுகளுமே ஏதோ ஒருவகையில் பாதிக்கப்படும். அப்படியானால், உக்ரைன் போர் இந்தியாவுக்கு என்ன விதமான பொருளாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் ?.

உக்ரைன் போரின் விளைவாக நேரடி, மறைமுக, செயற்கை பாதிப்புகளை நாம் சந்திக்க வேண்டி வரும். எப்போதுமே பதற்றமான சூழல் உருவாகிறது என்றால், அதனைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளச் சிலர் முனையத்தான் செய்வார்கள். இதன் காரணமாக செயற்கைப் பற்றாக்குறை அல்லது விலையேற்றம் ஏற்படும்.

இதேபோன்று, அத்தியாவசியப் பொருட்களுக்கும் செயற்கையான தட்டுப்பாடு உண்டாகலாம். இவற்றை உன்னிப்பாகக் கவனித்து அரசாங்கம் தேவையான தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கும். அதுவரையில் செயற்கை விலையேற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டி வரும்.

உக்ரைன் கோதுமை உற்பத்தி, ஏற்றுமதிக்குப் பெயர் பெற்ற நாடு. போரின் காரணமாக இந்த நாட்டுடன் வணிகத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்கு கோதுமை சப்ளை செய்வதில் சிக்கல் ஏற்படலாம். இந்த நாடுகள் தமது தேவைக்காக இந்தியாவை அணுக வேண்டி வரும். இதனால் நமது நாட்டின் கோதுமை ஏற்றுமதி அதிகரிக்கலாம். நமக்கு நல்லதுதான். ஆனால் இதுவே பாதகமாகவும் இருக்கக் கூடும்.

வெளிநாட்டுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறபோது, நம் மக்களின் உள்நாட்டுத் தேவைக்கான கோதுமை வரத்து குறைந்து போகும். இதனால் கோதுமை விலை ஏறக்கூடும். வடமாநிலங்களில் உள்ள சாமான்யர்களை இது கடுமையாக பாதிக்கும். ஆனால் கோதுமை விவசாயிகளுக்கு நேரடியாகப் பலன் கிடைக்கிற விதத்தில் ஏற்றுமதி சாத்தியம் எனில் மிகவும் நல்லதுதான்.

அடுத்த சில வாரங்களுக்கேனும் எரிவாயு சப்ளை பாதிக்கப்படலாம். இதன் விளைவாக சர்வதேச சந்தையில் இயற்கை எரிவாயுவின் தேவை திடீரென்று பல மடங்கு அதிகரிக்கும். இது நமக்கு நல்லதல்ல. காரணம், திடீர் தேவையைக் கருத்தில் கொண்டு, நமக்கு ஏற்றுமதி செய்கிற நாடுகள், விலையை உயர்த்தவே செய்யும்.

நாம் பயன்படுத்தும் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை, செங்குத்தாக ஏறுவதற்கு சாத்தியங்கள் மிக அதிகம். சாமான்யர்களை நேரடியாக பாதிக்கக்கூடிய இந்த விலையேற்றம் பண வீக்கத்துக்கும் வழிகோலும். இதன் தொடர் விளைவாக, பல பொருட்களின் விலை அதிகரிக்கக் கூடும்.

இவை உக்ரைன் போரின் நேரடி விளைவுகள். மறைமுக பாதிப்புகளும் ஏராளமாக உண்டு. ரஷியா மீது அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை விதிக்கும். இந்தியாவும் இதற்கு கட்டுப்பட வேண்டும் என்று இந்த நாடுகள் எதிர்பார்க்கும். இந்தியா இதற்கு உடன்படுவதற்கு வாய்ப்பே இல்லை. எனவே, இந்த நாடுகளின் கோபத்துக்கு நாம் ஆளாக நேரும்.

மற்ற பிற நாடுகளுடன் பேசி பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியும். ஆனால் அதற்கு காலம் பிடிக்கும். அதுவரை மேற்கல்வியை நிறுத்திவைக்கவா முடியும்?. அறிவியல் தொழில் நுட்பம் சார்ந்த துறைகளில் தொடர்ந்த முன்னேற்றம் சாத்தியமாக வேண்டும் எனில், அமெரிக்காவுடன், ஐரோப்பிய நாடுகளுடன் சுமுகமான பரிவர்த்தனைகள் மிகவும் அவசியம்.

உக்ரைன் போர் விடுக்கும் பல சவால்களை எதிர்கொண்டு பொருளாதார வளர்ச்சி காண்பது, அரசு எடுக்கும் சாமர்த்தியமான நடவடிக்கைகளைப் பொறுத்தே அமையும். இதனை மத்திய – மாநில அரசுகள் நன்கு உணர்ந்து சரியான திசையில் பயணிக்கும் என்று திடமாக நம்பலாம். நம்பிக்கைதானே வாழ்க்கை!

நன்றி – மாலை மலர்.

தோழனுக்கு ஒரு சொல்

தோழா தோழா
என்னுயிர்த் தோழா
கேட்டுக்கடா
நான் சொல்லப்போகும்
வார்த்தையைக் காதில்
போட்டுக்கடா

முத்தின நெல்லிக்காயும்
மூத்தோரின் வார்த்தைகளும்
முதலில் கசக்கும்
முடிவில் இனிக்கும்
புரிஞ்சுக்கடா
இதை உணர்ந்தால்
உனது வாழ்க்கை
வெல்லமாய் இனிக்குமடா

அன்பிற்கு எல்லையில்லை
அனுசரித்தால் தொல்லையில்லை
விட்டுக் கொடுப்பது
வீண்போகாது
தெரிஞ்சுக்கடா
இதை உணர்ந்தால்
உனது வாழ்க்கை
என்றுமே சொர்க்கமடா

– சி. பாலசுப்ரமணியன்
திருமருகல்.

சென்னை கார்காத்தார் சங்கம்

நூற்றாண்டு விழா அறிவிப்பு

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா டிசம்பர் மாதம் சென்னையில் மிக சிறப்பாக நடைபெற உள்ளது. விழாவினை சிறப்பிக்கும் வகையில் மலர் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விழா மலரில் கட்டுரைகள், கவிதைகள், சங்க நிகழ்வுகள், நமது குல சான்றோர்கள் பற்றி சிறப்புகள் மற்றும் சங்கத்தினை பற்றிய சிறப்பு செய்திகளை தொகுத்து வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

அனுப்பவேண்டிய கடைசி தேதி 21.08.2022.

அனுப்ப வேண்டிய முகவரி

சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094.

இதில் பங்கு பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும் :

திருமதி. **வனஜா இளங்கோவன்,** மலர்க்குழு தலைவர், 6393291286

– கைலை. சண்முகம்,
செயலாளர்.

ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவிற்கு அனுப்பபடும் சங்க செய்திகள், கட்டுரைகள், விளம்பரங்கள் போன்றவைகளை ஒவ்வொருமாதமும் 25ம் தேதிக்குள் அனுப்பபடவேண்டும். அதற்கு பிறகு பெறப்படும் தகவல்கள் அடுத்துவரும் இதழ்களில் தான் பிரசுரிக்கப்படும்.

- **சங்க செய்திகள் / கட்டுரைகள் வெள்ளைதாளில் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக, இடைவெளி விட்டு, கையெழுத்து புரியும்படி (தட்டச்சு செய்தால் நல்லது) சுருக்கமாக எழுதி அனுப்பவும்.**
- **சங்க செய்திகள் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்கமுத்திரையுடன் அனுப்ப படவேண்டும்.**
- **செய்திகள் மற்றும் கட்டுரைகளை கூட்டவோ / குறைக்கவோ, நிராகரிக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆசிரியரின் முடிவே இறுதியானது.**
- **E-mail-ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.**
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் மட்டுமே அனுப்பப்படவேண்டும். (வங்கி கணக்கில் பணம் செலுத்துவது ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.)**
- **செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.**

அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு,**
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

- கார்காத்தார் ஒப்புரவு

சென்னை கார்காத்தார் சங்கம்

நூற்றாண்டு விழா அறிவிப்பு

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா வருகின்ற டிசம்பர் மாதம் சென்னையில் மிக சிறப்பாக நடைபெற உள்ளது. விழாவினை சிறப்பிக்கும் வகையில் மலர் வெளியிட ஏற்பாடுகள் செய்யபட்டு வருகின்றன. விழா மலரில் விளம்பரம் செய்ய கீழ்கண்ட கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கலர் முழுபக்கம்	–	ரூ.	10,000/-
கலர் அரைபக்கம்	–	ரூ.	5,000/-
கலர் கால்பக்கம்	–	ரூ.	2,500/-
கருப்பு வெள்ளை முழுபக்கம்	–	ரூ.	5,000/-
கருப்பு வெள்ளை அரைபக்கம்	–	ரூ.	2,500/-
கருப்பு வெள்ளை கால்பக்கம்	–	ரூ.	1,500/-

விளம்பரம் சம்பந்தமாக தொடர்பு கொள்ள

திரு. **கோ. தியாகராஜன்,** விளம்பரக்குழு தலைவர்

90429 57792

– கைலை. சண்முகம்,
செயலாளர்.

ஆரோக்கிய சமையல்

ஆரோக்கியமான சமையல். பாரம்பரியமான சமையல். இந்த வார்த்தை தான் சமீப வருடங்களாக மக்களை ஆட்கொண்டு வருகிறது. இயற்கை பொருள்களை எடுத்துகொள்வதுதான் பாரம்பரியம் ஆரோக்கியம் என நினைக்கிறோம். ஆனால் அது மட்டும் அல்ல அதை எப்படி பக்குவமாக சமைத்து அதன் சத்துகளை குறைக்காமல் பெறுகிறோம் என்பது தான் முக்கியம் . சத்து மிக்க உணவை சத்திழக்காமல் சமைத்து சாப்பிடும் பாத்திரத்தில்தான் முதல் ஆரோக்கியம் துவங்குகிறது. அப்படி சத்திழக்காமல் சமைக்கும் பாத்திரம் என்றால் விலை அதிகமாகத்தான் இருக்கும் என எண்ணாதீர்கள். இரும்பு, பித்தளை, வெண்கலம், செம்பு போன்றவை விட விலை குறைந்தது அது தான் மண்ணால் செய்யப்பட்ட பாத்திரங்கள். அந்த மண்பானை சமையல் தான் தற்போது மக்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது.

எந்த உணவு பொருளை சமைத்தாலும் அதில் இருக்கும் சத்துதான் ஆவியாகிவிடுகிறது என்று சொல்லலாம். குறிப்பாக காய்கறிகளிலிருக்கும் குளோரொஃபில் ஆனது சமைக்கும் போது ஆவியாகிவிடுவதால் அந்த சத்து நமக்கு கிடைக்காது. ஆனால் மண்ணால் செய்யப்பட்ட பாத்திரங்களில் சமைக்கும் போது அதனுடைய சத்துக்கள் வீணாகாமல் அப்படியே நமக்கு கிடைக்கிறது. இவை உணவின் ருசியை அப்படியே கொடுக்கும்.

மண்பானையில் சமைக்கும்போது வெப்பமானது அனைத்து இடங்களிலும் ஒரே மாதிரி சீராக இருக்கும். உணவுகள் எல்லாமே ஆவியில் வேகவைத்த உணவுகள் போன்ற நன்மையை தரும் செரிமான கோளாறுகள் உண்டாக்காது. உடல் உஷ்ணத்தை குறைக்க உதவும். மண் பானையில் எந்த உணவை சமைத்தாலும் அதற்கு அதிகப்படியான எண்ணெய் பயன்படுத்த வேண்டாம் என்பதால் இயல்பாகவே இரத்த அழுத்தம் பிரச்சனைகளை சந்திக்க வேண்டியிருக்காது.

மண் சட்டியில் எந்த குழம்பு கொதிக்க வைத்து இறக்கினாலும் இறக்கிய ஐந்து நிமிடம் வரை அவை கொதித்துக்கொண்டு இருக்கும். கூடவே அதன் மணமும் வீடெங்கும் பரவும். வாங்கி சமைத்து பாருங்கள் நீங்களும் இந்த மணத்தை உணர்வீர்கள்.

"மண்பானை குடும்பம் மாதிரி பக்குவமாய்
பயன்படுத்தினால் பலன் கிடைக்கும்."

– ஐஸ்வர்யா முத்தையன்,
நெய்வேலி.

முக்கிய அறிவிப்பு :

காகிதம் மற்றும் அச்சக மூலப் பொருட்கள் வரலாறு காணாத வகையில் விலையேற்றம் அடைந்துள்ளதால் ஏப்ரல் 2022 முதல் தமிழகத்தில் உள்ள அனைத்து அச்சகங்களிலும் பிரிண்டிங் வேலைகளுக்கு 40% வரை விலையேற்றம் செய்யப்பட்டுள்ளதால் "**கார்காத்தார் ஒப்புரவு**" விளம்பரக் கட்டணத்தை மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம். வருகின்ற **ஆனி இதழ் (June 2022)** முதல் கட்டணங்கள் கீழ்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கார்காத்தார் ஒப்புரவு வாசகர்கள், விளம்பரதாரர்கள் தொடர்ந்து தங்களது நல் ஆதரவினை நல்கிட அன்புடன் வேண்டுகிறோம்.

கலர் (¼) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ.	**1500/-**
கலர் (½) அரைப் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ.	**3000/-**
கலர் முழு பக்கம்	ரூ.	**6000/-**
பின் அட்டை வெளியுறம்	ரூ.	**7000/-**
மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு)	ரூ.	**500/-**
கருப்பு வெள்ளை (¼) கால் பக்கம்	ரூ.	**750/-**
கருப்பு வெள்ளை (½) அரைப் பக்கம்	ரூ.	**1500/-**
கருப்பு வெள்ளை முழுப் பக்கம்	ரூ.	**3000/-**

குறிப்பு : மணமகன் / மணமகள் தேவை மட்டும்தான் கலரில் கால் (¼) அரை (½) பக்கம் ஏற்றுக் கொள்ளப்படும்.

इंडियन बैंक Indian Bank

इलाहाबाद ALLAHABAD

HOME LOAN

Cell : 93458 04981 / 79040 62298

➤ Housing Loan ➤ Repairs / Renovation ➤ Extension of Building ➤ Commercial Building

➤ Take over Loans from Other Banks ➤ Mortgage Loans ➤ NRI Housing Loans ➤ Car Loans

Business Loans, OD, OCC, Against Property, MSME Loans

Ln.T.RAMAMOORTHY,

Home Loan Counselor, indian Bank, Chidambaram

E.mail : matrimonycdm@gmail.com

சங்கப் பலகை

பங்கு பெறுவோர் : மங்களம், அலமேலு, ஆண்டாள், சித்ரா, வசுமதி, தீபிகா, கோமதி, பிரியா, கௌரி, பவித்ரா

இடம் :- பனகல் பார்க் – தி. நகர்

சித்ரா – சிரித்துக் கொண்டே அலமேலு மாமி இன்னைக்கு உங்களுக்கு ஏதாவது டவுட் இருக்கா நாங்க ஆரம்பிக்கலாமா சொல்லுங்க.

அலமேலு – வீட்ட விட்டு கிளம்புற வரைக்கும் எதுவும் டவுட் இல்லை. ஆனா இங்கே வந்தவுடந்தான் ஒரு டவுட் வந்திருக்கு.

வசுமதி – அது என்னா டவுட்டுன்னு சொல்லுங்க மாமி அதிலேர்ந்து ஆரம்பிப்போம்.

அலமேலு – இந்த இடத்தை எல்லோரும் மாம்பலம் அப்பிடின்னுதான் சொல்றாங்க ஆனா கடை போர்டில எல்லாம் தி. நகர்னு போட்டிருக்கே.

தீபிகா – சபாஷ் மாமி எங்கேயே இருக்ற அமெரிக்காவப் பத்தி எல்லாம் பேசறோம் நாம இருக்ற சென்னைய பத்தி இப்போ பேசுவோம்.

கோமதி – இன்று ஏரிகளும் குளங்களும் வீடுகளாகவும், பேருந்து நிலையங்களாகவும் மாறி வருவதையும் அதனால் மழைக் காலங்களில் வெள்ள நீர் போக வழியில்லாமல் சிட்டி தண்ணீரில் மூழ்குவதையும் பார்த்து வருத்தப்படுகிறோம்.

மங்களம் – . நீ சொல்றது சரிதாம்மா ஆனா அலமேலு கேட்டது மாம்பலமா தி நகரா அப்பிடீன்னு ? அதைப் பத்தி சொல்லுங்க.

பிரியா – அதைப் பத்தியும் சொல்றோம் நீங்க கேக்காத பாண்டி பஜார் பத்தியும் சொல்வோம்.

மங்களம் – சரி சரி சொல்லுங்கம்மா நான் தான் கொஞ்சம் அவசரப் பட்டுவிட்டேன்.

பவித்ரா – ஏரி இருந்த இடத்தை குடியிருப்பு பகுதியாக மாற்றுவது அந்தக் காலத்திலேயே இருந்தது.

1920களிலேயே மெட்ராஸின் புறநகரில் அதாவது தற்போதைய தி. நகரில் இருந்த ஒரு பெரிய ஏரி நகராக மாற்றப்பட்டிருக்கிறது! 1923ம் வருடம் 'டவுன் பிளானிங்' திட்டத்தில் உருவான அந்த நகரின் பெயர் தியாகராய நகர் என ஆக்கப்பட்டது.

அலமேலு – அப்படியா நீ சொல்றது ஆச்சரியமா இருக்கேம்மா.

கௌரி – ஆமாம் மாமி. அப்போது ஏரியைச் சுற்றிலும் விவசாய நிலங்கள்தான். இந்தப் பகுதி முழுவதும் அன்று மாம்பலம் என்றழைக்கப்பட்டது. இன்று நகரின் மையப் பகுதியாக இருந்தாலும் கூட அன்று மெட்ராஸின் புறநகர்தான் மாம்பலம். இதைத்தான் நகர திட்டத்தில் மனைகளாக மாற்றினர்.

இதனால், ரயில் நிலையத்திற்கு மேற்குப் பக்கமாக இருந்த பகுதி மேற்கு மாம்பலமாகவும், கிழக்குப் பக்கமாக இருந்த பகுதி கிழக்கு மாம்பலமாகவும் மாறிப் போனது. இந்தக் கிழக்கு மாம்பலமே பின்னர் தியாகராய நகராக பெயர் மாற்றப்பட்டது. ஆனால், இன்றும் ரயில்வேயின் பெயர்ப் பலகை மட்டுமே அந்தப் பழைய மாம்பலத்தை நமக்கு நினைவூட்டுகிறது.

மங்களம் – அது சரிம்மா மாம்பலத்துக்கு தியாகராய நகர்ங்கற பேரு எப்படி வந்தது.

கௌரி – சொல்றேன் மாமி.

1920ம் வருடம் முதல் முதலாக நடந்த தேர்தலில் வெற்றி பெற்று மெட்ராஸ் மாகாணத்தில் ஆட்சியைப் பிடித்தது நீதிக்கட்சி. அதன் தலைவர் சர்.பிட்டி. தியாகராய செட்டியாரின் பெயர் இந்நகருக்கு இடப்பட்டது.

சித்ரா – கௌரி அக்கா அப்படியே பனகல் ராஜா பற்றியும் சொல்லுங்களேன்.

அலமேலு – ஏம்மா சித்ரா உனக்கே தான் தெரியுதே நீயே சொல்லேன்.

சித்ரா – சரி மாமி அவ்வாறு உருவாக்கப்பட்ட நகரின் நடுவில் ஒரு பூங்கா வடிவமைக்கப்பட்டது அந்தப் பூங்காவிற்கு, நீதிக்கட்சியின் தலைவராகவும், மாகாணத்தின் இரண்டாவது முதல்வராகவும் இருந்த பனகல் அரசர் ராமராய நிங்காரை கௌரவப்படுத்தும் வகையில் 'பனகல் பார்க்' எனப் பெயர் சூட்டப்பட்டது.

இந்தப் பூங்காவிலிருந்து தியாகராயா சாலை (பாண்டி பஜார் ரோடு), கோபதி நாராயணசெட்டி சாலை (ஜி.என். செட்டி ரோடு), வெங்கட்நாராயணா சாலை என மூன்று சாலைகள் அண்ணா சாலையை நோக்கிச் செல்லும் வகையில் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டன.

வசுமதி – பாண்டி பஜார்னு பேரு வந்ததப் பத்தி நான் சொல்றேன். பாண்டி பஜார் எனப் பெயர் வந்ததற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று, நீதிக்கட்சியின் தலைவர்களுள் ஒருவரும், முதல் சட்டமன்றத்தில் உறுப்பினராகவும் இருந்த டபிள்யு.பி.ஏ. சவுந்தரபாண்டியன் நாடார் நினைவாக வைக்கப்பட்டது என்பது.

மங்களம் – இன்னொரு காரணம் என்னாம்மா.

வசுமதி – மற்றொன்று, சொக்கலிங்க முதலியார் என்ற பாண்டிச்சேரி பிரமுகர். இதுபற்றி, 'தியாகராய நகர் அன்றும் இன்றும்' நூலில் நல்லி குப்புசாமி செட்டியார் இவ்வாறு குறிப்பிடுகிறார்."முதலில் பத்து சிறிய கடைகள் கொண்ட வணிகக் கட்டடத்தை தியாகராயா சாலையில் கீதா கஃபே ஹோட்டலுக்கு அருகே

எழுப்பியவர் பாண்டிச்சேரியைச் சேர்ந்த சொக்கலிங்க முதலியார். அதுதான் தி.நகரின் முதல் பஜார். அவர் பாண்டிச்சேரிக்காரர் என்பதனால், பிறந்த மண்ணின் மீதான அபிமானம் காரணமாக கட்டடத்திற்கு 'பாண்டி பஜார்' என்று பெயரிட்டார்.

அலமேலு – ஏம்மா நீங்க சொல்றத பாத்தா தி. நகர் ஏரியா பூரா ஏரியா இருந்திருக்கும் போல் இருக்கே.

மங்களம் – அந்தக் காலத்துல அவ்வளவு பெரிய ஏரி கட்டி இருக்காங்க. நமக்கு அதை எல்லாம் பாக்கக் கூட குடுத்து வக்கிலியே.

கௌரி – ஏன் மாமி இப்போ கூட சிதம்பரத்திலேர்ந்து காட்டுமன்னார்குடி போற வழியில வீராணம் ஏரி இருக்குதே மாமி.

மங்களம் – ஆமாம் கௌரி. வீராணம் ஏரி பத்தி நான் கூட கேள்விப்பட்டிருக்கேன். கல்கியின் பொன்னியின் செல்வன் நாவல் ஆரம்பிக்கிறதே அந்த ஏரிக் கரையிலேர்ந்துதான் அதப் பத்தி கொஞ்சம் விரிவா சொல்லு கௌரி.

கௌரி – சரி மாமி அதைப் பத்தி நம்முடைய வாட்ஸ் அப்பில லாயர்ஸ் லை ஃபாலோயெர்ஸ்ல ஒரு அட்வகேட் கூறியிருக்காரு.

அலமேலு – நாங்க எப்படிம்மா அந்த வாட்ஸ் அப்ப படிக்கிறது நீயே சுருக்கமா சொல்லிடும்மா.

கௌரி – சரி மாமி சொல்றேன். பராந்தக சோழன் ஆட்சிக் காலத்தில தனது எதிரிகளிடமிருந்து தன் நாட்டைப் பாதுகாக்க தனது மகன் இராஜாதித்தனை திருமுனைப்பாடி என்ற இடத்தில் படை வீரர்களுடன் பல ஆண்டுகள் முகாமிடச் செய்திருந்தான். ஆயிரக் கணக்கான வீரர்கள் எந்த வேலையும் இல்லாமல் சும்மா இருப்பதைக் கண்ட இராஜாதித்தன் தன் படை வீரர்களைக் கொண்டு காவிரி நீரை சேமிக்கக் கட்டியதுதான் வீரநாராயணன் ஏரி என்னும் வீராணம் ஏரி.

மங்களம் – அதுவும் ரொம்ப பெரிசு தானே.

கௌரி – ஆமாம் மாமி அதன் நீளம் 18 கி.மீயும் அகலம் 4 கி.மீ ன்னு சொல்றாங்க 907 ஆம் ஆண்டில் கட்ட ஆரம்பிச்சு 955–ல் முடிக்கப்பட்டதாக்ச் சொல்லப்படுகிறது.

அலமேலு – ரொம்ப சந்தோஷம் அம்மா. வீராணம் ஏரியப் பத்தி எங்களுக்குத்தெரியாத விஷயங்கள எல்லாம் சொல்லியிருக்கீங்க. இப்ப எனக்கு ஒரு டவுட்.

சித்ரா – சொல்லுங்க அலமேலு மாமி இது மாதிரி நீங்க ஏதாவது டவுட் கேட்டா புதுசா ஏதாவது தகவல் வருது.

அலமேலு – அது ஒண்ணுமில்ல அம்மா இந்தியா சுதந்திரம் அடைஞ்சப்ப காஷ்மீர் ராஜா, மைசூர் ராஜா, ஹைதராபாத் நிஜாம் எல்லாம் அவுங்க ஆண்ட காஷ்மீர், மைசூர் ஹைதராபாத் போன்ற ஊர்களை எல்லாம் இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைச்ச மாதிரி இந்த பனகல் ராஜா தான் சென்னையை இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைச்சாரா ?

கௌரி – இல்லை மாமி சென்னையப் பத்தின வரலாறே இருக்கு அதை சொல்ல ஆரம்பிச்சா முடிக்க இன்னைக்கு நேரம் இருக்குமான்னு தெரியல.

ஆண்டாள் – பரவாயில்ல ஆரம்பி கௌரி நம்ம தலைநகர் சென்னையைப் பத்தி நாம் தெரிஞ்சுக்க வேண்டாமா ?

கௌரி – சரி மாமி ஹிஸ்டரி படிச்ச உங்களுக்குத் தெரியாதது ஒண்ணுமில்லை. முந்தி மாதிரி நாங்க எல்லோரும் ஆளுக்குக் கொஞ்சம் கொஞ்சமா சொல்றோம் முதலில் சித்ரா ஆரம்பிப்பா.

சித்ரா –மெட்ராஸ் என்ற பெயரும் சென்னை என்ற பெயரும் மதராஸப்பட்டினம், சென்னப்பட்டினம் என்ற இரண்டு ஊர்களின் பெயரில் இருந்துதான் தோன்றியது எனப் பரவலாக நம்பப்படுகின்றது. சொல்லப்போனால், அந்த இரண்டு ஊர்களின் இணைப்பில் உருவான பரப்பைத்தான் இன்று நாம் சென்னை என்று வரையறுத்துள்ளோம், அதாவது இன்று நகரம் அல்லது பெரு நகரம் என்னும் சிட்டியாகிய சென்னை அந்தக் காலத்தில் பல கிராமங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

மங்களம் – மதராஸப் பட்டிணம்னு ஒரு சினிமா கூட வந்தாப்ல இருக்கே.

வசுமதி – கரெக்ட் மாமி அப்படி ஒரு படம் வந்தது வாஸ்தவம்தான் அதாவது இன்றைக்கு நாம் இருக்கும் இந்த சென்னை முன்பு மதாராஸப் பட்டிணம் என்று அறியப்பட்டது . தொண்டை மண்டலத்தில் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த நெல்லூரில் உள்ள பென்னார் ஆற்றுக்கும். நமது கடலூருக்கும் இடைப்பட்ட பிரதேசமாக இருந்தது. அப்பகுதி சோழ பாண்டிய பல்லவ மற்றும் விஜய நகர சாம்ராஜ்ய மன்னர்களால் ஆளப்பட்டது. விஜய நகர சாம்ராஜ்யத்தின் ஆளுகையின் போது அவர்கள் ஆட்சிக்கு உட்பட்ட ஒவ்வொரு பகுதியையும் ஆள அப்பகுதிக்குத் தனியாக நாயக்களை நியமித்திருந்தனர். அவ்வாறு மதராஸ் பட்டினத்துக்கு நியமிக்கப்பட்ட நாயக்தான் வெங்கடாத்ரி நாயக்கர் என்பவர். அவருடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தது அன்றைய சென்னை

அலமேலு – அப்புறம் என்னா ஆச்சு.

தீபிகா – அத நான் சொல்றேண் 1639 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் 22 ஆம் தேதி நம்முடைய நாட்டில் வியாபாரத்துக்காக வந்திருந்த கிழக்கிந்திய கம்பெனியின் சார்பில் ஃப்ரான்சிஸ் டே என்பவரும் ஹென்ரி ஹோஹன் என்பவரும் சேர்ந்து சென்னையில் கடற்கரை பகுதியில் ஒரு சிறிய இடத்தை 16000 வராஹன் கொடுத்து வெங்கடாத்ரி நாயக்கரிடமிருந்து வாங்கினார்கள். அந்த நாளை அதாவது 22 ஆகஸ்ட் தான் மெட்ராஸ் தினமாக கொண்டாடப்படுகிறது. அவர்கள் வாங்கியது மதராஸ் பட்டினத்தில் ஒரு பகுதி.

மங்களம் – ஏம்மா சென்னப்பட்டினம் வேறே மதராஸ் பட்டினம் வேறேயா.

தீபிகா – ஆமாம் மாமி. அந்த இரண்டு பட்டினமும் பல கிராமங்களை உள்ளடக்கிய இரண்டு தனித்தனி பகுதிகள். அதாவது இன்றைய சென்னை மாநகரம் அப்போ சென்னைக்கு வியாபாரத்துக்காக வந்திருந்த இங்கிலாந்தைச் சேர்ந்த ஈஸ்ட் இந்தியா கம்பெனி என்னும் கிழக்கிந்திய கம்பெனி இங்கு சென்னையில் அவர்கள் வியாபாரத்துக்காக ஒரு தொழிற்சாலை கட்ட இடம் தேவைப்பட்டதால் அப்போது சென்னையின் நாயக்காக இருந்த வெங்கடாத்ரி நாய்க்கரிடம் கேட்டார்கள். அவரும் அவர்களுக்குப் பயன் இல்லாமல் வேஸ்ட்டாக இருந்த இடத்தில் கொஞ்சம் நிலத்தை அதாவது தற்போது தமிழக அரசின் தலைமைச் செயலகம் உள்ள இடத்தை ஆங்கிலேயருக்கு விலைக்கு விற்றார்.

அலமேலு – அங்கே இருக்ற கோட்டை எல்லாம் இந்திய ராணுவத்துக்குச் சொந்தம்னு சொல்றாங்களே.

கோமதி – பரவாயில்லை மாமி நீங்கள் நம் நாட்டு நடப்பை எல்லாம் நல்லா கவனிச்சிகிட்டு வரீங்க. வெங்கடாத்ரி நாயக்கரிடம் வாங்கிய இடத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி தற்போதுள்ள செயிண்ட் ஜார்ஜ் கோட்டையையும் அவர்களது வியாபாரிகளுக்கும் இதர ஆங்கிலேயர்களுக்கான வீடுகளையும் வியாபாரத்துக்குத் தேவையான கோடவுன் போன்றவற்றையும் கட்டிக் கொண்டார்கள். அவ்வாறு கட்டி வேஸ்ட் நிலமாக இருந்த அந்த இடத்தில் அவர்களுக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டி அதனை ஒரு வியாபார ஸ்தலமாக்கினார்கள்.

ஆண்டாள் – ஏனம்மா போர்ச்சுகீசியர்கள் மற்றும் டச்சுக் காரர்கள் கூட வியாபாரத்துக்காக சென்னை வந்தார்களே அது எப்போ ?

கௌரி – நான் சொல்றேன் மாமி. பிரிட்டிஷாரின் கிழக்கு இந்தியக் கம்பெனி சென்னையில் இடம் வாங்கியது 1639 ல் ஆனால் அதற்கு முன்பே 1522 லேயே போர்ச்சுகீசியர் சென்னைக்கு வந்தார்கள். அவர்கள் தான் செயிண்ட் தாமஸ் நினைவாக சாவ் தாம் என்ற இடத்தில் போர்ட்டைக் கட்டினார்கள். அதுதான் பின்னர் சாந்தோம் ஆகியிருக்கலாம். அவர்களுக்குப் பிறகு டச்சுக் காரர்கள் 1612 ல் வட சென்னையில் புலிக்காட்டில் அவர்களுடைய இடத்தை அமைத்துக் கொண்டார்கள்.

ஆண்டாள் – ஒயிட் டவுன் மற்றும் ப்ளாக் டவுன் பத்தியும் கொஞ்சம் சொல்லம்மா.

அலமேலு – என்ன ஆண்டாள் உனக்கும் இதெல்லாம் தெரியுமா ?

ஆண்டாள் – காலேஜில் படித்தது. இப்போ மறந்து போச்சு. இந்தப் பெண்கள் அந்தக் கால வரலாற்றை சொன்னதும் கொஞ்சம் ஞாபகம் வருது.

பிரியா – அதைப் பத்தி நான் சொல்றேன் மாமி.

வெங்கடாத்ரி நாயக்கரிடமிருந்து சென்னையில் இடம் வாங்கும்போது கிழக்கிந்தியக் கம்பெனியும் நாயக்கும் ஒரு ஒப்பந்தம் போட்டிருந்தார்கள் அதன்படி பிரிட்டிஷாரும் இதர ஐரோப்பியர்களும் அவர்களது கட்டிடத்தின் வெளிப்புறம் வெள்ளை வர்ணம் மட்டும் தான் பூசலாம் அவர்கள் வீடு கட்டிக் கொண்ட இடம் வெள்ளை நகரம் ஒயிட் டவுன் என்று அழைக்கப்பட்டது. வியாபாரம் முக்கியமாக கிழக்கிந்தியக் கம்பெனியுடன் நடைபெற்றதால் ஐரோப்பியர்கள் மட்டுமே வெள்ளை நகரில் வசிக்க அனுமதிக்கப்பட்டனர். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிரிட்டிஷார் அல்லாத வணிகர்கள் வெள்ளை நகருக்கு அருகில் இருந்த கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சொந்தமான இடத்தில் தங்க அனுமதிக்கப்பட்டனர். வெள்ளை நகருக்கு அருகில் அதிகமான அளவில் இந்தியர்கள் சேர்ந்த இடம் " கறுப்பு நகரம் " என அழைக்கப் பட்டது அந்த வெள்ளை நகரமும் கறுப்பு நகரமும் சேர்ந்து தான் மதராஸ் உருவாயிற்று.

செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு வடக்குப்பக்கம் மதராஸ்பட்டினமும் தெற்குப் பக்கம் சென்னைப் பட்டினமும் இருந்ததாகக் கூறப்படுகிறது.

கௌரி – மதராஸப்பட்டினம் என்ற பெயர் ஆங்கிலேயர்களுக்குப் பிடித்திருந்ததால், இந்த அடையாள சிக்கலைக் களையும் விதமாக, ஒட்டு மொத்தப் பகுதியையும் மெட்ராஸ் என அழைக்கத் தொடங்கினர். ஆனால் மக்கள் அந்தப் பகுதியைச் சென்னப்பட்டினம் என்றே அழைத்துள்ளனர்/

சென்னையைப் பற்றி சொல்வதற்கு இன்னும் நிறைய இருக்கிறது. அவற்றை எல்லாம் கூற இப்போது நேரம் போதாது. அதனால் இந்த சந்திப்பில் இத்துடன் நிறுத்திக் கொள்வோம்.

அத்துடன் எல்லோரும் கலைகிறார்கள்.

நிம்மதி - தகுதிக்கு தரப்படும் இறைவெகுமதி!

ஞான. அம்புலி, சிதம்பரம்

உலகத்தில் அனைவரும் தேடுவது எது எனக் கேட்டால் பெரும்பாலோரிடமிருந்து "பொருள்" என்ற பதில் வந்துவிடும். இந்த கணிப்பு தவறானது என சுட்டிக்காட்டுகிறது ஒரு அமெரிக்க பல்கலைக்கழகம். இவர்களால் உலக பொருளாளர்கள் நிறுவன நிதியுதவியுடன் உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளில் வாழும் பல்வேறு வகை மக்களிடம் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரப்படி 68.8% மக்கள் நிம்மதியைத்தான் (பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இது 44% ஆகத்தான் இருந்ததாம்) தேடுகிறார்களாம். மீதியில் 30% பேர் பொருளையும், பாக்கி உள்ளத்தில் 1.00% பேர் நாடு, நட்பு, துணை, கௌரவம், உடல்பலம், ஆளுமைபண்பு போன்றவற்றை விரும்பித் தேடுகிறார்களாம். மீதி 0.2% நபர்கள் எதையும் தேடாமல், ஒன்றும் செய்யாமல் அதே நேரத்தில் நிம்மதியான சுகபோக வாழ்க்கை வாழ்ந்திட விரும்புவதின் மூலம் தங்கள் வீட்டுக்கு மட்டுமல்லாமல் உலகுக்கும் சுமையாய் இருந்து வருகின்றார்களாம்.

'எங்கே நிம்மதி! எங்கே நிம்மதி! அங்கே எனக்கோர் இடம் வேண்டும்' என்ற சினிமா பாடலை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அந்த அளவுக்கு இன்றைய வாழ்க்கை நிலை மனித சமுதாயத்தை கலங்க வைத்திருக்கிறது. காடுகளில், மலைகளில், வனாந்திரங்களில், முனிவர்கள் இறையருளை வேண்டியபடியே வாழ்ந்தது இறைவனை அடைவதற்காக மட்டுமல்ல! அவன் பாதத்தை அடையும் பாதை பாதுகாப்பானதாகவும் நிம்மதியாகவும் இருக்கத்தான் என்பார்கள்.

சமீபத்திய ஒரு நிகழ்வு எல்லோரையும் சிந்திக்க வைத்துள்ளது. உலகிலே பெரும் பணக்காரர்களில் ஒருவர் பம்பாயில் ஒரு முக்கிய வீதியில் காரில் போகும்போது ஒரு தெருமுனையில் சிறிய கூட்டமொன்றில் ஒரு சாமியார் அருளாசி கொடுத்ததை பார்த்து அவரை தனது தங்குமிடத்துக்கு அழைத்துச் சென்றார். உலகிலேயே தலைசிறந்த கட்டிடங்களில் ஒன்றான தனது பங்களாவை சுற்றிக் காண்பித்துவிட்டு, சாமியாரிடம் கேட்டார். 'ஐயா சுவாமி அவர்களே! இவ்வளவு சொத்து, சுகம் இருந்தும் இரவில் எனக்கு தூக்கம் வரவில்லை. இரவு உறக்கத்துக்காக உலகெங்கும் கிடைக்கும் நவீன மருந்து மாத்திரைகள் எனக்கு வேலை செய்யவில்லை. நீங்கள் ஏதாவது வழி சொல்லுங்கள்' என்றாராம். சற்று யோசித்த சுவாமியார் அந்த தனவந்தரிடம் உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் உங்கள் படுக்கை அறையை நான் பார்க்கலாமா? எனக் கேட்டார். சற்று கோபமும் பயமும் அடைந்தாலும் அந்த தனவந்தர் சாமியாரை தனது படுக்கை அறைக்கு அழைத்து சென்று அங்குள்ள விலை உயர்ந்த ஆபரணங்கள், பன்னாட்டு அரிய பொக்கிஷங்கள், ஈ எறும்புகூட புகமுடியாத பாதுகாப்புச் சுவர்கள் எல்லாவற்றையும் காட்டினார். இவர் காட்டிய பொருட்களில் அதிக கவனம் செலுத்தாத சாமியார், மாடி வராண்டாவை பார்க்க வேண்டும் என சொல்லி அங்கு சென்றார். அந்த பகுதியின் பாதுகாப்பு பற்றி அனைத்து விபரங்களையும் அறிந்தபின் அந்த தனவந்தரிடம் சாமியார் சொன்னார் 'உலகிலேயே அதிக மதிப்புள்ள பொருள்களின் மத்தியில் நீங்கள் படுத்திருப்பது உரிமையாளர் என்ற எண்ணத்தில் அல்ல! அப்பொருட்களின் பாதுகாவலராகத்தான் நீங்கள் உணர்வதை உங்கள் உள் மனம் புரிந்துகொண்டுள்ளது. பாதுகாவலனுக்கு தூக்கம் எப்படி வரும்?' எனக் கேட்டு தொடர்ந்தார். 'ஆகையால் இன்றிலிருந்து உங்கள் படுக்கை அறையை பாதுகாப்பாக பூட்டிவிட்டு இந்த வராண்டாவில் வயதுக்கேற்ற உடற்பயிற்சியோடு இயற்கை காற்றில் படுத்துப்பாருங்கள், உங்களை தேடி வந்திடும் தூக்கம் அதோடு அது உங்களை அழைத்துச் செல்லும் இடம் சொர்க்கம்' என்றாராம். அந்த சாமியாரின் வாக்குப்படி நல்ல தூக்கத்தை பெற்ற தனவந்தர் சில நாட்களில் வராண்டாவின் பாதுகாப்புகளை உறுதி செய்துவிட்டு தனது குடும்ப உறுப்பினர்களையும் வராண்டாவில் படுக்கச் சொல்லியுள்ளார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் இல்லாமல் நவீன உலகம் மணிக்கு மணி உருமாறிவரும் நிலையில் எல்லாவற்றையும் விரும்பி ஓடாய் உழைத்து துரும்பாய் இளைத்து போதுமடா சாமி என வாழ்க்கை மீது வெறுப்பேற்பட்டு நிம்மதியோடு இருக்கும் நிலையை பெரும்பாலோனோர் விரும்பி வருவதை கண்கூடாகக் காணலாம். எல்லா சுகத்திலும் நிம்மதி கிடைக்காத காரணத்தால் தினம் தினம் இறைவனிடம் தஞ்சம் புகுந்திடும் பலரைப் பார்க்கலாம். 'முழு வாழ்க்கை வாழ்ந்தவனைத்தான் இறைவன் விரும்புவான்' என்றார் விபுலானந்த அடிகளார். ஒவ்வொரு பருவத்திலும் ஏற்படும் சுகதுக்கங்களை அனுபவித்து அதே நேரத்தில் இறைவன் அருளை இறஞ்சியபடி வாழ்பவனுக்கு நிம்மதி கிடைக்கும். 'நிம்மதியான வாழ்க்கை சொர்க்க

வாழ்க்கைக்கு ஈடானது' என்றார் குருகுலத்தார். நிம்மதி கிடைக்கப் பெற்றவர்களின் வாழ்க்கைமுறை முற்றிலும் வேறுபட்டிருக்கும். அவசரமின்மை, ஆளுமைதிறன் மேம்பாடு, இமைப்பொழுது விடாது இறைவன் திருநாமம் ஜபித்தல், இளகிய செயல்பாடுகள், கொவ்வைச் செவ்வாய் பேச்சு இவையெல்லாம் நிம்மதியாய் இருப்பவன் என்ற பேரு பெற்ற அதிருஷ்டசாலிகளின் அடையாளங்களாகும். நிம்மதி பெற்றோர் வாழ்க்கை வழிகாட்டியாக தகுதி பெற்றவர்களாகிறார்கள். பெரும் பேரும், சீரழிவும் பேரிழிவும் இவர்களை நிலைகுலையச் செய்வதில்லை. வருமுன் காப்போனாக வாழும் திறமை பெற்றிருப்பார். எந்த வயதினரையும் வாழ்த்த வழிகாட்ட வகுக்கப்பட்டவர்கள் இவர்கள்.

நிம்மதி பெறுவதோடு பேரின்ப பெருவாழ்வு கிடைத்திட அனுதினமும் செல்ல வேண்டிய ஒரே இடம் இறைவனின் திருக்கோயில். நிம்மதி ஒரு தொடர் ஓட்டம் போன்றது. ஒருவரிடம் இது வந்துவிட்டால் அடுத்தடுத்து பலரிடம் இதனுடைய தாக்கம் பரவுதல் கண்கூடான காட்சியாம். நிம்மதியானது பலருக்கு பலவிதமாக கிடைக்கும். 'அதோ போகிறவன் நேற்றுவரை நிம்மதியாக வாழ்ந்துகொண்டிருந்தான். இன்று நடுத்தெருவுக்கு வந்துவிட்டான்' என்ற பேச்சுகளை அடிக்கடி கேட்கலாம். மறக்க வேண்டிய நிகழ்வுகளை மறந்து மனதில் நிறுத்த வேண்டியவைகளை நிறுத்தி, திட்டத்தையும், செயல் பாதைகளையும் செப்பனிட்டு முக்கிய முடிவுகள் இறுதியானது மட்டுமல்ல உறுதியானதும் கூட என சூளுரைப்போரிடமே தொடர் நிம்மதி நிலைக்கும்.

நிம்மதியோடு இருப்பது வாழ்க்கை மேம்பாட்டுக்கான பெரிய உதவி தரும் என்பதில் சந்தேகமில்லையென்றாலும், நிம்மதி இழப்பு சரிசெய்யக்கூடிய ஒன்றுதான் என்பதை மறத்தல் கூடாது. மனச்சோர்வுயின்மை, தன்நம்பிக்கை இழக்காமை, மற்றோரிடம் அவர்கள் தகுதிக்கேற்ற எதிர்பார்ப்பு, கசப்பானவைகளை எடுத்துச் சொல்லி கசக்கி எறிந்துவிட்டு முயற்சியினை கைவிடாது இருப்போர் ஆகியவைகளால் நிரந்தர நிம்மதி கிடைத்திடும். கிடைத்த நிம்மதியினை தக்கவைத்துக்கொள்வதோ, கக்கவைத்துக்கொள்வதோ தனிப்பட்டவரின் திறமையை பொருத்ததாகும்.

நிம்மதி கொண்டோர் நிறைவாக உள்ள சமுதாயத்தை இறைவன் விரும்பி வருவான் என்றார், திருநீலகண்ட நாயனார். நிம்மதியின் முதல் அடையாளம் மன நிறைவு. இதைத்தான் 'போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து' என மூத்தோர் அழகாகச் சொல்லியுள்ளார்கள். 'நிறைகுடம் தளும்பாது' என்பதைப் போல் மனநிறைவு மாறாது, குறையாது இருந்தாலே நிம்மதி நிலைத்ததாகிவிடும். நிம்மதிபெற்ற நிலையில் இறைவனை தரிசிக்கின்ற நிலையைத்தான் இறைநிலை என்பார்கள். இந்நிலைபெற்று இன்புற்றிருக்க இன்று முதல் முனைப்பாய் முயல்வோம்.

ஜெய்ஸ்ரீ தகவல் மையம்

19/2 வள்ளலார் கோயில் சன்னதி தெரு, மயிலாடுதுறை. அலைபேசி : 94434 88125

கார்குல பெரியோர்கள் தங்கள் வரன் பற்றிய விபரங்களை பதிவு செய்து ஏற்ற வரன்களை எங்கள் ஆலோசனையுடன் பெற்றுச் செல்லலாம். தாங்கள் ஜாதகம் கொடுத்தால் தங்கள் அனுமதியுடன் மட்டும் தரப்படும். நிர்வாக செலவிற்கு பதிக்கட்டணம் மட்டும் பெறப்படும். பதிவு செய்தவர்களுக்கு மட்டும் பதிவு கார்டு கொடுக்கப்படும். திருமணம் முடிந்த பின் பதிவு நீக்கப்படும். பதிவுக் கட்டணம் ரூ.200/- மட்டும். எங்கள் இப்பணி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அலுவலக நேரம் சனிக் காலை 10.00 மணி முதல் 12.30 வரை, மாலை 4.30 மணி முதல் 7.30 வரை, மற்ற நாட்களில் மாலை 4.30 முதல் 7.30 வரை, ஞாயிறு விடுமுறை

நிறுவனர் **எஸ். ஜெயம்** வாழ்த்துக்களுடன் **எம். சத்தியபால்**

கடிதத் தொடர்பு முகவரி : **எஸ். ஜெயம்,** 10, மயூரநாதர் மேல வீதி, மயிலாடுதுறை-609 001.

பார்வைகள் பலவிதம் !

Dr. D. Kalyanakumar, Trichy - 18.

பார்வைகள் பலவிதம் - ஒவ்வொன்றும் ஒருவிதம்.

பார்வை இறைவன் கொடுத்த மாபெரும் வெகுமதி எதையும் மிகத் துல்லியமாகப் பார்த்து அறிந்துகொள்ள கண்களை இறைவன் படைத்துள்ளான். இவ்வுலகில் ஆண், பெண் என்ற ஈரினமே ஆணைத் தந்தையாக, தனயனாக, அண்ணனாக, தம்பியாக, கணவனாக வேறுபடுத்திக் காட்டுவது நாம் பார்க்கும் பார்வையில்தான் அடங்கியுள்ளது. அவர்கள் எல்லோரும் ஆண்கள்தாம். ஆனால் ஒவ்வொருவரையும் பார்க்கும் கோணம் வேறுபடுகிறது. அதுபோலவே ஒரு பெண்ணைத் தாயாக, தமக்கையாக, புதல்வியாக, அத்தையாக, சிற்றன்னையாக, தாரமாக வேறுபடுத்திக்காட்டுவது நம் பார்வைதான். எல்லோரும் பெண்கள்தாம். இருப்பினும் ஒவ்வொருவரையும் பார்க்கும் கோணம் வேறுபடுகிறது.

ஈன்றெடுத்த அன்னையைப் பார்ப்பது பாசப் பார்வை; சகோதர, சகோதரிகளைப் பார்ப்பது அன்புப்பார்வை; உற்றார் உறவினரைப் பார்ப்பது பந்தப் பார்வை; இரக்கப்பட்டு ஏழைகளைப் பார்ப்பது பரிவுப்பார்வை; ஆசையோடு தாரத்தைப் பார்ப்பது மோகப் பார்வை; தனக்குரிமையில்லா அந்நியப் பெண்ணைப் பார்ப்பது காமப் பார்வை; தகாத பார்வை என இரண்டுதான் உள்ளது. அதைப்புரிந்துகொண்டால் நம் பார்வைகளையே நன்மைகளாக மாற்றலாம். மனிதன் நேரடியாகப் பார்ப்பது ஒருவிதம். ஆனால் அவன் ஓரக்கண்ணால் சிலவற்றைப் பார்க்கிறான். குறிப்பாக, பார்க்கக்கூடாதவற்றைப் பார்க்கும் போது பிறர் தம்மைப் பார்த்துவிடக்கூடாது என்பதற்காக ஓரக்கண்ணால் பார்ப்பான். அல்லது பிறருக்குத் தெரியாமல் பார்ப்பான்.

இளவரசி டயானா திருமண வயதை அடைந்த பின்னும் இவளின் பார்வை குழந்தை போலவே இருந்ததால் அவரால் லட்சக்கணக்கான மக்களை பாசத்துடன் ஈர்க்க முடிந்தது. ஆண்களுக்கு சுரங்கபார்வை என்ற திறன் உள்ளது. ஒரு குறிப்பிட்ட இலக்கை நீண்ட தூரத்திற்கு அப்பால் இருந்தும் குறிபார்க்க இது உதவுகிறது. இருந்தபோதும், குறிப்பிட்ட வட்டத்திற்கு அப்பால் உள்ள பொருட்களை அவர்கள் பார்க்க சிரமப்படுவார்கள். உதாரணமாக அலமாரி, பிரிட்ஜ் போன்றவற்றில் உள்ள அறைகளில் அவர்கள் ஒரு பொருளைத் தேடுவது கடினமாக இருக்கும். பெண்களுக்கு இது எளிதாக இருக்கும்.

பெண்ணின் பார்வை அகலமானது என்பதால் யாரும் கண்டறிய முடியாதபடி, ஒரு ஆணைத் தலையிலிருந்து பாதம் வரை அவளால் எளிதாக அளந்து விட முடிகிறது. இதனாலே பெண்களால் எப்போதும் கவனமாகவும் விழிப்பு நிலையிலும் இருக்க முடிகிறது. ஆண் சிரமப்பட வேண்டியுள்ளது. ஆணிற்குக் குறுகிய பார்வை இருப்பதால் பெண்ணின் உடலில் மேலும் கீழும் அவனது பார்வை அலைவதை எளிதில் கண்டுபிடித்து விட முடியும். இதனால், குற்றம் சாட்டப்படும் போது, பெண்களை விட ஆண்கள் எளிதில் சிக்கி விடுகிறார்கள். ஒரு அறையின் குறுக்கே இருக்கும் ஒரு ஆணின் கவனத்தைக் கவர ஒரு பெண் அவனது பார்வையை 2 அல்லது 3 முறை சந்தித்து விட்டு வேறுபக்கம் அல்லது கீழே பார்ப்பாள். இந்த பார்வையே அவளது காதல் ஆர்வத்தை வெளிபடுத்த போதுமானதாக இருக்கிறது. வெஸ்டர்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மோனிகா முர் நடத்திய ஆய்வில், ஒரு பெண்ணின் முதல் பார்வையை புரிந்து கொள்ள முடியாத திறமையுடன் ஆண்கள் இருப்பதால், பெண்கள் சராசரி ஆணின் கவனத்தை ஈர்க்க 3 முறை பார்க்கிறார்கள். மெதுவாக புரிந்துகொள்ளும் ஆணின் கவனத்தை ஈர்க்க 4 முறையும், இன்னும் சிலரை 5 முறையும் பார்க்க வேண்டியுள்ளது என்று கண்டறிந்தார்.

புருவத்தைக் கீழிறக்கும்படி பார்ப்பது, மற்றவரை அடக்கவும் முரட்டுத் தனத்தை வெளிப்படுத்தவும் செய்யப்படுகிறது. அதே சமயம் புருவத்தை உயர்த்துவது, பணிவின் அறிகுறி. உயரமான புருவங்கள் மர்லின் மன்றோவிற்கு பணிவான தோற்றத்தைத் தந்தது. நடுப்புறமாக கீழ் திரும்பிய புருவங்கள் ஜான்கென்னடிக்கு இருந்ததால் எப்போதுமே அக்கறை உள்ளவர் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி, அவருக்கு மக்களிடையே அதிக செல்வாக்கை பெற்றுத்தந்தது.

உலகில் உள்ள மனிதர்கள் எல்லோரும் அடுத்தவரை எப்போதும்

பார்த்துக்கொண்டேயிருக்கிறார்கள். பார்வைகள்தான் மனிதர்களை இணைக்கும் பாலமாக இருக்கிறது. ஒரு மனிதனின் வெற்றியும் தோல்வியும் அவன் பார்க்கும் பார்வையில்தான் இருக்கிறது. மனிதர்கள் ஒவ்வொருவரும் அடுத்தவரைப் பார்க்கும் பார்வையில் பல வித்தியாசங்கள் இருக்கிறது. யாரும் ஒரே மாதிரி பார்ப்பதே இல்லை. ஒவ்வொருவரின் பார்வையும் தனித்துவமாக இருக்கும் அந்த பார்வை முறைதான் அவர்களை ரசிக்கக்கூடியவர்களாகவும், விரும்பக்கூடியவர்களாகவும் மாற்றுகிறது.

பார்வைகள் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒரு விதம். நாம் எப்படி இருக்கிறோமோ அப்படித்தான் அடுத்தவரைப் பார்த்துக் கணக்குப் போடுகிறோம். "பொல்லாரின் உள்ளத்தில் தீமையின் குரல் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அவர்களின் மனக்கண்களில் இறை அச்சம் இல்லை. ஒவ்வொருத்தரும் பார்க்கும் பார்வைகளிலே அவர்கள் எண்ணங்களை புரிந்துகொள்ள முடிகின்றது. அவரவர்கள் பார்வைக்கு தகுந்தாற்போல் அர்த்தங்கள் மாறுபடுகின்றன. கோபப் பார்வை, சந்தேகப் பார்வை, முரட்டுப் பார்வை, சந்தோஷப் பார்வை, ஆச்சரியப் பார்வை, காமப் பார்வை, திருட்டுப் பார்வை என நிறைய இனம் பிரிக்கலாம். ஆக கண்களினால் கோபம், சந்தோஷம், துக்கம், காமம், சந்தேகம் எல்லாவற்றையும் கண்களே பேசி முடிக்கின்றது. ஆனால், இறைவனின் கட்டளைகள் அடிக்கடி மறக்கடிக்கப்பட்டு அந்தப்பார்வை தெளிவற்ற பார்வையாக பார்ப்பதால் தனது வாழ்க்கையில் எத்தனை மாற்றங்களை பலர் சந்திக்க நேரிடுகின்றது.

நாசப்பார்வை, சுயநலப்பார்வை, கோபப்பார்வை, பொறாமைப்பார்வை, சூனியப்பார்வை, வஞ்சகப்பார்வை, இவற்றை தவிர்த்து அன்புப்பார்வை, நேசப்பார்வை, பாசப்பார்வை, நேர்மறைப்பார்வை, தொலைநோக்குப்பார்வை போன்ற பார்வைகளை அன்றாட வாழ்வில் பழக்கப்படுத்தி கொண்டால் நமக்கும் நல்லது, சமுதாயத்திற்கும் நல்லது.

– "ஈர்ப்புவிசை புவியில் மட்டுமில்லை
புன்னகையுடன் கூடிய பார்வையிலும்தான்"

SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

C. CHITRASEKAR, B.Sc., (M.D.)
Cell : 93645 65546

Office : **CS TEXTILE PROCESS**
NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : **www.cstextiles.in**
Email : **chitra@cstextiles.in**
Factory : **Kasipalayam, Tirupur**
Our Buyers : **1. FILA (UK)**
2. RELIANCE (INDIA)
3. ADIDAS (GERMANY)
4. LIFESTYLE (INDIA)

"QUALITY IS OUR LIFE"

குற்றம் குற்றமல்ல
General Exemptions

மேலையூர் ச. அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை.
செல் : 98413 73184

இந்திய தண்டனைச்சட்டம் போன்ற நம் நாட்டு சட்டங்களின்படி, குற்றமாகக் கருதப்படும் சில செயல்கள் சில சந்தர்ப்பங்களில் அல்லது சில நபர்களால் செய்யப்பட்டால் குற்றமாகக் கருதப்படமாட்டாது. அதைப்பற்றி இந்திய தண்டனைச் சட்டம் Indian Penal Code பகுதி IV ல் "பொது விலக்குகள்" என்ற தலைப்பில் பிரிவு 76 முதல் பிரிவு 106 வரை வருகின்றன. அவ்வாறு விலக்கு அளிக்கப்படுவதற்குக் காரணம் அந்த இனங்களில் அந்த செயலைச்செய்பவர்களுக்கு, குற்றம் செய்யும் நோக்கம் இல்லாததே இந்த கட்டுரையில் குறிப்பிடப்படும் பிரிவு எண்கள் இ.பி.கோ எனப்படும் இந்திய தண்டனைச்சட்டப்பிரிவுகளாகும்.

பொது விலக்கு வகைகள்

இத்தகைய பொது விலக்குகள் 7 வகைப்படும். அவை

1. தவறாகப்புரிந்து கொண்ட உண்மைகள்)பிரிவு 76, 79)
2. நீதித் துறைச்செயல்பாடுகள் (பிரிவு 77,78)
3. விபத்துக்கள் (பிரிவு 80)
4. குற்றவியல் நோக்கம் இல்லாமை (பிரிவு 81–86, 92–94)
5. ஒப்புதல் (பிரிவு 87–91)
6. முக்கியமற்ற செயல்கள் (பிரிவு 95)
7. தனியார் பாதுகாப்பு (பிரிவு 96– 106)

1. தவறாகப்புரிந்து கொண்டவை

காவல் துறை அதிகாரி ஒருவர் நீதிமன்ற உத்தரவுப்படி கிருஷ்ணன் என்ற நபரைக்கைது செய்யச்செல்கிறார், அந்த இடத்துக்குச்சென்று கிருஷ்ணன் யார் என விசாரிக்கும் போது யாரோ தவறாக ராமன் என்பவரைக்காட்டி அவர்தான் கிருஷ்ணன் என்று சொல்லி விடுகிறார்கள். அதை உண்மை என்று நம்பும் அதிகாரி கிருஷ்ணனுக் குப் பதிலாக ராமனைக் கைது செய்து விடுகிறார். அந்த நிலையில் அதிகாரி குற்றம் செய்ததாகக் கருத முடியாது. (பிரிவு 76)

"ஏ" என்பவருக்கும் "பி" என்பவருக்கும் கடும் சண்டை நடக்கிறது. அப்போது "ஏ" தன்னைக் காப்பாற்றிக் கொள்ள "பி" யை கடுமையாகத் தாக்க முயற்சிக்கிறார், அதைப்பார்க்கும் " சி" என்ற நபர் அவர் போலீஸ் அல்ல ஏ", "பி" யைக்கொல்ல முயற்சிக்கிறார் எனத் தவறாக எண்ணி "ஏ" யைக் காவல் துறையிடம் ஒப்படைப்பதற்காகப் பிடித்துக்கொண்டு போகிறார், சி செய்தது குற்றமாகாது (பிரிவு 79.)

2. நீதித் துறை செயல்பாடுகள்

ஒரு நீதிபதி, சட்டம் தமக்கு வழங்கியுள்ள அதிகாரத்தின்படி, நல்ல எண்ணத்துடன் தன் தொழில் ரீதியாக எவருக்கும் செய்யும் எந்த செயலும் குற்றமாகக் கருதப்படமாட்டாது (பிரிவு 77.)

ஒரு தீர்ப்பு அல்லது ஆணை ஒரு நீதிமன்றத்தால் வெளியிடப்பட்டிருக்கும்நிலையில், அந்த தீர்ப்பு அல்லது ஆணை அமுலில் இருக்கும் போது அது சம்பந்தமாகச் செய்யப்படும் எந்த விதமான செயலையும் குற்றமாகக் கருதமுடியாது (பிரிவு 78.)

3. விபத்துக்கள்

சுந்தரம் என்னும் மரம் வெட்டும் நபர் சட்ட விரோதமில்லாமல் சட்டத்துக்குட்பட்டு ஒரு மரத்தைத் தன் கோடாரியால் வெட்டிக் கொண்டிருக்கிறான். அப்போது எதிர்பாராத விதமாக , துரதிருஷ்ட வசமாய் இறந்தவருக்கு துன்பம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் இல்லாமல் அது விழுந்தால் அவர் பாதிக்கப்படுவார் என்ற யோசனையும் இல்லாத நிலையில் கோடாரியின் தலைப்பகுதி கழன்று அருகே நின்று கொண்டிருந்த ஒரு நபரின் தலையில் விழுந்து அதன் விளைவாக அவர் இறந்தும் விடுகிறார். அவ்வாறு கோடாரி தலைப்பகுதியில் விழுந்தது அவரது அஜாக்கிரதையால் அல்ல என்றால் அச்செயலில் அதாவது விபத்தில் அவர் குற்றம் செய்ததாகக்கருத முடியாது (பிரிவு 80.)

4. குற்றவியல் நோக்கம் இல்லாமை.

குற்றங்கள் செய்யப்படும் போது மற்றவர்களுக்கு பாதிப்பு அல்லது கஷ்டம் கொடுக்க வேண்டும் என்ற குற்ற நோக்கம் இல்லாமல், நல்லது செய்யும் நோக்கத்துடன் செய்யப்படும் குற்றங்கள் குற்றங்களாகக்கருதப்படாது.

உ–ம் ஒரு பெரும் தீ விபத்து நடந்து கொண்டிருக்கும் இடத்தில் இருக்கும் ராமன் என்ற நபர் அந்த தீ பக்கத்து இடத்துக்குப் பரவாமல் இருக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் அருகில் உள்ள ஓலைக் கொட்டகைகளை பிரித்துத்தள்ளுதல் அல்லது இடித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டாலும் அது குற்றமாகக்கருதப்படமாட்டாது. (பிரிவு 81.)

குழந்தைகளும் சிறுவர்களும்

குற்றமாகக் கருதப்படக்கூடிய செயலை 7 வயதுக்கு உடபட்ட ஒரு குழந்தை செய்தால் அது குற்றமாகக் கருதப்படமாட்டாது பிரிவு 82 அதே செயலை, தனது செயலால் விளையக்கூடிய தீமைகளைப் புரிந்து

கொள்ளக்கூடிய மனப்பக்குவம் இல்லாத, 7 வயது முதல் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் செய்தாலும் குற்றமாகக்கருதப்படமாட்டாது. (பிரிவு 83.)

மன நிலை சரியில்லாதவர்களும், குடி போதையில் உள்ளவர்களும்

தான் செய்யும் செயலின் விளைவுகளைப் புரிந்து கொள்ள இயலாத, புத்தி ஸ்வாதீனம் இல்லாத நிலையில் உள்ள நபர் செய்யும் குற்றம் குற்றமாகக் கருதப்படமாட்டது. (பிரிவு 84.)

அதே போல் தான் செய்வது சரியா தவறா சட்ட விரோதமானதா என்றெல்லாம் சிந்திக்க இயலாத நிலையில் குடிபோதையில் ஒருவர் செய்யும் குற்றம் குற்றமாககருதப்படாது. (பிரிவு 85.)

ஒருவனுடைய விருப்பத்துக்கு மாறாக அல்லது அவனுக்குத்தெரியாமல் அவன் போதையூட்டப்பட்டிருந்து அந்த நிலையில் அவன் செய்த செயல் குற்றமாகாது (பிரிவு 86)

மருத்துவ சிகிச்சையின் போது செய்தலும் மற்றும் மிரட்டலுக்குட்பட்டு செய்தலும்

நல்ல எண்ணத்துடன் ஒருவருக்கு நன்மை செய்யும் நோக்கத்தில் அவருடைய அனுமதியைக்கூடப் பெற இயலாத நிலையில்,அதனால் அவருக்கு பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு இருந்தாலும் செய்யப்பட்ட செயல் குற்றமாகாது.

உ–ம் செல்வம் என்பவர் ஒரு டாக்டர்.அவர் வீட்டுக்கு அருகில் நடந்த ஒரு விபத்தில் ஒரு குழந்தை பலத்த காயமுற்று விடுகிறது. அதற்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்தாக வேண்டிய நிலை. அறுவை சிகிச்சை நிபுணரான செல்வம் அதை உணர்ந்து ஒரு வேளை அந்த சிகிச்சையினால் குழந்தைக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்ற போதிலும் அதனுடைய பெற்றோரின் அனுமதியும் பெற இயலாத சூழலில் அறுவை சிகிச்சை செய்துவிடுகிறார். அந்த டாக்டர் எந்த குற்றமும் செய்தவராகமாட்டார். (பிரிவு 92)

சங்கர் என்ற மருத்துவர் தன்னிடம் வைத்தியம் செய்து கொள்ளும் நோயாளி அதிக நாட்கள் உயிர் வாழ மாட்டார் என்பதை அறிந்ததும், அதை அவரிடம் சொன்னால் அந்த அதிர்ச்சியே அவரது உயிரைப் பறிக்கக்கூடிய ஆபத்தை விளைவிக்கலாம் என்று தெரிந்தாலும் நோயாளியிடம் முன்னதாகவே சொன்னால் அவர் ஏதேனும் ஏற்பாடுகள் செய்யக்கூடும் என்ற நல்ல எண்ணத்தில் அவரிடம் கூறுகிறார். அந்த அதிர்ச்சியில் நோயாளி இறந்து விடுகிறார். டாக்டர் குற்றம் செய்தவராகக்கருத முடியாது. (பிரிவு 93)

சிவா என்ற நபரை கொள்ளைக்காரர்கள் தங்கள் பிடியில் வைத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட குற்றத்தைச் செய்யச்சொல்லி மிரட்டுகிறார்கள். அப்படிச்செய்யாவிட்டால் அவரை உடனே கொன்று விடுவதாகவும் மிரட்டுகிறார்கள். அந்த சூழ் நிலையில் சிவா, மரண தண்டனை தரக்கூடிய கொலைக்குற்றம் அல்லது தேசத்துக்கு எதிரான குற்றம் போன்றவை அல்லாத இதர குற்றங்கள் செய்தால் குற்றம் செய்தவராகக் கருதப்பட மாட்டார் (பிரிவு 94)

5. ஒப்புதல்

18 வயதுக்கு மேற்பட்ட ஒரு நபரின் முழு சம்மதத்துடன் மற்றொரு நபர், ஒரு செயலில் ஈடுபடும்போது, அச்செயலால் முதல் நபருக்கு பெரிய காயத்தையோ மரணத்தையோ கொடுக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லாமல் தன்னுடைய செயல் ,அவ்வாறு செய்யக்கூடும் என்பதையும் அறியாமல் செய்யும் செயலால் வரும் விளைவுகளுக்கு அவர் பொறுப்பாகமாட்டார்.

உ–ம் இராமன் மற்றும் கிருஷ்ணன் இரண்டு நபர்களும் மனதார ஒப்புக்கொண்டு கத்திச் சண்டை போட்டு விளையாடுகிறார்கள். அந்த விளையாட்டின் போது கிருஷ்ணன் இராமனைத் தாக்க வேண்டும் அல்லது கொல்ல வேண்டும் என்ற எண்ணமும் இல்லாமல் தன் செயலால் அவற்றுள் ஏதோ ஒன்று நிகழக்கூடும் என்பதையும் அறியாமல் இராமனுடன் கத்திச் சண்டை போடும் போது இராமனுக்கு ஏற்படும் துன்பங்களுக்கு கிருஷ்ணன் பொறுப்பாக மாட்டார் (பிரிவு 87)

துன்பப்படும் ஒருவருக்கு, உதவ வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன், அவரது அனுமதியுடன் ஒருவர் செய்யும் செயலால் அவருக்கு மரணம் ஏற்படும் என்று தெரிந்தும் செய்யும் செயலால் அவர் குற்றம் செய்தவராகமாட்டார்

உ–ம்' அதிக வலியால் அவதிப்படும் ஒரு நோயாளியின் முழு சம்மதத்துடன் ஒரு மருத்துவர் அவருக்கு அறுவை சிகிச்சை செய்கிறார், அதாவது தனது அறுவை சிகிச்சை அவரது உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடும் என்பது தெரிந்திருந்தும் அவருடைய தாங்க முடியாத வலியிலிருந்து அவரைக்காப்பாற்றும் நல்ல எண்ணத்துடன் அவரது சம்மதமும் பெற்று அந்த சிகிச்சை செய்தால் அதன் பின் விளைவுகளால் அவர் குற்றம் செய்தவராகக் கருதப்படமாட்டார். (பிரிவு 88)

புத்தி ஸ்வாதீனம் இல்லாத நபர் அல்லது நல்லது கெட்டது பகுத்தறிய இயலாத 12 வயதுக்குடபட்ட குழந்தையின் தந்தை அல்லது காப்பாளர் அனுமதி பெற்று அக்குழந்தைக்கு நல்லது செய்ய வேண்டும்

என்ற எண்ணத்துடன் செய்யும் செயல் குற்றமாகாது. அதே போல் ஒரு குழந்தையின் தந்தை, அக்குழந்தை கடும் வியாதியால் அவதிப்படும்போது, அதனுடைய அனுமதி இல்லாமல் அக்குழந்தையை அறுவை சிகிச்சைக்கு உள்ளாக்குகிறார், அந்த அறுவை சிகிச்சை அக்குழந்தையின் உயிருக்கு ஆபத்தாகவும் முடியலாம் என்று தெரிந்தும் அதனைக் காப்பற்றும் நோக்கத்தில் அவ்வாறு செய்வதால் அவர் குற்றம் புரிந்தவராக கருதப்படமாட்டார் (பிரிவு 89)

இந்த பகுதியில் கூறப்படும் ஒப்புதல் என்பது, அதனைக் கொடுத்த நபர் தனக்கு ஆபத்து நேரிடும் எனற அச்சத்திலோ அல்லது அந்த பொருள் பற்றித் தவறாகப் புரிந்து கொண்டு கொடுத்திருந்தாலோ சம்மதமாக எடுத்துக்கொள்ள முடியாது (பிரிவு 90)

ஒரு சில செயல்களினால் ஆபத்து நேர்ந்தாலும் நேராவிட்டாலும் சட்டப்படி அச்செயல்பாடுகள் குற்றமாகக் கருதப்படலாம். அத்தகைய குற்றச்செயல்களுக்கு பிரிவு 87,88,89 ல் கூறப்பட்டுள்ள விதி விலக்குகள் பொருந்தாது .

உ–ம் ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை இருந்தாலொழிய அப்பெண்ணுக்கு கருச்சிதைவு செய்வது சட்டப்படி குற்றமாகும் அதனால் தீங்கு ஏதும் ஏற்படாவிட்டாலும் அதற்கு அப்பெண்ணின் சம்மதம் பெற்றிருந்தாலும், அது குற்றமாகவே கருதப்படும் (பிரிவு 91)

6. முக்கியமற்ற செயல்

ஒருவருடைய செயலால் மற்றவருக்கு மிக மிகச் சிறிய தீங்கு நேரிட்டாலும் அல்லது நேரிட வாய்ப்பு இருந்தாலும் அச்செயலைக் குற்றமாகக் கருத முடியாது (பிரிவு 95)

7. தனியார் பாதுகாப்பு (பிரிவு 96- 106)

இந்தப்பகுதி பற்றி தற்காப்பு என்ற தலைப்பில் ஏற்கனவே விரிவாகக் கூறியுள்ளதால் இக்கட்டுரையில் அப்பகுதி இடம் பெற வில்லை.

(இந்திய தண்டனைச் சட்டத்திலிருந்து தொகுக்கப்பட்டது.)

வாழ்த்துகிறோம்

எழில்நகர் தெய்வத்திரு S. வேலாயுதம் பிள்ளை (சங்கத்தின் முன்னாள் தலைவர்) நலமுடன் திருமதி. பழனி அம்மாள் வேலாயுதம் இவர்களின் மகள் வழிப் பேரன் செல்வன் பா. ராஜவேலு, செல்வி உ. ஷாரா இவர்களின் திருமணம் 15.4.2022 அன்று மயிலாடுதுறை ஸ்ரீ விமலாம்பிகை திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தருமபுரம் ஆதினத்தில் அருங்காட்சியகம்

தமிழர்களின் பழமையை பறைசாற்றும்வகையில் மூன்றாம் நூற்றாண்டுகளை தொடங்கி பழமையான இசைக் கருவிகள், பல்லக்குகள், சிலைகள், மண்ணால் செய்யப்பட்ட நாதசுரம், உள்ளிட்ட பல பொருட்கள் இடம் பெற்றுள்ளன. 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பழமையான சைவ ஆதீன திருமடம் இன்றும் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என சிறப்பாக விளங்குகிறது.

பழமையை காத்து வரும் ஆதீனத்தில் பல நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த பொருட்கள் தற்போது காட்சிப்படுத்தப்படுகிறது. அருங்காட்சியகத்தில் முந்தைய ஆதீனங்கள் பயன்படுத்திய பொருட்கள், வெள்ளி தந்தப் பல்லக்குகள், தமிழர்கள் பல நூற்றாண்டுகளாக பயன்படுத்திய பொருள்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளது. 60க்கும் மேற்பட்ட பழமையான இன்னிசைக் கருவிகள், தற்போது வழக்கத்தில் இல்லாத சாரங்கி, பிடிவீணை உள்ளிட்டவை, மண்ணால் செய்யப்பட்ட நாதஸ்வரம், சுருதி இசைக்கருவி, பலவகை தேர் சிற்பங்கள், கலம்காரி வகை ஓவியங்கள், பல நூற்றாண்டுகள் பழமையான ஐம்பொன்னால் செய்யப்பட்ட சிலைகள், வெள்ளியினால் செய்யப்பட்ட குடங்கள் உள்ளிட்ட பல்வேறு வகை பயன்பாட்டு பொருட்கள் அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளது.

தமிழக கவர்னர் மாண்புமிகு வி.என். ரவி அவர்கள் இதனைத் திறந்து வைத்தார். அருங்காட்சியகத்தை விளக்கிக் கூறி, பழமையான இசைக் கருவிகளை தருமபுர ஆதீனம் 27ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வாசித்துக் காண்பித்தது மெய்சிலிர்க்க வைத்தது. பழமையான கருவிகளைக் கையாளும் வித்தகர் என உலகறியச் செய்தது.

தமிழர்களின் பண்டைய நாகரிகத்தை விளக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகம் மேலும் விரிவுபடுத்தப்படும் என்றும் மாணவ மாணவிகளுக்கு இது ஓர் அரிய பொக்கிஷமாக விளங்கும் என்றும் குருமகாசந்நிதானம் அவர்கள் கூறியது பழமையைப் பாதுகாக்கும் உணர்வையும், மண்ணின் கலாச்சாரத்தை மேம்படுத்தும் தன்மையையும், இன்றைய சமுதாயத்திற்கு பணியாற்றும் நல்லதொரு மனிதநேயத்தையும் குருமகா சன்னிதானமிடம் காண முடிகிறது. இது நமது பாக்கியமாகும்.

– பில்டெக் அருள்மொழி
8883468333

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/5 செல்வி **M. கிருத்திகா** விசாகம் தென்னைபிரிய பூர்வீகம் : இறையூர் விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்	12.11.85 5' - 5"	B.Com.,	Accounts	திரு. T. முத்துக்கிருஷ்ணன், A3/L, உதயலட்சுமி அபார்ட்மெண்ட்ஸ், ராகவேந்திரபுரம் 2வது தெரு, ஸ்ரீரங்கம், திருச்சி Cell : 96777 43586
B 2/5 செல்வி **கௌ. ரோஷிணி** ரோஹிணி அரசுடையார் பூர்வீகம் : தஞ்சாவூர் விருப்பம் : Bangalore or Bangaloreக்கு Transfer வசதி உள்ள சமபடிப்பு, நல்ல வேலையில் உள்ள வரன்	16.09.95 154 cm	B.E. (Computer Science) M.Sc., (Cyber Forensics and Information Security	Associate in MNC (Bangalore)	திரு. N.Gowrishankar 14/47, Valluvar Street, Jagannatha Nagar, Arumbakkam, Chennai - 600 106. Cell : 96772 33791 Phone : 044–2363 8284
B 3/5 செல்வி **சி.ரா.பிரியா** பூரம் பெண்ணாகட பூர்வீகம் : மயிலாடுதுறை விருப்பம் : நல்ல படித்த பணியில் உள்ள வரன்	13.04.95 151 cm	B.Tech (ECE)	Module Lead Mindtree, Bangalore Rs. 13 Lakhs/PA	திரு. வே. ராஜசேகரன், 19A, Type 3 Qtrs. Block 9, Neyveli - 607 801. Cell : 94862 82512, 94897 77523
B 4/5 செல்வி **Dr. S. சத்திய பிரியா** கேட்டை 3ம் பாதம் களப்பாள பூர்வீகம் : செந்துறை	21.12.95 160 cm	B.D.S.,	Pvt. Clinic, Trichy	திரு. M. சச்சிதாநந்தம், மேலரத வீதி, நெய்வனம் தெற்கு, செந்துறை (PO), அரியலூர் (DT) – 621 714. Cell : 99948 69441 (W), 94864 81712
B 5/5 செல்வி **இ. அனிதா மகாலட்சுமி** ரேவதி கொங்கராய பூர்வீகம் : கொல்லாபுரம் விருப்பம் : நன்கு படித்த அமெரிக்காவில் பன்னாட்டு / நல்ல நிறுவனத்தில் பணியில் உள்ள வரன்.	12.09.95 155 cm	B.E., CSE.,	Software Development Engineer, US Amazon (America) Seattle	திரு. V. Inbasekaran, No. 115, AJ Block, First Street, Anna Nagar, Chennai - 600 040. Phone : 044 – 26269471 Cell : 94442 11942, 63826 62451
B 6/5 செல்வி **மு. திவ்யபிரியா** கேட்டை 2ம் பாதம் வஞ்சினமுட பூர்வீகம் : செந்துறை – அரியலூர் (Dt.) விருப்பம் : டிகிரி முடித்த நல்ல பணியில் உள்ள வரன்	02.06.96 5' - 4"	B.A. (English)		திரு. ச. முருகேசன் பிள்ளை, 1/53, நடுத் தெரு, வஞ்சினபுரம் (PO), செந்துறை (Tk.) அரியலூர் (Dt.) - 621 714. Cell : 96263 97559, 85319 86109
B 7/5 செல்வி **C. சக்தி அபிராமி** பூரம் வேளா பூர்வீகம் : சிதம்பரம்	28.02.83 5' - 3"	MCA.,		திரு. N. சந்திரசேகரன், 32, வ.உ.சி. தெரு, சிதம்பரம் – 608 001. Cell : 94867 74883
B 8/5 செல்வி **M. அஞ்சனா** விசாகம் செலுத்திரை பூர்வீகம் : அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி)	15.10.96 150 cm	B.E., (Electronics & Tele-Communication)	Accenture, Mumbai Rs. 5 Lakhs/PA	திரு. N. மாணிக்கவாசகம், 14/31, மேலப்பாளையம் தெற்கு ரத வீதி, அம்பாசமுத்திரம். திருநெல்வேலி (Dt.) - 627 401. Cell : 94242 69714, 95846 00244

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 9/5 செல்வி **S. சண்முகபிரியா** **(எ) கிருத்திகா** திருவோணம் குலமுட பூர்வீகம் : கும்பணோம் விருப்பம் : வேலையில் உள்ள வரன் (M.E., or B.E.)	23.01.93 167 cm	B.E. (ECE)		திரு. R. செல்வராஜ், 104/22, பேட்டை நாணயக்காரத் தெரு, கும்பகோணம் – 612 001. Cell : 94423 93485, 94863 24455
B 10/5 செல்வி **V. பத்மாவதி** விசாகம் 4ம் பாதம் சாத்துகுட பூர்வீகம் : துறிஞ்சிக்கொல்லை விருப்பம் : வேலையில் உள்ள வரன்	11.04.96 5' - 6"	B.Sc., (Nursing)	Nursing	திரு. N. வேல்முருகன், 33, இராஜ அய்யர் தோட்டம், குயவர்பாளையம், புதுச்சேரி – 13. Cell : 93854 18679, 97918 16358
B 11/5 செல்வி **S. சூர்யா** மிருகசீரிடம் 1ம் பாதம் தென்னபிரிய பூர்வீகம் : தலைஞாயிறு விருப்பம் : நன்கு படித்து, சென்னையில் நல்ல வேலையில் உள்ள வரன் மட்டும்.	05.04.95 5' - 3"	B.Sc. (CS),	TCS Rs. 4 Lakhs/PA	திரு. K. சுப்ரமணியன், 12/68, கண்ணதாசன் சாலை, முகப்பேர் கிழக்கு, சென்னை – 37. Cell : 99404 87584, 99401 68835
B 12/5 செல்வி **ச. கற்பகம்** சுவாதி செம்பதரிய பூர்வீகம் : சிதம்பரம்	29.03.94 162 cm	B.E. (ECE)	HCL சென்னை Rs. 30,000/PM	திரு. P. கலியபெருமாள், 40, மேயர் சண்முகம் நகர், பரமேஸ்வரநல்லூர், சிதம்பரம் (PO). Cell : 93645 09598 81441 88405 (W)
B 13/5 செல்வி **ம. சியாமளா சரஸ்வதி** பூராடம் குலத்திரைய பூர்வீகம் : துறையூர் (குடவாசல்) விருப்பம் : வேலையில் உள்ள பண்புள்ள மணமகன் தேவை.	01.04.97 157 cm	M.Sc., B.Ed.,		திரு. ந. கண்ணன், 137, மெயின் ரோடு, திருமண மண்டபம் எதிர்புறம், திருக்கண்ணமங்கை (PO), திருவாரூர் (DT), Cell : 70102 64364, 99423 57090
B 14/5 செல்வி **P. பிரியதர்ஷினி** ஆயில்யம் 4–ம் பாதம் சுராந்துட பூர்வீகம் : கண்ணங்குடி விருப்பம் : படித்து நல்ல வேலையில் உள்ள வரன்.	29.07.95 5' - 4"	M.C.A.	Banking Professional Chennai	திரு. M. புகழேந்தி, 34, ஜீவன் தாரூன் அபார்ட்மெண்ட், ஸ்ரீராம் காலனி, கிழக்குத் தாம்பரம், சென்னை – 600 047. Cell : 93676 14271



பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/5 செல்வன் **சே. ராம்குமார்** சுவாதி காவனுட பூர்வீகம் : கீழ்புளியங்குடி விருப்பம் : பணியில் உள்ள வரன்	19.06.94 5' - 7"	B.E., M.B.A.,	City Union Bank Kumbakonam	திரு. R. சேகர் B-4, சிப்பாய் தெரு, வட்டம் – 2, நெய்வேலி – 607 801. Cell : 94432 81323, 94427 46949
G 2/5 செல்வன் **R. சிவராமன்** ஹஸ்தம் கொங்குராய பூர்வீகம் : செந்துறை	17.07.91 183 cm	B.Tech - Marine Engg.	Fourth Engineer, (Working on Board Ship)	திரு. R. Sivaraman, C1, Arasu Nagar Colony, Ariyalur Cement Works, Ariyalur - 621 729. Cell : 99520 56030, 95669 47917
G 3/5 செல்வன் **K. வேல்முருகன்** பூரட்டாதி காங்கேயன் பூர்வீகம் : நாகமங்கலம் விருப்பம் : குடும்பப்பாங்கான பெண்.	08.04.94		விருத்தாசலம் ஜெயின் ஜூவல்லரி	திரு. G. கொளஞ்சிநாதன், கீழத் தெரு, நாகமங்கலம், அம்பாப்பூர் வழி, அரியலூர் TK & Dt. PIN - 621 701. Cell : 97887 62012
G 4/5 செல்வன் **கே. மணிவேல்** கேட்டை முதுனுட பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்)	15.02.93 6' - 00"	B.E. (EEE),	வணிகவரி துறை	திரு. T. கேசவன், 5/234-2, புதிய அம்பேத்கர் நகர், ஜாகிர் ரெட்டிபட்டி, சேலம் – 636 302. Cell : 94422 59692
G 5/5 செல்வன் **C. யோகேஷ்வரன்** பரணி வேளா பூர்வீகம் : சிதம்பரம்	03.07.75 5' - 9"	M.Com.,	Auditor	திரு. N. சந்திரசேகரன், 32, வ.உ.சி. தெரு, சிதம்பரம் – 608 001. Cell : 94867 74883
G 6/5 செல்வன் **B. பிரதீப்** பரணி வில்வராய பூர்வீகம் : பூம்புகார் விருப்பம் : சம பணியில் உள்ள பொருத்தமான வரன்.	21.07.95 184 cm	B.E. (ECE)	Technology Lead, Infosys Ltd., Chennai Rs. 14 Lakhs/PA	திரு. S. பாலசுப்ரமணியன், 3, வெங்கடேஸ்வரா நகர், தென்பாதி, சீர்காழி – 609 111. Cell : 94880 04523, 70109 73770
G 7/5 செல்வன் **ரா. அரவிந்தராஜ்** ஆயில்யம் 4ம் பாதம் பருவுட பூர்வீகம் : அங்கராயநல்லூர் (ஜெயங்கொண்டம்) விருப்பம் : படித்த குடும்பபாங்கான பண்புள்ள வரன்.	05.12.93 5' - 7"	B.E, MBA.,	Area Manager, K12 Techno Service, Pvt. Ltd., Banaglore Rs. 7.20 Lakhs/PA	திரு. R. ராஜசேகரன், 52B, சன்னதி தெரு, ஜெயங்கொண்டம், அரியலூர் Dt. Cell : 95006 08194
G 8/5 செல்வன் **பிரவீன்** திருவாதிரை 4ம் பாதம் சேவுட பூர்வீகம் : நெடுவாசல் (மயிலாடுதுறை) விருப்பம் : சம படிப்பு, வேலையில் உள்ள / இல்லாத நல்ல குணமுள்ள பெண் தேவை.	25.10.94 5' - 7"	B.E. (EEE)	Accenture Chennai Sr. Software Test Engg. Rs. 12 Lakhs/PA	திருமதி. எ. ராணி, 31A, CBOA காலனி, 3வது தெரு, சித்தாலப்பாக்கம், சென்னை – 600 126. Cell : 99406 81230 99413 69510

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/5 செல்வன் **பிரவீன்குமார்** பூசம் தூதுகுட பூர்வீகம் : கும்கோணம் விருப்பம் : குடும்பத்திற்கு ஏற்ற பெண்.	29.05.90 5' - 8"	B.E., MBA.	Business, சாமு எலக்டிரிக்கல்ஸ் கும்கோணம்.	திரு. S. செல்வராஜ், 7, கம்பட்ட விஸ்வநாதர் வடக்கு வீதி, கும்பகோணம், Cell : 98432 22962, 88382 77343
G 10/5 செல்வன் **G. சுந்தரேசன்** மிருசீரிடம் 2ம் பாதம் வேளா பூர்வீகம் : கொண்டத்தூர் விருப்பம் : நல்ல குணமுள்ள வரன்.	03.05.95 160 cm	B.E. (Mech)	Business விநாயகம் ஸ்டோர்ஸ் ஸ்டேஷனரி, ஜெராக்ஸ், கேம் சென்டர், மொபைல் சர்வீஸ் Rs. 20000/PM	திரு. P.G. ராமமூர்த்தி, ராணி மெடிக்கல்ஸ், 152, கடை வீதி, பெண்ணாடம் – 606 106. கடலூர் (DT) Cell : 99761 77910, 91596 54000
G 11/5 செல்வன் **S. பரணீதரன்** பரணி வேலுடையான் பூர்வீகம் : விருத்தாசலம் விருப்பம் : படித்த, வேலையில் வரன்.	29.04.95 178 cm	B.Tech.,	Cognizant, Chennai Rs. 10 Lakhs /PA	திரு. V. சிவக்குமார், Plot No. 50, வெண்பா அவென்யூ, 2வது தெரு, சித்தாலப்பாக்கம், சென்னை – 600 126. Cell : 94445 08005, 94445 08001 Phone : 044 – 22770471
G 12/5 செல்வன் **K. முத்துகுமரன்** திருவோணம் வங்காரமுடையான் பூர்வீகம் : கோடாலிகருப்பூர்	17.10.91 5.6'	B.E. (ECE),	தனியார் நிறுவனம் Rs. 25000/PM	திரு. S. அகோரமூர்த்தி, B-39, வசந்தம் நகர், கன்னடபாளையம், மேற்கு தாம்பரம், சென்னை – 600 045. Cell : 95008 93214
G 13/5 செல்வன் **க. ஜீவரத்தினம்** திருவோணம் முள்ளுட பூர்வீகம் : நாட்டார்மங்கலம் விருப்பம் : பணியில் உள்ள வரன்.	12.03.91 170cm	B.E. (ECE)	Robert Bosch Software Engineer, Rs. 12 Lakhs/PA	திரு. P. கலியபெருமாள், 40, மேயர் சண்முகம் நகர், பரமேஸ்வரநல்லூர், சிதம்பரம் (PO). Cell : 93645 09598 81441 88405 (W).
G 14/5 செல்வன் **A. சிவகுருநாதன்** கேட்டை தூதுகுடையான் பூர்வீகம் : கும்பகோணம்	15.02.93 185 cm	B.E. (Mech)	Senior Executive UNO MINDA (Minda Industries Ltd.) Hosur	திரு. M. அசோக்குமார், 26, நாணயக்காரத் தெரு, கும்பகோணம் – 612 001. Cell : 94433 03568, 99422 28192
G 15/5 செல்வன் **S. சாய்சைலேஷ்** ரேவதி தனவாருட பூர்வீகம் : ஆழ்வார்குறிச்சி (தென்காசி மாவட்டம்) விருப்பம் : சென்னையில் பணிபுரியும் / பணி செய்ய விருப்பமுள்ள பொருத்தமான வரன்.	30.04.92 5' - 7"	B.E. (Mech)	Engineer Ms. Vortex Customer, Solutions India (P) Ltd., Chennai Rs. 40000/PM	திரு. S. சுந்தரம், S2, ARCA Camellia Apt., 5th Cross Street, Sri Ambal Nagar, Pallaikaranai, Chennai - 600 100. Cell : 90034 31854 (W) 94434 28803 (W)
G 16/5 செல்வன் **பா. வெற்றிவேல்** உத்ராடம் வேளா பூர்வீகம் : சத்தியவாடி	19.11.93 172 cm	B.E. (ஆட்டோ மொபைல் இன்ஜினி -யரிங்)	Maintenance Engineer, CREW Pvt. Ltd., NCTPS - I Rs. 30,000/PM	திரு. வே. பாலசுப்பிரமணியன், 3/11, பிள்ளையார் கோவில் தெரு, சத்தியவாடி (PO), விருத்தாசலம் (Tk). - 606 110. Cell : 93646 27845, 95976 52444 E-mail : vetrivelrj@gmail.com

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 17/5 செல்வன் **G. விக்னேஷ்வரன்** ரேவதி தனபாலுட பூர்வீகம் : விருப்பம் : சமபடிப்பு, பணியிலுள்ள வரன்.	04.06.94 175 cm	B.E. (Mech) Engg. M.E. (INDL) Engg.	Assembly Dept. Manager, HUF Group, Tennessee, USA	திரு. S. கணேசன், No. 12/882, இராமசாமி சாலை, கே.கே. நகர் (மேற்கு), சென்னை – 600 078. Cell : 95001 33229
G 18/5 செல்வன் **R.S. ரோஹித்ராஜ்** ரோஹிணி தென்னம்பிரிய பூர்வீகம் : அரியலூர் விருப்பம் : நல்ல குணமுள்ள, பணியில் உள்ள வரன்.	16.09.95 174 cm	B.E., MBA., (NIT திருச்சி)	Business Analyst, TCS, Chennai Rs. 7,00,000/PA	திரு. A.R. சரவணன், 158, இரயில்வே காலனி, செங்கல்பட்டு – 603 001. Cell : 90031 61219, 94438 38475
G 19/5 செல்வன்**S. வேலாயுதம்** விசாகம் Annaludai	07.01.94 168 cm	B.E., (CS)	Software Engineer, (IT), Infosys, Chennai Rs. 6.5 Lakhs/PA	திரு. M. சேதுராமலிங்கம், Plot No. 12, Door No. 66/1, ஜெயம் தெரு, அழகப்பன் நகர், மதுரை – 625 003 Cell : 99947 56147 / 99946 53146
G 20/5 செல்வன்**V. குணசீலன்** உத்திரம் செம்புதரிய பூர்வீகம் : துணி சிரமேடு– சிதம்பரம்	06.01.91 170 cm	B.Sc., (CS) BBA, MBA.,	Asst. Manager, Equitas Bank, Cuddalore Rs. 5 Lakhs/PA	திரு. P. வாகீசன், 2, ராம் நகர் விரிவு, கோண்டூர், கடலூர் Cell : 92458 56330, 96770 64042
G 21/5 செல்வன் **R. சரத்குமார்** உத்திரட்டாதி சாத்துக்குட பூர்வீகம் : கழனிவாசல் விருப்பம் : நல்ல குணமுள்ள, பணியில் உள்ள வரன்.	11.09.95 6'	B.E., (Civil)	TCS, System Engineer, Rs. 5 Lakhs/PA	திரு. M. இராதாகிருஷ்ணன், 276, 3வது குறுக்குத் தெரு, ஜோதி நகர், சேந்தங்குடி, மயிலாடுதுறை – 609 001. Cell : 94433 54061
G 22/5 செல்வன் **A. தினேஷ்** சதயம் 2ம் பாதம் வில்வராய பூர்வீகம் : கழுதூர் விருப்பம் : சமபடிப்பு, வேலையில் உள்ள வரன்.	15.11.91	B.E., (Instrumentation)	Yokogawa (India) Ltd., Bangalore Project at Mumbai Rs. 8 Lakhs/PA	திரு. S. ஆனந்தகிருஷ்ணன், கழுதூர் & PO, திட்டக்குடி Tk. கடலூர் DT. – 604 304. Cell : 76395 81027 / 98400 28815
G23/5 செல்வன் **ஆ. கார்த்திகேயன்** மூலம் 3ம் பாதம் களப்பாள பூர்வீகம் : பெண்ணாடம்	30.10.92 183 cm	B.E. (Mech)	Mechanical Engineer at SECOIII (UAE) Rs. 12 Lakhs/PA	திரு. சபா ஆறுமுகம் பிள்ளை, 69, அக்ரஹார தெரு, பெண்ணாடம் – 606 105. திட்டகுடி TK, Cell : 98944 88227 / 77081 05999

மணமகள் தேவை

பெயர் செல்வன் **பா. வெங்கடேஷ்வரன்**
படிப்பு B.Tech (IT)
வேலை TCS, Bangalore
Rs. 12 Lakhs / PA
பிறந்த தேதி 27.06.1993
உயரம் 5' - 8"
நட்சத்திரம் அஸ்தம்
கோத்திரம் பராங்குச
பூர்வீகம் கடலூர்
தகப்பனார் **ப. பார்த்தசாரதி,** Retd. ABT.,
தாயார் **பா. சந்திரிகா**
முகவரி 21, டிவைன் ரெசிடென்சி,
சேரன் மாநகர்,
கோயமுத்தூர் – **641 035.**
Cell : 88702 53215, 80569 47713
விருப்பம் வேலையில் உள்ள பெண் தேவை
குறிப்பு லக்னத்திற்கு **1, 2, 4, 7, 8, 12**ல்
செவ்வாய் உள்ள ஜாதகம்

பெயர் செல்வன் **E. அஷ்வின்**
படிப்பு B.E., MBA.,
PG Diploma in Supply Chain Management
வேலை Supply Chain Co-ordinator and Marketing
Arjomandi & Sons Group of Companies
Dubai (UAE)
Rs. 12 Lakhs / PA with Family Accommodation
பிறந்த தேதி 25.05.88
உயரம் 173 cm
நட்சத்திரம் உத்திரம்
கோத்திரம் அரியலுட
பூர்வீகம் சிதம்பரம்
தகப்பனார் **Prof. Dr. R. இளங்கோவன்**
தாயார் **R. சுமதி,** B.A. PGDY., (சிதம்பரம்)
முகவரி C 1/2, Sekar Nagar Main Road,
Sekar Nagar, New Perungalathur,
Chennai - 600 063.
Cell : 95001 90301, 73582 81920
விருப்பம் படித்த, துபாய்க்கு செல்ல விருப்பம் உள்ள பெண்.

மணமகள் தேவை

பெயர் செல்வன் **M. RAJASEKARAN**

படிப்பு B.E., M.S. (Canada)

வேலை ONE COMPANY INC., Canada

Rs. 40 Lakhs / PA

பிறந்த தேதி 25.04.1996

உயரம் 182 cm

நட்சத்திரம் Poosam

கோத்திரம் Veluda

பூர்வீகம் Papanasam

தகப்பனார் **R. MANIVANNAN,** B.Sc.,

தாயார் **M. KAMALA** (Thiruvarur)

முகவரி 5/13, Maruthi Nagar,

Mayiladuthurai

Cell : 94432 15015

பெயர் செல்வன் **Dr. S. மகேஸ்வரன்**

படிப்பு பயோடெக்னாலஜி, Ph.D.,

வேலை Scientist - Bharat Biotech, Hyderabad

Rs. 70,000/PM

பிறந்த தேதி 01.10.1988

உயரம் 6'

நட்சத்திரம் மிருகசீரிஷம்

கோத்திரம் சாத்துக்குட

பூர்வீகம் நெடுங்குளம் (திருவாரூர் மாவட்டம்)

தகப்பனார் **A. சிவக்குமார்,** தனியார் கம்பெனி அக்கௌடண்ட் & விவசாயம்

தாயார் **சாந்தி சிவக்குமார்** (சிதம்பரம்–வையூர்)

முகவரி 35, குமரன் நகர், இரண்டாவது குறுக்குத் தெரு,

இலாஸ்பேட்டை, புதுச்சேரி – **605 008.**

Cell : 98653 87408

E-mail : santhipuppu@gmail.com

மணமகள் தேவை

பெயர் செல்வன் **R. வெங்கடேஷ்**
படிப்பு B.Com., CA
வேலை Tattva Health Care Pvt. Ltd.,
Assistant Manager Accounts
Rs. 7,00,000/PA
பிறந்த தேதி 02.12.1988
உயரம் 175 cm
நட்சத்திரம் உத்திரம் 1ம் பாதம்
கோத்திரம் விளந்துட
பூர்வீகம் கீழ்நத்தம் – சிதம்பரம்
தகப்பனார் **S. ராமசாமி** (Late)
தாயார் **R. கோமதி** (இருசாலக்குப்பம் – விருத்தாசலம்)
முகவரி 50/66, வடிவேலு மெயின் தெரு,
பெரம்பூர், சென்னை – **600 011.**
Cell : 99418 92934
97911 70037 (Whatsapp)
E-mail : gomathisai1706@gmail.com

பெயர் செல்வன் **செ. சிவா அரவிந்**
படிப்பு B.E. (CS), M.B.A.,
வேலை QA Engineer,
Servimos Technologies Pvt. Ltd.,, Chennai
Rs. 7.8 Lakhs/PA
பிறந்த தேதி 23.10.1992
உயரம் 167 cm
நட்சத்திரம் Uthiram
கோத்திரம் Shemanguda
பூர்வீகம் Mayiladuthurai
தகப்பனார் **M. Selvaraj,** Retired Tamilnadu Minerals Ltd., Govt. of Tamil Nadu
தாயார் Heavenly Aboard (Melaiyur)
முகவரி 169A, Sundar Nagar,
Poonamallee (Near Keerthi Garden)
Chennai - 600 056.
Cell : **95971 17982, 94441 10479, 94446 19936**
விருப்பம் Looking for amicable Bride.

பெயர் செல்வன் **V. அருண்குமார்**
படிப்பு B.E., M.B.A.,
வேலை Popular Mega Motors Pvt. Ltd.,
Ashok Nagar, Chennai
Rs. 4,20,000 / PA
பிறந்த தேதி 21.01.1994
உயரம் 164 cm
நட்சத்திரம் பரணி
கோத்திரம் சேவுட
பூர்வீகம் நெடுவாசல், தரங்கம்பாடி தாலுக்கா
தகப்பனார் **P. மோகன் (எ) வரதராஜன்**
Business & விவசாயம்
தாயார் **V. அம்பிகா**
(குத்தாலம், மயிலாடுதுறை மாவட்டம்)
முகவரி 11, கார்காத்தார் தெரு,
நெடுங்காடு – **609 603,**
காரைக்கால் மாவட்டம்,
புதுச்சேரி மாநிலம்
Cell : **94430 58594 / 63836 42636**

மணமகள் தேவை

பெயர் செல்வன் **கா. வருண் நேரு**
படிப்பு B.Tech (IT)
வேலை Specialist - Software Engineering
L & T Infotech, Chennai
Rs. 12 Lakhs / PA

பிறந்த தேதி 22.11.1986
உயரம் 166 cm
நட்சத்திரம் பூசம்
கோத்திரம் எரவுட
பூர்வீகம் இறையூர் (பெண்ணாடம்)
தகப்பனார் **மு. கார்த்திகேயன்**
தாயார் **கா. தனலட்சுமி**
(செந்துறை)
முகவரி 174/2, கொத்தட்டை ரோடு,
இறையூர் – **606 111.**
கடலூர் மாவட்டம்
Cell : 99419 38426 / 91763 27234
E-mail : dhanamkarthi76@gmail.com

பெயர் செல்வன் **G. MANOJ**
படிப்பு B.E. (ECE)
வேலை Phoenix Infraa,
Chennai

பிறந்த தேதி 28.08.1992
உயரம் 166 cm
நட்சத்திரம் Magam
கோத்திரம் Karuda
பூர்வீகம் Mayiladuthurai
தகப்பனார் **G. GOVINDARAJU,**
Rtd.ONGC CE (P)
தாயார் **G. SUGANTHI**
(Kanganamputhur)
முகவரி 44, Vishupriya Avenue 1st Street,
Maraimalai Nagar,
Chennai
Cell : 94425 00719

பெயர் செல்வன் **ர. ஸ்ரீராம்**
படிப்பு B.E. (Mechanical Engg)
வேலை JINECH, Chennai
Rs. 30,000 / PM

பிறந்த தேதி 21.06.1994
உயரம் 180 cm
நட்சத்திரம் அனுஷம்
கோத்திரம் குமாருட
பூர்வீகம் சீர்காழி
தகப்பனார் **S. ரவி,** Transport Division,
Annamalai University, Chidambaram
தாயார் **R. புவனேஸ்வரி**
(திருவாரூர்)
முகவரி No. 2, ராஜகோபால் மோகன் நகர்,
சிதம்பரம் – **608 001.**
கடலூர் மாவட்டம்
Cell : 99657 27187
விருப்பம் பணியில் உள்ள அல்லது நன்கு படித்த வரன்.

பெயர் செல்வன் **K. சண்முகவாசன் (எ) வினோத்**
படிப்பு DOA, DTP, BBA.,
வேலை Photo, Video Studio
Rs. 3,60,000 / PA

பிறந்த தேதி 16.03.1987
உயரம் 180 cm
நட்சத்திரம் அஸ்தம்
கோத்திரம் பாலுட
பூர்வீகம் தீபாமங்களம்,
நன்னிலம் தாலுக்கா
தகப்பனார் **G. கீர்த்திவாசன்**
முகவரி No. 43, கோசி மணி நகர்,
மெயின் ரோடு,
மேல அம்மாசத்திரம்,
கும்பகோணம் – **612 103.**
Cell : 94896 56270

மணமகள் தேவை

பெயர் செல்வன் **G.S. கோவிந்தராஜ்**
படிப்பு B.E. (CSE)
வேலை BATA மொத்த வியாபாரம் (தமிழ்நாடு முழுவதும்)
பிறந்த தேதி 17.11.1992
உயரம் 167 cm
நட்சத்திரம் மகம்
கோத்திரம் கொழுமுடை
பூர்வீகம் தஞ்சாவூர்
தகப்பனார் **S.G. சபாபதி**
தாயார் **S. ஞானாம்பிகை** (மணல்மேடு)
முகவரி 43, வாணக்காரத் தெரு, M. சாவடி, தஞ்சாவூர் – 613 001.
Cell : 94444 55582, 94424 46022
E-mail : batawholesaler@gmail.com
விருப்பம் படித்த குணமுள்ள பெண்.

பெயர் செல்வன் **S.K. பிரகதீஷ்**
படிப்பு B.E. (Aero)
வேலை விமானி (Pilot) North Star Air Lines (Canada)
பிறந்த தேதி 11.11.1993
உயரம் 180 cm
நட்சத்திரம் ஹஸ்தம்
கோத்திரம் எரவுட
பூர்வீகம் முளப்பாக்கம், மயிலாடுதுறை
தகப்பனார் **S. கிருஷ்ணகுமார்,** B.E., MBA., உதவி பொறியாளர் (வே.பொ) ஓய்வு
தாயார் **S. தனலெட்சுமி,** M.A., B.Ed., ஊ.ஒ.தொ.பள்ளி, தலைமையாசிரியர் (திருவிடைக்கழி)
முகவரி 309, வலம்புரி நகர், 2வது தெரு, கிழக்கு பூம்புகார் சாலை, மயிலாடுதுறை – 609 001.
Cell : 94436 75949
விருப்பம் B.E. மற்றும் அயல்நாடு செல்ல விருப்பம் உள்ள வரன்.

பெயர் செல்வன் **M. சத்தியகுமார்**
படிப்பு B.Tech.,
வேலை Koyo Engineering (S.E. Asia) Pvt. Ltd., சிங்கப்பூர் Rs. 2,00,000 / PM
பிறந்த தேதி 15.02.1992
நட்சத்திரம் புனர்பூசம்
கோத்திரம் அரங்குட
தகப்பனார் **S. மதியழகன்**
தாயார் **M. ஷிலாராணி**
முகவரி தெற்குத் தெரு, திருப்புன்கூர் – 609 112. சீர்காழி – Tk. மயிலாடுதுறை–Dt.
Cell : 80982 50145, 98403 03591 (W)

பெயர் செல்வன் **K. கார்த்திக்**
படிப்பு D.M.E.,
வேலை உரிமையாளர், இமாச்சல் கூல்டெக்கரேட்டர், மயிலாடுதுறை Rs. 5 இலட்சம் (வருடம்)
பிறந்த தேதி 21.08.1992
உயரம் 5' - 7"
நட்சத்திரம் கார்த்திகை (4–ம் பாதம்)
கோத்திரம் வானதரிய
பூர்வீகம் வங்குடி, மீன்சுருட்டி வழி
தகப்பனார் **V.P. கனகசபை**
தாயார் **K. பழனி வளர்மதி** (கரைகண்டம்)
முகவரி நெ. 11, திருவள்ளுவர் நகர், மயிலாடுதுறை – 609 001.
Cell : 94427 05793
விருப்பம் குடும்பத்திற்கு ஏற்ற வரன்.

மணமகன் தேவை

பெயர் செல்வி **A. ABINAYA**
படிப்பு B.Tech (IT), MBA (HR & Finance)
வேலை Tentacle Technologies, Chennai
(HR IT Recuriter)
பிறந்த தேதி 04.04.1993
நட்சத்திரம் Magam
கோத்திரம் Vizhuppathariya
பூர்வீகம் Chidambaram, Cuddalore Dist.
தகப்பனார் **S. Asokan,** B.E.,
முகவரி Flat No. B1-E,
BBCL Navarathna Apartment,
No. 18, Tirupathi Kodai Road,
MGR Puram,
Ayyapakkam Main Road,
Ambattur,
Chennai - 600 058.
Cell : +91 95000 16073 (Whatsapp)
விருப்பம் Well educated and working in India/Abroad

பெயர் செல்வி **Dr. S. சிவயோகிதா**
படிப்பு M.B.B.S.,
வேலை அரசு மருத்துவ அலுவலர்
அரியலூர்
பிறந்த தேதி 09.04.1994
உயரம் 160 cm
நட்சத்திரம் உத்திரட்டாதி
கோத்திரம் பருவுட
பூர்வீகம் அங்கராயநல்லூர்
தகப்பனார் **R. சுரேஷ்குமார்,**
வழக்கறிஞர், ஜெயங்கொண்டம்
தாயார் **S. அருணா** (இல்லத்தரசி)
முகவரி 52, சன்னதி தெரு,
ஜெயங்கொண்டம் – **621 802.**
உடையார்பாளையம் தாலுக்கா
அரியலூர் மாவட்டம்
Cell : 98424 50472

பெயர் செல்வி **மோ. அபிநயா**
படிப்பு B.E. (EEE)
வேலை Production Editor
Sinjore Technologies,
Thanjavur.
பிறந்த தேதி 21.09.1995
உயரம் 5' - 4"
நட்சத்திரம் ஆயில்யம் 3–ம் பாதம்
கோத்திரம் சணமுடை
பூர்வீகம் உடையார் பாளையம்
தகப்பனார் **கோ. மோகன் பிள்ளை**
தாயார் **மோ. மலர்கொடி**
(திருநாரையூர்)
முகவரி A/2, சீதா நகர்,
சிவாஜி நகர் வழி,
தஞ்சாவூர் – **613 001.**
Cell : 94424 75666, 94424 75777
விருப்பம் சமபடிப்பு, நல்ல பணியில் உள்ள வரன்.

மணமகன் தேவை

பெயர் செல்வி செ. கோகிலா
படிப்பு B.Tech (Bio-Tech) SVCE
MBA (HR)
வேலை Test Engineer, Work at Chennai
Rs. 18,45,000/PA

பிறந்த தேதி 05.08.1993
உயரம் 155 cm
நட்சத்திரம் சதயம்
கோத்திரம் களப்பாள
பூர்வீகம் T. பழூர் (ஜெயங்கொண்டம் அருகில்)
தகப்பனார் B. செல்வம்
தாயார் ராணி செல்வம்
முகவரி 20/1, Flat No. S-3,
Moongi Enclave,
Eswaran Kovil Street,
Urapakkam, Chennai - 603 210.
Cell : 97904 71465, 94457 15530
விருப்பம் சமபடிப்பு, நல்ல வேலை, சென்னை அல்லது வெளிநாட்டில் பணியில் உள்ள வரன்.

பெயர் செல்வி சந்தனா
படிப்பு B.E., M.B.A., (LIBA)
வேலை TCS, Chennai

பிறந்த தேதி 04.10.1995
உயரம் 5' - 2"
நட்சத்திரம் அவிட்டம்
கோத்திரம் தனபாலுட
பூர்வீகம் ஜெயங்கொண்டம்
தகப்பனார் சந்திரசேகரன், B.Sc.,
Business
தாயார் விமலா
(கீழப்பெரும்பள்ளம்)
முகவரி 40-A, சிதம்பரம் ரோடு,
ஜெயங்கொண்டம் – 621 802.
Cell : 92444 09112, 81110 08601

பெயர் செல்வி ரா. முத்துலெட்சுமி
படிப்பு M.C.A.,
வேலை Data Analyst, Straive, Chennai
Rs. 18,000 / PM

பிறந்த தேதி 10.09.1996
உயரம் 164 cm
நட்சத்திரம் ஆயில்யம் 4ம் பாதம்
கோத்திரம் வில்வராய
பூர்வீகம் C. அரசூர்
தகப்பனார் M. ராஜசேகர்
தாயார் R. தையல்நாயகி
முகவரி 296, பெரியகொப்பியம்,
மாதானம் (PO), சீர்காழி தாலுக்கா
மயிலாடுதுறை மாவட்டம்
Cell : 96590 80531, 94877 09124
விருப்பம் படித்த நல்ல பணியில் உள்ள வரன்.

பெயர் செல்வி Priyadharshini .R
படிப்பு B.Tech (CSE)
வேலை Programmer Analyst,
Cognizant Technology Solutions (CTS)
Rs. 5 Lakhs / PA

பிறந்த தேதி 10.09.1997
உயரம் 5' - 1"
நட்சத்திரம் Moolam
(2nd Paadham)
கோத்திரம் Karavuda
பூர்வீகம் Vaitheeswaran Kovil
தகப்பனார் Ramaiyan .M
DTP Centre, Panruti
தாயார் Vijaya .S, M.A., B.Ed.,
Kalnaatampuliyur
முகவரி 2, Bai Complex,
Kombu Palayam Street,
Panruti, Cuddalore District
Cell : 86102 30428, 98651 10395
விருப்பம் Equally qualified and Good Job

கீழப்பெரும்பள்ளம் சு. செந்தில்குமரன் – பி. சகுந்தலா
குடவாசல் ந. அசோக் – அ. வள்ளி.
இல்லத் திருமண மற்றும் வரவேற்பு விழா.

செ. சசிகுமார், B.E., MBA., (AGNI MHE PVT LTD, Chennai)

அ. நந்தினி, B.E., (METAPLORE SOLUTION PVT LTD, Chennai)

மயிலாடுதுறை, அபிராமி ஹால் A/C திருமண மண்டபத்தில், 28.03.2022 அன்று நடைபெற்ற திருமணத்திற்கும், சென்னை, போரூர், ராஜ் மஹால் A/C திருமண மண்டபத்தில், 30.03.2022 அன்று திருமண வரவேற்பு விழாவிற்கும் வருகை தந்து வாழ்த்திய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் மயிலாடுதுறை, குடவாசல் நகர கார்குல சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நேரில் வந்து வாழ்த்திய தமிழ்நாடு மாநில கார்காத்தார் சங்கத் தலைவர் திரு. K.K.R. K. சுரேஷ், திரு. கைலை. சண்முகம் பிள்ளை (அமைப்புச் செயலாளர்) மற்றும் சங்க நிர்வாகிகள், போரூர் கார்காத்தார் சங்கத் தலைவர் மற்றும் நிர்வாகிகள், திரு. V.R. செந்தில்குமார் (MD - Radha Engineering, Chennai) மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ந. அசோக்
அ. வள்ளி
குடவாசல்
95004 72723

சு. செந்தில்குமரன்
பி. சகுந்தலா
போரூர், சென்னை.
94442 2089 / 9444916630

கீழப்பெரும்பள்ளம் சு. செந்தில்குமரன் – பி. சகுந்தலா
குடவாசல் ந. அசோக் – அ. வள்ளி.
இல்லத் திருமண மற்றும் வரவேற்பு விழா.

கீழப்பெரும்பள்ளம் சு. செந்தில்குமரன் – பி. சகுந்தலா
குடவாசல் ந. அசோக் – அ. வள்ளி.
இல்லத் திருமண மற்றும் வரவேற்பு விழா.

கீழப்பெரும்பள்ளம் சு. செந்தில்குமரன் – பி. சகுந்தலா
குடவாசல் ந. அசோக் – அ. வள்ளி.
இல்லத் திருமண மற்றும் வரவேற்பு விழா.

வாழ்க சதாபிஷேக தம்பதியர்

மயிலாடுதுறை, மணிக்கிராமம் (பாகசாலை) தெய்வத்திரு கோபால் பிள்ளை – பட்டம்மாள் அவர்களின் மூத்த மகனும், பிள்ளைபாளையம் (ஆரலூர்) தெய்வத்திரு. இரத்தினசபாபதி பிள்ளை நலமுடன் சாரதா அவர்களின் மூத்த மகள் மற்றும் இலையூர் தெய்வத்திரு. பரசுராமபிள்ளை – பத்மாவதி அவர்களின் வளர்ப்பு மகளும் எங்களது பெற்றோர் திரு. **மகாலிங்கம் பிள்ளை - மீனாட்சி** தம்பதியரின் **சதாபிஷேக விழா** திருக்கடையூர் அருள்மிகு அபிராமி அம்மாள் சமேத ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் 18.02.2022 வெள்ளிக்கிழமை அன்று சீரும் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் கலந்துகொண்டு வாழ்த்தியவர்களுக்கும், வாழ்த்து பெற்றவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

மகன்–மருமகள்

ம. முருகானந்தம் (பாபு)

ரா. காயத்ரி

மு. சுஜித்ரா

மு. தர்ஷினி

சாக்கோட்டை

மகள்–மருமகன்

ம. உமா மகேஸ்வரி

இர. சரவணன்

ச. தீப்தி ஸ்ரீ

சென்னை

மணிவிழா

இணையர்

இரா. செல்வக்குமார்

ஜெ. விஜயா

நாள் : **11.04.2022**

இடம் : **வாசுகி திருமண மண்டபம்,**
மயிலாடுதுறை

கருத்தொருமித்த இணையராய் வாழ்ந்து
கடமை தவறாது இனிதே பணியாற்றி
கண்ணியம் மிக்கவர்களாய் சமுதாயத்தில் உயர்ந்து
அன்பான உறவுகளையும், அகமகிழ் நட்புகளையும்
இனிதே நேசித்து அனைவரும் பாராட்டுகின்ற வகையில்
சிறந்து விளங்கும் எங்கள் பெற்றோரின்
மணிவிழா நிகழ்விற்கு வருகை தந்து வாழ்த்தினை
வழங்கிய சான்றோர்க்கும், வாழ்த்தினை பெற்ற
அன்புள்ளங்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த
நன்றியினை உரித்தாக்கி மகிழ்கின்றோம்.

இணைந்து மகிழும்

வி. சண்முகசுந்தரம்
வே. விக்னேஷ்

சுடரொளி சண்முகசுந்தரம்
இளந்தென்றல் விக்னேஷ்

மழலைகள்

ச. மகிழமுதன்
ச. யாழிசை

SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM

SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com

S.SELVAKUMAR - C.E.O

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
30.04.1958

மறைவு
29.05.2021

K. ரவி

மறைந்து போனாலும்
என்றும்
மறந்து போகாத
அன்பை காட்டி
சென்றவர்...

மனைவி : **சித்ரா ரவி**
மகன் : **பரணிகுமார் ரவி**
சென்னை–73

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்:
14.12.1935

இறைவன் திருவடியில்:
14.03.2022

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்குடி வட்டம், **வீரநத்தம்**
தெய்வத்திரு. **வ.சரவணமுத்து பிள்ளை** அவர்களின் மனைவியும், எங்களது தாயார்
திருமதி. **ச.சரஸ்வதி** அவர்கள்
கடந்த **14.03.2022** திங்கட்கிழமை அதிகலை **12.05** மணியளவில் இறைவனடி கலந்தார்
என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம

மொழியை முதலில் கற்பித்து இறைவன் எங்களுக்கு கொடுத்த
முதல் முகவரிக்கு எங்களின் இறுதி அஞ்சலி!
எங்களை கண்களில் வைத்து காத்தவள்
தனக்கென பாராமல்
எங்களுக்காக வாழ்ந்ததால்
வளர்பிறையாய் நாங்கள் வளர்ந்தோம்
தேய்பிறையாய் அவள் தேய்ந்தாள்!
தமிழின் உயிர் எழுத்துக்களில் முதலாகி
மெய் எழுத்துக்களில் இடையாகி
உயிர் மெய் எழுத்துக்களில் கடை ஆகி
முற்று பெற்று அம்மாவாக வாழ்ந்தவள்
இப்போது கடவுளாக
எங்கள் மனமெல்லாம் தங்களின்
தங்கமான நல்வாசம் வீசிட
விரைந்த உங்கள் ஆத்மா!!!
நன்னிலை
எல்லாம் பெற்று தில்லைக் கூத்தன்
திருவருளால் திருவடி அடைய சிந்தையால்
சிரம் தாழ்த்தி வேண்டுகிறோம்.
நம் குடும்ப வேராகிய உன்னுடைய பெருமையை இனி உன் விழுதுகளாகிய நாங்கள்
பேசிக்கொண்டு இருப்போம்.

என்றும் தங்களின் இனிய அன்பு நினைவில்:

S.சோமசுந்தரம்
G.மாதவி
S.ஆனந்தகுமார்
S.மகாலட்சுமி
A.மித்ரா
செல்: **99400 16079.**

S.நடராஜன்
C.சாந்தி
V.பரத்குமார்
ஜனனி நடராஜன்
செல்: **97869 66030.**

நேர்மை

– A. இராஜாத்தினம்
சென்னை, 94442 24366

எப்படியாவது முன்னேற வேண்டும் என்று பலர் நினைக்கிறார்களே தவிர, நேர்மையாக உழைத்து முன்னேற வேண்டும் என்று நினைப்பதில்லை. நேர்மையாக நடந்து கொள்பவர்களைப் பார்த்தால், பிழைக்கத் தெரியாதவர்கள் என்று கூறி பரிகாசம் செய்கிறார்கள். இது முற்றிலும் தவறு. நேர்மை அல்லாத குறுக்கு வழி முன்னேற்றம் நிரந்தரமானதல்ல.

எட்வின்ஏ அபேஎன்பவர்ஒருசிறந்தஓவியர்.தமது எண்ணங்களை அருமையாக வண்ணங்களாக்குவார். தாம் பெறுகிற விலையைக் கருத்தில் கொண்டு அவர் ஓவியம் வரைவதில்லை. தனது கலைத்திறனை எவ்வாறெல்லாம் வெளிப்படுத்தலாம் என்று சிந்தித்த வண்ணம் இருப்பார். அவர் ஓவியம் வரையும் போது, திருப்தி அளிக்காத ஓவியத்தை கிழித்து எரித்து விடுவார். யாரிடமாவது குறைந்த விலைக்கு விற்று விடலாம் என்று நினைக்கமாட்டார். தனக்குத் திருப்தி ஏற்படும் வரை ஒரே ஓவியத்தை அவர் திரும்பத் திரும்ப வரைந்து கொண்டே இருப்பார். அவர் மிகச் சிறந்த ஓவியர் என்று புகழ்பெற்றதற்கு இதுதான் காரணம்.

வேலையில் பதவி உயர்வோ அல்லது நல்ல மாற்றமோ வேண்டுமென்றால் குறுக்கு வழியைப் பின்பற்றக் கூடாது. பலர் நேர்மை என்பது சுற்று வழி என்று நினைக்கிறார்கள். எதுவாக இருந்தாலும் அவர்களுக்கு நிறைய கிடைக்க வேண்டும். அதுவும் உடனடியாகக் கிடைக்க வேண்டும். இது நல்ல வாழ்க்கை முறை அல்ல.

உழைப்பிலும், முயற்சியிலும் உண்மையான நம்பிக்கை உள்ளவர்கள் நேர்மையால் வாழ முடியும் என்று முதலில் நம்ப வேண்டும். நேர்மையாக வாழ்வதில் நிம்மதி இருக்கிறது. அந்த வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் காணலாம். அது நிலையானது. நீங்கள் உங்கள் மனச்சாட்சிக்கு நேர்மையாக இருங்கள். அப்போது எல்லோரிடமும் நேர்மையாக இருப்பீர்கள்.

பழகும் போதும் நேர்மையானவர்களுடன் பழகினால், எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கலாம். குறுக்கு வழியில் பயணம் செய்பவர்களுடன் பழகினால், அவர்கள் இன்னலில் மாட்டிக்கொள்ளும் போது, நாமும் சிரமப்பட வேண்டிவரும். நேர்மையாக இருப்பவர்கள் இரவில் நிம்மதியாகத் தூங்குவார்கள். உடல்நலம் நன்றாக இருக்கும்.

மகாத்மாகாந்தி, அப்துல்கலாம் போன்றவர்கள் நேர்மையான வாழ்க்கையை வாழ்ந்து நிரந்தரமான புகழைப் பெற்றார்கள்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று." (திருக்குறள் : 236)

ஒரு துறையில் ஈடுபட்டால் புகழ் பெறும்படித் தோன்ற வேண்டும். அவ்வாறு இல்லாதவர், அத்துறையில் ஈடுபடுவதைவிட ஈடுபடாமல் இருப்பது நல்லது என்பது பொருள்.

நிறுவனங்களில் நேர்மையானவர்களுக்கு என்று தனி மதிப்பு உண்டு. எல்லோரும் அவர்களுக்கு மரியாதை செய்வார்கள். அவர்கள் பணி ஓய்வு பெற்ற பின்னும் அவர்களை சமுதாயம் மதிக்கும். அதுதான் உண்மையான வெற்றி.

எனது நண்பர் மற்றும் உறவினர் திரு. C. சுப்ரமணியம் மிகவும் நேர்மையானவர். அவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். நாங்கள் கோவையில் உள்ள P.S.G. பொறியியல் கல்லூரியில் ஒன்றாகப் படித்தோம். அவர் TWAD போர்டில் பணியாற்றி மிக உயர்ந்த பதவிகளை வகித்து பணி ஓய்வு பெற்றார். அவருடைய நேர்மையை எடுத்துரைக்க ஒரு சம்பவத்தைப் பற்றி எழுதுகிறேன். திருக்கடையூரிலிருந்து 7. km தொலைவில் திருவிடைகழி என்ற கிராமத்தில் சுமார் 1500 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட முருகன் கோவில் ஒன்று உள்ளது. வருடம் ஒரு முறை மூவாயிரம் பேருக்கு மேல் சிதம்பரம் நடராஜர் கோவிலிலிருந்து பாத யாத்திரை செல்வார்கள். அதில் நாங்கள் உறவினர்களும், நண்பர்களுமாக முப்பது பேர் கலந்து கொண்டு நடந்து செல்வோம். அந்த கோவிலில் தண்ணீர் வசதி இல்லை. 2003–ம் ஆண்டில் திரு. சுப்ரமணியம், TWAD போர்டில் வேலைகள் செய்த ஒரு ஒப்பந்தக்காரரை அழைத்து, "அந்த கோவிலுக்கு ஒரு சப்மெர்சிபில் பம்ப் போடுங்கள். ஆகும் செலவை நாங்கள் கொடுத்து விடுகிறோம்" என்று கூறினார். அதற்கு அந்த ஒப்பந்தக்காரர் "ஐயா, தாங்கள் நேர்மையாக பணியாற்றி பணி ஓய்வு பெற்றீர்கள். இந்த வேலைக்கு நாற்பது ஆயிரம் ரூபாய் செலவாகும். இதை நானே ஏற்றுக்கொண்டு என் சொந்த செலவில் செய்கிறேன்" என்று சொல்லி பொதுமக்கள் நலனுக்காக செய்து கொடுத்தார். எங்களிடம் பணம் வாங்க மறுத்துவிட்டார். இது என் நண்பர் திரு. C. சுப்ரமணியத்தின் நேர்மைக்குக் கிடைத்த பரிசு என்பதை தெரிவிக்க நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த கட்டுரை எழுத்தாளர் எழுதியுள்ள வெற்றிக்கு மிக அருகில், வெற்றி பின் தொடர, வெற்றி ரகசியங்கள், வெற்றி கையுறல், வெற்றியின் அலைஓசை, Spoken English for your success என்ற புத்தகங்களைப் படித்தால் திறன் மேன்பாடு அடையலாம்.

நட்சத்திரங்களும் மரங்களும்

(தொடர்ச்சி)

அக்ரி. கு. சேதுசுப்பிரமணியன் – சிதம்பரம்

அலைபேசி: 9443665642

ஒரு பிறந்தநாள் கணிதத்தில் (ஜாதகத்தில்) கிரக அமைப்புகளைக் கொண்டே ஒருவருடைய குணநலன்களைப் பற்றி சொல்ல முடியும் என்றாலும், அவரின் பிறந்த நட்சத்திரத்தின்படி, பொதுவான பலன்களைச் சொல்லலாம். அதன்படி அசுவனி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நல்ல தோற்றமுடையவர்களாகவும், அலங்காரப் பிரியர்களாகவும் இருப்பார்கள். சமர்த்தர்கள். எல்லோரிடமும் சுமுகமாகப் பழகுபவர்கள், அறிவுக்கூர்மை உடையவர்கள், அகன்ற மார்பையும் சிவந்த கடைக்கண்களையும் கொண்டவர்கள்.

ஒருவரின் பிறந்த நட்சத்திரத்தின் அதிபதி கிரகத்தின் ஆரம்ப திசை முதலில் தொடங்கி, பின்னர் வரும் கிரகங்களின் அமைப்பு வரிசையின்படி திசாபுத்திகள் அமையும் என்று முன்னரே பார்த்தோம் அல்லவா? அதன்படி அசுவனி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு கேது பகவானின் திசைதான் ஆரம்ப திசையாக அமையும். அசுவனி நட்சத்திரத்தின் விருட்சம் (மரம்) எட்டி மரமாகும். நட்சத்திரத்துக்குரிய மிருகம் குதிரையாகும்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பகை மேலோங்கியபோது அசுரர்களின் கை சற்றே மிகுந்து தேவர்கள் துன்பத்துக்கு ஆளானார்கள். எனவே சிவபெருமானும், திருமாலும் தேவர்களுக்குப் பாற்கடலில் தோன்றும் அமுதத்தைக் கொடுத்தால், அவர்கள் வலிமை பெறுவார்கள் என்று கருதி பாற்கடலைக் கடையச் சொன்னார்கள். அசுரர்களும் வாதிட்டு பாற்கடலைக் கடையும் வாய்ப்பைப் பெற்றனர். மேருமலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பைக் கயிறாகவும் கொண்டு கடையும்போது முதலில் திருமகளும், பின்னர் காமதேனு உச்சைஸ்வரஸ் என்னும் வெண்குதிரை, ஐராவதம் என்னும் யானை முதலியன தோன்றி பின்னர் அமுதம் பொங்கி வந்தது. அந்த அமுதத்தை முதலில் எடுத்து வந்தவர்தான் திருமாலின் அவதாரமான தன்வந்திரி பகவான். அமுதத்தைப் பார்த்த தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஒரு போட்டி ஏற்படவே, அதனைத் தேவர்களுக்கு வழங்கிட எண்ணி திருமால் மோகினி வடிவம் எடுத்தார். மோகினியின் அழகில் மயங்கிய அசுரர்களை திருமால் மோகினி வடிவம் எடுத்தார். மோகினியின் அழகில் மயங்கிய அசுரர்களை ஏமாற்றி, திருமால் அமுதத்தைத் தேவர்களுக்கு வழங்கினார். அந்த அமுதத்தை முதலில் பெற்றவர்கள்தான் அசுவனி தேவர்கள் ஆவர். அசுவனி தேவர்கள் இரட்டையர்கள். வெண்மை நிறம் கொண்டவர்கள். வெண்மை நிறக் குதிரையை வாகனமாகப் பெற்றவர்கள். இந்த அசுவனி தேவர்கள்தான் அசுவனி நட்சத்திரக்காரர்களுக்கு அதிதேவதையாக விளங்குகின்றனர். சரசுவதி தேவிதான் அதி தெய்வமாகும்.

பாற்கடலில் அமுதத்துடன் கூடவே, ஆலகால நஞ்சும் வெளிப்பட்டது. அந்த நஞ்சினால் எல்லோருக்கும் கெடுதல் நேராதிருக்க சிவபெருமானே நஞ்சினை உண்டு நீலகண்டராக மாறினார். அத்தகைய நஞ்சின் வடிவம்தான் எட்டி மரமாகும். இந்த எட்டி மரம் கொல்லிமலை வனப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகிறது. கொல்லிமலையில் அருள்பாலித்து வரும் ஸ்ரீ அறப்பளிசுவரப் பெருமான் உறையும் திருக்கோயிலின் விருட்சமாக எட்டி மரம் விளங்குகிறது. எனவே, அசுவனி நட்சத்திரக்காரர்கள் ஸ்ரீ அறப்பளீசுவரரைத் தரிசித்து எட்டி மரத்தையும் வணங்குவது அவர்களுக்குச் சிறந்த பரிகாரமாய் அமையும்.

எட்டி:

எட்டி மரம் ஆங்கிலத்தில் Poison Nut Tree என்றும், வடமொழியில் "விஷமுஷ்டி" என்றும் வழங்கப்படுகிறது. சங்க இலக்கியங்களில் "காஞ்சிரம்" என்று குறிப்பிடப்படுகிறது. வெப்ப மண்டலப் பிரதேசத்தின் வனப்பகுதிகளில், முக்கியமாக கேரளா, தமிழ்நாடு, ஒடிசா போன்ற மாநிலங்களிலும், ஸ்ரீலங்காவிலும் பரவலாக உள்ளது.

தாவரவியல் பெயர் : Strychnos Nuxvomica

தாவரக் குடும்பம் : Logamiaceae

எட்டி மரம் சுமார் 50' முதல் 60' அடி உயரம் வரை வளரக்கூடியது. நல்ல தழையமைக் கொண்ட மரமாகும். பழுப்பு நிறமுடன் கூடிய மெல்லிய பட்டையைக் கொண்டது. நல்ல பசுமை நிறத்துடன் கூடிய இலைகள் பளபளப்பானவை. மலர்கள் பசுமை கலந்த வெண்ணிறமானவை. புனல் வடிவில் நுனி பூங்கொத்துகளாக மலர்வன. கனிகள் சிறிது சிவப்பு கலந்த மஞ்சள் நிறமாக இருப்பவை. விதைகள் கனிகளின் சதைப்பற்றில் பொதிந்து காணப்படும்.

மருத்துவப் பயன்கள்:

எட்டிப்பழம் பார்க்க அழகாய் இருந்தாலும் மிகவும் நஞ்சானது (விஷமானது). எட்டி விதையில் 2.6% – 3% அளவு ஆல்கலாய்டுகள் (Alkaloids) உள்ளன. இதில் Strychnine (ஸ்டிரிக்னைன்) என்ற வேதிப்பொருள் 1.5% அளவிலும், புருசைன் 1.7% அளவிலும் உள்ளன. இவையே மருத்துவத்தன்மைக்கு ஆதாரமாய் உள்ளன.

இலைகளை நீர்விட்டு மைய அரைத்து நாள்பட்ட காயங்கள், மற்றும் புண்களுக்கு மேல்பூச்சாகப் (Poultice) பூசிட விரைவில் ஆறிவரும்.

வேர்ப்பட்டை எலுமிச்சை சாறுடன் அரைக்கப்பட்டு மாத்திரைகளாகத் தரப்படுகின்றன. இவை வயிற்றுப்போக்கை குணப்படுத்தும். வேரின் வடிநீர் (Decoction) அல்லது சாறு வலுவேற்றும் மருந்தாகவும் (Tonic), காய்ச்சலைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது. விட்டு விட்டு வரும் காய்ச்சல் மற்றும் நஞ்சுக் கடிக்கும் வேர் மருந்தாகிறது.

எட்டி விதைத்தூள் அபின், மிளகுடன் சமஅளவில் மாத்திரைகளாக வெற்றிலைச் சாறுடன் எடுத்துக்கொள்ள நரம்பு மண்டல நோய்க்கு மருந்தாகிறது.

எட்டி விதை பலவிதமான நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. வயிற்றுப் போக்கு, நீரிழிவு, கை கால் வலிப்பு, நரம்பு மண்டலக் கோளாறுகள், போதைப் பழக்கம், ஆகியவற்றுக்கு மருந்தாகிறது.

எட்டி விதையை அதிகம் உண்டால் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு, இதயத்துடிப்பு அதிகமாகி மரணம் சம்பவிக்கும். எனவே எட்டித்தூள் 3 நெல் எடைக்கு மிகாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அநுபவமுள்ள வைத்தியர்களைக் கொண்டே மருத்துவம் செய்து கொள்ளுதல் நல்லது.

பிற பயன்கள்:

கரையான் அரிக்காத தன்மை கொண்டதால் எட்டி மரம் மர வேலைகளுக்கு ஏற்றது. நிழல் தரும் மரமாகவும் இதனை வளர்க்கலாம்.

அசுவனி நட்சத்திரக்காரர்கள் நந்தவனங்களிலும், வாய்ப்புள்ள இடங்களிலும் எட்டி மரம் வளர்த்து இம்மைப் பேறு எய்தலாம். கொல்லிமலை அறப்பளீசுவரரையும், சரசுவதி தேவியையும் வழிபட்டு நல்ல பலன் பெறலாம்.

அடுத்து பரணி நட்சத்திரம் பற்றி அறிவோம்.

(பயணிப்போம்)

bFair Ladies Beauty Parlour

B'Fair Ladies Beauty Parlour

Think Beauty : Think B'Fair

- 20 Years of Professional Experience
- Well recognized & Top rated Salon in Chennai
- Bridal Makeup & Party Makeup Services provided in & Around Tamil Nadu
- Expertise in Beauty Services, Skin & Hair Care
- Welcome to this Exclusive Ladies Parlour to have a Personal care on your grooming needs.

128, Senthil Nagar, Vallalar Street Entrance,
100 Feet Road, Next to Amirthavalli Hall,
Nr. Vadapalani, Chennai - 94. Ph : 9176777755
http: //g.co/kgs/zS9q4T Insta : beauty_bfair_tips



சிறுவர் பகுதி

தயாரிப்பு **தஞ்சை தியாகு**
தொ.பேசி: 044–26532182
Email: thiagu1943@gmail.com

நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுங்கள். உங்களுடைய பிரச்சனைகளில் அவர்களால் பங்கேற்கமுடியும்.

உங்கள் சிந்தனைக்கு சில நிமிடங்கள்!

சிற்பத்தின் அழகு என்பது அது நஷ்டப்பட்ட கல்லில்தான் இருக்கிறது என்றான் ஒரு சிற்பி. நஷ்டப்பட்ட கல் என்றால் என்ன? பாறையாக உள்ள அந்தக்கல்லுக்குள் அந்தச்சிற்பம் முன்னதாகவே இருந்தது. வேண்டாத பாறைத் துணுக்குகளைச் சிற்பி விலக்கினான். உள்ளிருந்து சிலை வெளிவந்தது. சிற்பத்தை அவன் உருவாக்கவில்லை. செதுக்கினான், இளைஞர்களே, அதுபோலத்தான் நீங்களும். உங்களுக்குள் ஆற்றல் உள்ளது. அது பயத்தால் போர்த்தப்பட்டுள்ளது.துடிப்பு உள்ளது. அது சோம்பல் என்ற சாம்பலில் மறைந்துள்ளது. சிறுவர்களே! இளைஞர்களே! உங்களில் எவரும் இலக்கில்லாதவர்கள் இல்லை, எல்லாவற்றுக்கும் ஏற்றவர்கள். பொறுப்பற்ற வர்கள் அல்ல. பொறுப்பாகக் கையாளப் படாதவர்கள். அவ்வளவே. திறமை அற்றவர்கள் என்று யாருமே இல்லை.என்றாலும் சிலர் தோல்வியடைவதற்கான காரணம் என்ன? திறமையை சரியான முறையில் பயன்படுத்தாமல் இருப்பதே! உங்கள் வளர்ச்சியில் உண்மையிலேயே உங்களுக்கு விருப்பம் இருந்தால், பிரச்சனைகளை ஆசையோடு வரவேற்கப் பழகுங்கள். வாழ்க்கை எல்லாவிதத்திலும் சவுகரியமாக அமைந்துவிட்டால் அதைப் போன்றதொரு வெறுமை வேறு எதுவும் கிடையாது. பிரச்சினை உங்களைப் போட்டு அழுத்தும் போதுதான் உங்கள் திறமை அதிகரிக்கும். சவால்கள்தான் மனிதனை முழுமை யாக்கும். இருட்டு என்று ஒரு பிரச்சினை இருந்ததால்தானே மின் விளக்கு கண்டுபிடிக்கப்பட்டது. பயணம் என்பது பிரச்சனை யாக இருந்ததால்தானே வாகனங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஆக, பிரச்சனைகளே இல்லாமல் இருந்து விட்டால் உங்கள் மூளையின் திறனை எவ்வாறு அறிவீர்கள்?

நம் நாட்டின் இளைய சமுதாயத்திற்கு என்னால் முடியும் என்ற நம்பிக்கை முக்கியம். அது நல்ல புத்தகங்களில் இருந்தும். நல்ல பெரியோர்களிடம் இருந்தும், நல்ல ஆசிரியர்களிடமிருந்தும், தெய்வீகப் பெற்றோரிடம் இருந்துதான் கிடைக்கும். என்னால் முடியும் என்ற அந்த நம்பிக்கை உங்களுக்குள் உதயமானால் மக்களுக்கும் நம்மால் முடியும் என்ற நம்பிக்கை வளரும். நம்மால் முடியும் என்ற நம்பிக்கை வந்தால் இந்தியாவால் முடியும். அப்படிப்பட்ட நம்பிக்கை ஏற்பட்டால் வளமான இந்தியாவை, ஓர் அமைதியான இந்தியாவை நம்மால் உறுதியாக அமைக்க முடியும். நாம் சிலவற்றை முடியாது என்று நினைத்துக் கொண்டு இருந்தால் நம்முடைய ஆழ்மனதும் அதை அப்படியே ஏற்றுக்கொண்டு செயலாற்றத் தொடங்கி விடுகிறது. முடியும் என்ற உறுதியான நம்பிக்கை கொள்ளும்போது ஆழ்மனத்திலிருந்து எல்லா உதவிகளும் நமக்குக்கிடைத்துக் கொண்டே இருக்கிறது.

தினமும் ஒவ்வொரு மணி நேரமும் திட்டமிட்டு வாழுங்கள். பத்திரிக்கை படிக்க, கடிதங்கள் எழுத,புத்தகங்கள் ஒழுங்கு செய்ய இப்படி இன்னின்ன, காரியங்களை இத்தனை நிமிடங்களில் செய்து முடிப்பது என்று காகிதத்தில் குறித்து வைத்து, ஒன்றன்பின் ஒன்றாக, அவற்றை செய்து முடியுங்கள். ஏதாவது ஒரு வேலை, பாதி முடித்திருந்தால் அதை நீட்டிக்கக் கூடாது. அப்படியே நிறுத்திவிட்டு, குறித்து வைத்துள்ள அடுத்த வேலையில் குதியுங்கள். ஒரு நாளில், இரண்டு மணி நேரத்தை அவ்வாறு ஒழுங்கு செய்துகொள்ளப் பழகியவுடன் கொஞ்சம் கொஞ்சமாக நாலு, ஆறு, எட்டு மணி நேரத்திற்கும், பின் நாள் முழுமைக்குமே திட்டமிட்டு வேலைகள் செய்யலாம். தன்னம்பிக்கையைத் தவிர எளியோருக்கு வேறு மருந்து வேண்டாம். என்கிறார் ஷேக்ஸ்பியர். உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து மற்று அதன்
குத்து ஒக்க சீர்த்த இடத்து.

காலத்தை எதிர் பார்க்க வேண்டிய பருவத்தில் கொக்கைப் போல காத்திருந்து காலம் வாய்த்தபோது கொக்கு மீனை குத்தினாற் போலத் தவறாமல் செய்ய வேண்டிய செயலைச் செய்து முடிக்க வேண்டும்.

விடுகதைகளில் சில

1). படத்தில் கொடுக்கப்பட்டுள்ள அம்புக்குறி தெற்கிலிருந்து (SOUTH) வடக்கை (NORTH) காட்டுவதாக உள்ளது. இதில் ஒரு கோட்டினை நகர்த்தியும், ஒரு கோட்டினை சேர்த்தும் திசை கிழக்கிலிருந்து (EAST) மேற்காக (WEST) காட்டுவதாகவும் அமையுங்கள் பார்ப்போம்!

2). 5 + 5 + 5 =555 ஒரு கோடு மட்டும் போட்டு இந்த சமன்பாட்டை சரி செய்க:



3). ஒரு நத்தை 18 மீட்டர் உயரமுள்ள கம்பத்தின் மீது ஏறுகிறது. பகல் பொழுதில் 5 மீட்டர் மேல் நோக்கியும், இரவில் 4 மீட்டர் கீழ் நோக்கியும் நகர்கிறது. என்றால் அக்கம்பத்தின் உச்சியை முதன் முதலாக எத்தனை நாட்களில் சென்றடையும்?

4). இது ஊமை. காது கேட்காது, பார்வையும் இல்லை. என்றாலும் உண்மையே சொல்கிறது. இது என்ன?

5). காலில்லை, கையில்லை என்றாலும் மலைகள் மீது தாவிச் செல்கின்றேன். நான் யார்?

6). நீங்கள் குதிரை என்று சொன்னாலும், உண்மையில் குதிரையில்லை. நான் யார்?

7). எனக்கு கண் இருந்தாலும் பார்க்க முடியாது. நான் யார்?

8). இந்த எண்ணை தலைகீழாகப் போட்டால் இதன் மதிப்பு குறைந்து விடுகின்றது.இது என்ன?

9). நான் ஓடுவேன், வாயும் இருக்கிறது என்றாலும் சாப்பிட முடியாது. நான் யார்?

10). எப்போது 2ம் 2ம் சேரும்போது அதிக மதிப்பைப் பெறுகின்றன?

11). என் பெயரைச் சொன்னாலே நான் மறைந்து விடுகின்றேன். நான் யார்?

11). பென்சில்கள் தயாரிப்பில் பயன்படும் தாதுப்பொருள் என்ன?

12). நகரம் முழுவதுமாக சுற்றிவந்தாலும் வீட்டினுள் வருவதில்லை. இது என்ன?

நம்பிக்கையுடன் விழிப்புணர்வும் வேண்டும்

படிப்பு, அறிவு ஆற்றல் மட்டும் இருந்தால் போதாது. நிகழ்காலத்திற்கு ஏற்ப விழிப்புணர்வு வேண்டும்.

ஒருவன் எத்தனை திறமைகள் பெற்றிருந்தாலும், அது அவனுக்கு பயன்தராது போய்விடும். எனவேதான் பெரிய நிறுவனங்கள் வேலைக்கு மனுச் செய்திருப்பவர்களுக்கு (Presence of mind) நிகழ் காலத்திற்கேற்ப விழிப்புணர்வு இருக்கிறதா என பலவிதங்களில் சோதனை செய்கிறார்கள்.

தான் வயலின் வாசித்தால் பாலைவனத்தில்கூட மழைபெய்யச் செய்யமுடியும் என தனது வயலின் இசை மீது அசையாத நம்பிக்கை கொண்ட பெரிய வயலின் வித்வான் ஒருமுறை சர்க்கஸ் வேடிக்கை பார்க்கச் சென்றார். அங்கே சர்க்கஸ் கலைஞர் வயலின் வாசிக்க கரடி டான்ஸ் ஆடியது. சர்க்கஸ் பார்க்க வந்திருந்தவர்கள் ஒட்டுமொத்தமாக எழுப்பியகோஷம் கூடாரத்தையே அதிரவைத்தது. இதனைப் பார்த்த நமது வயலின் வித்வான் சர்க்கஸ் கலைஞனை அணுகி நன்கு பழக்கப்பட்ட கரடியைத்தான் உன்வயலின் இசையால் ஆட வைக்கமுடியும். ஆனால் என் வயலின் இசை எந்த மிருகத்தையும் நடனமாடவைக்கும் என்று கூறினார். சர்க்கஸ் கலைஞர் அதை பேத்தல் என மறுக்க இருவருக்குமிடையே அங்கே ஒரு போட்டியே ஆரம்பமானது.

சர்க்கஸ் கலைஞர் வயலின் வித்வான் முன் முதலில் ஒரு சிங்கத்தை அனுப்பினார்.வித்வான் இசைகேட்டு சிங்கம் சுழன்று சுழன்று ஆடத்தொடங்கியது. சர்க்கஸ் கலைஞர் அடுத்து ஒரு சிறுத்தையை அனுப்பினார். அதுவும் வித்வான் வயலின் இசைக்குத் தன்னை மறந்து ஆடியது. அடுத்து ஒரு புலி வந்தது. வயலின் வித்வான் சற்றும் பதறாது தனது வயலினை வாசிக்கத் தொடங்கினார். ஆனால் அந்த புலியோ இசைக்கு மயங்கவில்லை. வயலின் வித்வான் மீது பாய சீறிக்கொண்டு வந்தது. பார்வையாளர்கள் சப்தம் போட்டுக்கொண்டு ஓடினார்கள். நமது வித்வானும் வயலினை காற்றில் பறக்க விட்டு விட்டு கடைசி நிமிடத்தில் தலை தெறிக்க ஓடி அதிஷ்டவசமாக புலியிடமிருந்து தப்பித்துக்கொண்டார். சர்க்கஸ்காரர்களால் புலிகூண்டில் அடைக்கப்பட்டது. சற்று நேரம் ஆசுவாசப்படுத்திக் கொண்ட வயலின் வித்வான் தோல்வியை ஒப்புக் கொண்டார். சர்க்கஸ் கலைஞர் சிரித்தபடியே கூறினார். அது ஒரு செவிட்டுப் புலி. வேடிக்கை பார்க்க வந்த கூட்டத்தினர்கூட அப்புலிக்கு காது துவாரமும், ஏன்காது மடல்களுமே இல்லை என்பதை சில வினாடிகளுக்குள் கவனித்து தப்பிக்க முயன்றுவிட்டனர். ஆனால் நீங்களோ உங்கள் வாசிப்பின் மீதுகொண்டிருந்த அபார நம்பிக்கையால் கண்திறந்து புலியை கவனிக்கத்தவறிவிட்டீர்கள்.

–சுவாமி சுகபோதனந்தா

நட்பு

எவ்வளவோ நண்பர்கள் கிடைத்தாலும்....பள்ளி, கல்லூரி நாட்களில் துளிர்க்கும் நட்பின் எடைக்கு வேல்யூ அதிகம். பாசம், வலி, பகிர்வு என்று பரவசத்தோடு பரிமாறிக்கொண்டு லைஃப் முழுக்க அழைத்துச்செல்லும் பலம், அந்தப்பருவக்காலங்களில் பூக்கும் நட்புக்கு உண்டு. அதெல்லாம் ஒரு கனாக்காலம் என்று தாங்கள் பள்ளி, கல்லூரி நாட்களில் செய்த சேட்டைகளில் தொடங்கி சென்டிமென்டைத் தொடுவதாக இருக்கும்.

சில ஜோக்ஸ்

1. நாடக நடிகர்களின் ஒப்பனைக்காகவும் ,உடைக்காகவும் ஒரு தொகையைக் கணக்கில எழுதின அந்தக் குழுவோட தயாரிப்பாளர் இப்ப திரு திருன்னு முழிக்கிறார்!
   இதுல என்ன தப்பு இருக்கு ?
   இது ரேடியோ நாடகமாச்சே!

2. 2022 எப்படிங்க இருக்கும் ?
   இரண்டுக்கும் சைபருக்கும் பின்னாடி இரண்டு இரண்டு இருக்கும்.
3. என் வீட்டுப் பூட்டை உடைத்து ஐந்து லட்ச ரூபாயைத் திருடிகிட்டு போயிட்டானுங்க!
   பூட்டுக்குள்ள எப்படிடா ஐந்து லட்ச ரூபாயை வச்சிருந்த ?

4. ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் முன்னால் நின்று ஒரு பக்தர் புலம்பினார் .
   நீ ரொம்ப ஜாலியா காலை நீட்டிப்படுத்துக்கிட்டிருக்கியே... இது நியாயமா ?
   பக்கத்திலே நின்றவர் சொன்னார் : ஆண்டவனை இப்படியெல்லாம் பேசலாமா ?
   நீங்க பேசப்படாது.ஆனால் நான் பேசலாம். ஏன்னா நான் இவருக்கு சொந்தக்காரன்.
   எப்படி ?
   இதோ படுத்திருக்காரே...இவரு சம்சாரத்தோட (லட்சுமி)சகோதரிதான் (மூதேவி) எனக்கு சம்சாரமா வந்து வாச்சிருக்கா!

5. நானும் என்நண்பனும் ஒரே தட்டுலதான் சாப்பிடுவோம்!
   அந்த அளவுக்கு அந்நியோன்யமா ?
   நீங்க வேற ....எங்க ரூம்ல ஒரு தட்டுதானே இருக்கு!
6. நீ அந்த ஆளைக்கொலை பண்றதுக்கு முன்னாடி அவர் கண்ணை ஏன் துணியால கட்டினே ?
   அவர் ஐ விட்னஸ் ஆகிவிடக்கூடாதேன்னுதான்!
7. பல ஆண்டுகள் ஹோட்டலில் வேலை பார்த்த ஒருவருக்கு வேலை போய்விட்டது.ஒரு புகழ்மிக்க சூப்பர் மார்க்கெட்டில் வேலைக்குச் சேர்ந்தார். முதல்நாள் காரிலிருந்து இறங்கிவந்த ஒரு பணக்காரர் நாய் பிஸ்கட் கால்கிலோ ... என்றார். புதிதாக வேலையில் சேர்ந்தவர் ...இங்கேயே சாப்பிடவா...பார்சலா ? என்றார்.வந்தவர் நாயாகவே குறைத்தபடி மார்க்கெட்டைவிட்டு வெளியேறினார்.
8. ஆஸ்பத்திரிக்கு எப்படி போகணும் ?
   நோயோடுதான் போகணும்.
9. ஒரு முதியவர்: ஐயா! இது நல்ல கல்லூரிதானா ?
   காவலாளி: ஆமாங்க ஐயா!இது நல்ல கல்லூரிதான். நான் எனது என்ஜினியரிங் படிப்பை இங்கேதான் முடிச்சேன் கேம்ப!; செலக்ஷன் கெடச்சதும் இங்கேயே வேலையில சேர்ந்துட்டேன்!
10. திருடனுக்கும் போலீசுக்கும் என்ன வித்தியாசம் ?
    யூனிபார்ஃம்தான்.

இவை தெரியுமா?

பந்திசொல் எப்படி வந்தது?

திருமணம் மற்றும் பிற சுப நிகழ்ச்சிகளில் அனைவரும் இணைந்து உண்பதை ..பந்தி.. என்கிறார்கள். இப்பெயர் எப்படி வந்தது தெரியுமா ? சமஸ்கிருதத்தில் ..பங்க்தி ..என்பது தமிழில் ..பந்தி.. ஆனது. பங்க்தி என்றால் ..சேர்ந்து உண்ணுதல். மனத்தூய்மையான ஒருவர், பந்தியில் அமர்ந்து சாப்பிட்டால் அங்கு பரிமாறும் உணவெல்லாம் சுத்தமாகிவிடும் என்பது ஐதீகம். அப்படிப்பட்டவரை ..பங்க்தி பாவனா..என்பர். நம்மோடு சேர்ந்து சாப்பிடுபவர்களின் குணம், பக்கத்தில் அமர்ந்திருக்கும் எல்லோருக்கும் எல்லோர் உணவின் மீதும் பரவும், எனவே, நற்குணத்தை வளர்த்துக்கொண்டால் நம் அனைவருக்கும் நல்லது. நற்குணம் என்பது உனக்கு நீயே அளித்தக்கொள்ளும் நன்மதிப்புள்ள பரிசு...

ஏட்டுச் சுரைக்காய்

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. அதாவது காகிதத்தில் இருக்கும் உணவு நம் பசியைப் போக்காது என்று அர்த்தம்.வெறும் மனப்பாட கல்வியால் பயன் இல்லை. படிக்கும் கல்வி போதிக்கும் அறிவு என்ன என்கிற சூட்சுமத்தை நமக்கு தெளிவுபடுத்த ஆசிரியர்கள் வேண்டும். நிறைய படிக்கவேண்டும். நிறைய சம்பாதிக்க வேண்டும். இவை அனைவரது ஆசையாக இருக்கவேண்டும். இன்று கல்வி கற்றவர்கள் பெரிதும் மதிக்கப்படுகின்றனர். அதுவும் கல்வியால் அறிவு நிரம்பப்பட்டவர்களை பணத்தால் தாங்குகிறது உலகம். படித்து என்ன ஆகப்போகிறது என்ற நிலைமையில்லை இன்று. மேலே மேலே அதிகம் படிக்க மதிப்பும் மரியாதையும் உயருகிறதே....ஒரு நாடு, அந்த நாட்டின் கல்வி நிறுவனங்களில்தான் உருவாக்கப்படுகிறது என்கிறார் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

சரியான முடிவை எடுங்கள்

ஒரு சிறிய குடும்பம். பையன்களை பள்ளியில் / கல்லூரியில் சேர்க்கவேண்டிய நேரம் வருகிறது. இப்போதுஇவர்கள் முன்இரண்டுசாத்தியங்கள்.இரண்டில்ஒன்றைமுடிவுசெய்யவேண்டும்.வீட்டுப்பக்கத்திலேயே ஒரு சுமாரான பள்ளி இருக்கிறது. சற்றுத்தொலைவில் இன்னொரு பள்ளி மிகப் பிரமாதமானது என்று எல்லாரும் சொல்கிறார்கள். இப்போது, அந்த நல்ல பள்ளியில் டொனேஷன், மாதாந்திர கட்டணங்கள் அதிகம் என்பதாலோ, தினந்தோறும் பையனை அத்தனை தூரம் பள்ளிக்கு அழைத்துச்சென்று வருவதற்கு இயலாது என்பதாலோ அல்லது வேறு ஏதோ ஒரு காரணத்தால் அவனைப் பக்கத்திலிருக்கும் பள்ளியிலேயே சேர்த்து விடுவதாக முடிவு செய்கிறார்கள் அந்தப்பெற்றோர். இம்முடிவுதான் அப்பையனின் வாழ்க்கையை நல்லவிதமாகவோ, கெட்டவிதமாகவோ திசை திருப்புகிறது. அந்தச் சுமாரான பள்ளியில் / கல்லூரியில் தீயப்பழக்கங்கள் அதிகமுள்ள பையன்கள் இருக்கலாம். அவர்கள் அவனைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிடலாம்.

அல்லது பளபளப்பான அந்த இன்னொரு பள்ளியைக்/கல்லூரியைக் காட்டிலும் இங்கே நல்ல ஆசிரியர்கள் இருக்கலாம். அவனை சிறப்பு கவனத்தோடு அரவணைத்துப் பாடம் சொல்லித்தருவதால், அந்தப் பையன் மாவட்டத்தில் முதலாவதாக வந்து தங்கமெடல் வாங்கலாம்.

அதன்பிறகு, பத்துவயதில், அந்தப் பையனை அவனுடைய தந்தை நீச்சல் வகுப்பில் சேர்க்கிறார்.கை,கால் எல்லாம் வலிக்குது என்று காரணம் சொல்லி, இனிமேல் நீச்சல் கற்றுக்கொள்வதில்லை என்று அவன் முடிவு செய்கிறான். பின்னாலில், எப்போதேனும் அவன் தண்ணீரில் தவறி விழுந்தால்,முன்பு எப்போதோ எடுத்த முடிவு, அவனுடைய வாழ்க்கைக்கே முடிவாகிவிடக்கூடும். ....சின்னதும் பெரியதுமாக இப்படி எத்தனையோ தீர்மானங்கள் நாம் ஒவ்வொரு எடுக்கிற சூழலிலும் நாம் எடுக்கிற முடிவுகள்தான், அதன்பிறகான வாழ்க்கைச்செல்லும் திசையை தீர்மானிக்கின்றன. இந்த உண்மை அப்போது நமக்குப் புரியாமல் இருக்கலாம்.ஆனால் ஒரு நல்ல அல்லது மோசமான முடிவு, எல்லாவற்றையும் தலைகீழாகத் திருப்பிப் போட்டு விடக்கூடும்.

இந்தியா வேண்டாம், தென் ஆப்பிரிக்காவிலேயே என்.ஆர்.ஐ.யாக வாழ்ந்துவிடலாம் என்று மகாத்மா காந்தி முடிவெடுத்திருந்தால், அவருடைய வாழ்க்கை மட்டுமல்ல, நமது தேசத்தின் தலையெழுத்தும்கூட மாறிப்போயிருக்கும்.

ஆய்வுக்கூடத்தில் நேரத்தை செலவிடாது ஜாலியாக குதிரை ரேஸ் பார்த்து மகிழலாம் என்று தாமஸ் ஆல்வா எடிசன் முடிவெடுத்திருந்தால் உலகமே இருண்டு இருக்கும்.

யூதர்கள் பாவம், அவர்களை ஏன் துன்புறுத்தவேண்டும் என்று ஹிட்லர் சற்றே யோசித்திருந்தால், கோடிக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். அவரும் கௌரவமான ஆட்சியாளராக சரித்திரத்தில் இடம் பிடித்திருப்பார்.

ஆடு மாடு மேய்ப்பவர்களெல்லாம் பள்ளியில் பாடம் படித்து என்னசெய்யப் போகிறார்கள் என்று காமராஜர் விஷயங்களில் கவனத்தை திருப்பியிருந்தால் தமிழகம் அரை நூற்றாண்டு காலம் பின் தங்கியிருக்கும்.

இப்போது புரிகின்றதல்லவா ? முடிவெடுப்பதென்பது எளிதான ஒன்றல்ல. தனிநபர்களின் வாழ்க்கையில் தொடங்கி, நாடுகள், சமூகங்களின் எதிர்காலம்கூட சிலர் எடுக்கும் சரியான அல்லது தவறான முடிவுகளால்தான் மாற்றி எழுதப்படுகிறது.

சுருக்கமாகச் சொன்னால், வாழ்க்கை எனும் மெகா பரமபதத்தில், பாம்பின் வாயில் அகப்படுவதும், ஏணியைப்பிடித்து முன்னேறுவதும் நாம் எடுக்கும் முடிவுகளால்தான் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். சற்று காலம் ஆனாலும் நேரத்தே சரியான முடிவை எடுங்கள்..

விடுகதை விடைகள்

1).

2). 5 + 5 + 5 = 555

3) 14 நாட்கள் 4)கண்ணாடி

5) மேகக்கூட்டம் 6) கடற்குதிரை 7) ஊசி

8) 9 10) ஆறு 11) 22

12) பெயர் 13) லெட் 14) தெரு

வியப்பூட்டும் பிரபஞ்சம்

கோள்களைச் சுற்றி வரும் வளையங்கள்

அக்ரி த. இராமலிங்கம்,
சென்னை – 91. செல்: 9445102249

உட்புற கோள்களான, புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகிய நான்கு கோள்களுக்கும், அவைகளைச் சுற்றி வரும் வளையங்கள் கிடையாது. அஸ்டிராய்டு மண்டலத்திற்கு வெளியே வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் என்ற நான்கு கோள்களுக்கும், அவைகளைச் சுற்றி வளையங்கள் உள்ளன.

1. சனி கிரகத்தை சுற்றிவரும் வளையங்கள்

சனி கிரகத்தின் வளையங்கள் மட்டும். தனித்துவமான, கவர்ச்சிமிக்க, நன்றாகதெரியக்கூடிய, சுமார் ஒரு கிலோமீட்டர் தடிமன் கொண்ட வளையங்கள் ஆகும். வளையங்களின் விட்டம் 2,82,000 கி.மீ. ஆகும். மொத்தம் ஏழு வளையங்கள் உள்ளன. அவைகளில் பிரகாசமான வளையங்கள் மூன்று. அவை A, B, C என பெயரிடப்பட்டுள்ளன. A மற்றும் B வளையங்களுக்கு இடையே உள்ள இடைவெளி 4700 கி.மீ. ஆகும். இந்த இடைவெளியானது கேசினி (Cassini Division) என்று பெயரிடப்பட்டுள்ளது. ஒளி குறைந்த நான்கு வளையங்களும் D, E, F, G என பெயரிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு வளையமும் தனித்தனி பாதையில் வெவ்வேறு வேகங்களில் சனி கிரகத்தை சுற்றி வருகின்றன. வளையங்கள் யாவும், அஸ்டிராய்டுகள் என்று சொல்லப்படுகிற, சூரியனைச் சுற்றி வரும் பாறைகள், சனி கிரகத்தின் நிலாக்களோடு மோதியதால் ஏற்பட்ட, துகள்கள் மற்றும் பாறைகள் ஆகும். மேற்கண்ட வளையங்கள் வெண்மை நிறத்தில் உள்ளதாக அறியப்பட்டு உள்ளது. வளையங்களின் உயரம் சுமார் பத்து மீட்டர் ஆகும்.

2. வியாழன் கோளைச் சுற்றி உள்ள வளையங்கள்:

1979ஆம் ஆண்டு நாசா (NASA) அனுப்பிய Voyager-1 என்ற விண்கலத்தின் மூலம், வியாழனைச் சுற்றியுள்ள வளையங்கள் கண்டறியப்பட்டன. இவ்வளையங்கள் மூன்று அடுக்காக (3 layers) அமைந்துள்ளன.

3. யுரேனஸ் கோளைச் சுற்றி அமைந்திருக்கும் வளையங்கள்:

இக்கோளைச் சுற்றி 11 பெரிய வளையங்களும், இரண்டு நடுத்தர அளவுள்ள வளையங்களும், ஆக மொத்தம் 13 வளையங்கள் உள்ளன. இரண்டு நடுத்தர அளவுள்ள வளையங்களை, வான் தொலைநோக்கி மூலம் பார்த்தால் மிகவும் பிரகாசமாக தெரியும். ஒன்று சிகப்பு நிறமாகவும் மற்றது நீல நிறமாகவும் தெரியும். 1977ஆம் ஆண்டில் இவ்வளையங்கள் கண்டறியப்பட்டன. வளையங்கள் யாவும், நீர் பனிக்கட்டிகளாலும், தூசி மற்றும் கற்பாறைகளாலும் ஆனவை. சில வளையங்கள் 2500 கி.மீ. அகலம் கொண்டவையாக உள்ளன. வளையங்களின் வயது, யுரேனஸ் கோளின் வயதைவிட குறைவு என்று அறியப்பட்டுள்ளது. அதாவது இவ்வளையங்கள் யுரேனஸ்கோள் உருவான காலத்தில் உருவாகவில்லை. அதற்குப் பிந்திய காலத்தில் உருவானவை, யுரேனஸ் கோளின் நிலாக்களில் ஒன்று, யுரேனஸ் கோளின் ஈர்ப்பு விசையால் ஈர்க்கப்பட்டு, யுரேனஸ் கோளின் மீது மோதியதால் ஏற்பட்ட கற்பாறை துகள்கள், தூசி ஆகியவை நாளடைவில் வளையங்களாக மாறின என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

4. நெப்டியூன் கோளைச் சுற்றி அமைந்திருக்கும் வளையங்கள்:

நெப்டியூன் கோளைச் சுற்றி ஐந்து வளையங்கள் உள்ளன. அவை கல்லி, லீவெர்ரியர், லேசல், அராகோ மற்றும் ஆடம்ஸ் என பெயரிடப்பட்டுள்ளன.

ஆதாரம்: நாசா மற்றும் விக்கிபீடியோ இணையதளம்

கார்காத்தார் திருமண சேவையில் 18 ஆண்டுகள்!
SHRIRAM MATRIMONY SERVICES
ஸ்ரீராம் திருமண தகவல் நிலையம்
SMS Service available
76/1, வ.உ.சி. தெரு, சிதம்பரம்- 608001. Mob: 94862 23030
இப்போது இணையத்தில் உங்கள் SHRIRAM MATRIMONY
www.shrirammatrimony.org
e-mail: matrimonycdm@gmail.com

ஒரு முறை பதிவுக்கட்டணம் மட்டும் - திருமணம் முடியும் வரை இணையதளத்தில் வரன்களை பார்வையிடலாம், கட்டுப்பாடுகள் இல்லை
SMS Service-க்கு தனிக்கட்டணம்.

திருவிளையாடற் புராணம்
28. நாகமெய்த படலம்

– சிவகாமியின் செல்வன்

டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்.

அனந்தகுண பாண்டியனின் சிவநேயம்

அனந்தகுண பாண்டியன் அருங்குணங்கள் கொண்டவன். நற்பண்புடையவன். சோமசுந்தரக் கடவுளின் திருநீறு, திருவைந்தெழுத்து, உத்திராக்கம் ஆகிய இம்மூன்றுமே மெய்ப்பொருள் என்று தெளிந்தவன். இம்மூன்றினிடத்தும் பெரும்பக்தி கொண்டவன். முந்தைய அரசர்களினும் மிகச் சிறந்து விளங்கினான். மன்னவன் எப்படியோ அப்படியே மக்களும். பாண்டிய நாட்டு மக்கள் பக்தியில் சிறந்து விளங்கினர்.

சமணர்களின் சூழ்ச்சி

பாண்டிய நாட்டு மக்கள் சிவபக்தியில் சிறந்து விளங்கியதைக் கண்ட சமணர் எண்ணாயிரவரும் பொறாமையால் சினம் கொண்டனர். 'நெருப்பில் காய்ச்சிய இரும்புபோல' மனம் கொண்ட அவர்கள் பாண்டியனைக் கொல்ல வழி தேடினர். ஒரு பிரம்மாண்ட வேள்வியைச் செய்தனர்.

வேள்வியின்முடிவில் அந்த வேள்விக் குண்டத்திலிருந்து ஓர் அவுணன் வெளிப்பட்டான். அவன் குகையிலிருந்து எழுந்தவன் போன்றிருந்தான். அவன் வாய் படம் போல் இருள் படர்ந்திருந்தது. வாயின் இருபுறங்களிலும் இரு நச்சுப்பற்கள் இருந்தன. ஊழித்தீயை உமிழ்வதுபோல் அவன் இரு கண்களும் பொறி பறந்தன. காண ஒரு மலைபோல் இருந்தான்.

அவன் சமணர்களை நோக்கி "வடவைத்தீயைப் போல தாகமும் பசியும் என்னை வாட்டுகின்றன. இந்த நிலையில் நீவிர் எனக்கிடும் பணி என்ன ?" என்றான்.

உடனே சமணர்கள் "நீ உடனே விரைந்து சென்று பாண்டியனை மதுரையோடு எடுத்து விழுங்கிவிட்டு வருவாயாக" என்றனர்.

நாகவடிவுடைய அவுணனின் இயல்பு

அவுணன் உடனே மிகப்பெரும் பாம்பு வடிவம் எடுத்தான். மதுரையை நோக்கி விரைந்தான். அவன் விடும் மூச்சால் வளியும் தன் வலிமையை இழந்தது. அவன் பார்வையால் பசும்பயிர்கள் கருகின. காடுகளும் சோலைகளும் எரிந்து கருகின. மரங்களில் வாழும் பறவைகளின் சிறகுகள் வேக சுருண்டு கீழே விழுந்தன. நில உலகம் நடுங்கியது. மண்ணைச் சுமக்கும் ஆதிசேடன் அஞ்சினான். கதிரவனும் மதியும் திடுக்கிட்டுக் கலங்கினர். இராகு கேதுகள் அரண்டனர். திசையானைகள் கலங்கின. கூற்றுவனும் அஞ்சிக் குழம்பினான்.

பாண்டியன் சோமசுந்தரக் கடவுளின் அருளைப் பெறுதல்

இதனை அறிந்த அனந்தகுணப் பாண்டியன் ஒன்றும் தோன்றாமல் திருக்கோயில் சென்றான். சோமசுந்தரக் கடவுளை வழிபட்டான். சிவனின் அனுமதி பெற்று, வில் அம்புடன் மதுரையின் மேற்கு எல்லையை அடைந்தான். கொடும் சினத்துடன் தன்னைக் கொல்ல வரும் பாம்பைக் கண்டான். வில்லில் அம்பைப் பூட்டி பாம்பின் மீது எய்தான். ஆனால் பாம்பு வடிவிலிருந்த அவுணன் அம்புகளை எல்லாம் கடித்துத் தடுத்து நிறுத்தினான். இறுதியாக அனந்தகுணபாண்டியன், மிக்க சினத்துடன் சோமசுந்தரக் கடவுளைச் சிந்தித்தான். பின் பிறை போன்றதொரு கணையைக் கையிலெடுத்தான். எய்தான். பாண்டியனின் கணை பாம்பினை வீழ்த்தியது. அதன் உடலை இரு துண்டாக்கியது. உடல் சிதைந்தது. இடிபோல பெருங்குரலை எழுப்பியது. இரத்தம் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடியது. வெட்டுண்டு துண்டுதுண்டான பாம்பின் உடற்கூறுகள் மண்ணிலே புரண்டன. அப்பொழுது அதன் வாயிலிருந்து கொடும் நஞ்சு இருள்போல வெளிவந்தது.

பாம்பின் நஞ்சு எங்கும் பரவுதல்

இருளைப்போல பாம்பின் நஞ்சு மதுரையெங்கும் தொடர்ந்து பரவியது. சோலைகள், கிணறுகள், குளங்கள், நாற்சந்திகள், கல்விச்சாலைகள், கடைவீதிகள், அகழி, மதில், அரண்மனை, மாடங்கள், உப்பரிகைகள், மேடைகள், கோபுரங்கள், அரங்குகள் என அனைத்து இடங்களிலும் விடம் பரவியது. நகர மக்கள் யாவரும் நஞ்சினால் மயங்கினர். வாடினர். உயிர் அலைய உடல் நிலை தடுமாறிய நிலையை அவர்கள் அடைந்தனர்.

பாண்டியனின் விண்ணப்பம்

அனந்தகுணபாண்டியன் மக்களுக்கு வந்த இன்னல்களைக் கண்டு கலங்கி அஞ்சினான். இறைவனிடம் அவர்களுக்காக வேண்டினான். இரங்கிய இறைவனார் தம் திருமுடி மீதிருந்த இளம்பிறையினின்றும் சிறிதளவு அமுதத்தைச் சிந்தச் செய்தார்.

மதுரை மாநகர் நஞ்சு அகன்று தூய்மையானது

இந்த அமுதம் விரைந்து மதுரை மாநகர் முழுதும் பரவியது. அதனால் நஞ்சு நீற்றுப் போய்விட்டது. அதனால் உயிரினங்கள் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பின. மகிழ்வுற்றன. மன நிம்மதியடைந்த மன்னன் அரவணிந்த சடையையுடைய சோமசுந்தரக் கடவுளுக்கு நன்றி சொன்னான். அவரை நாளும் வழிபட்டு நல்லாட்சி செய்து நீடு வாழ்ந்து வந்தான். இறைவனைவேண்டிடஎல்லாம்நடக்கும்.மக்களுக்காக மன்னன் வேண்டில் மகத்தான நன்மைகள் விளையும்.

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

நங்கநல்லூர்

15.4.2022 அன்று சங்கத் தலைவரது வரவேற்புடன் அவரது இல்லத்தில் செயற்குழு கூட்டம் துவங்கியது. மடிப்பாக்கம் பகுதியில் வசித்து வந்த சங்க உறுப்பினர் திரு. V.S. ராமசாமி அவர்களது திடீர் மறைவுக்கும் சங்க செயற்குழு உறுப்பினர் அவர்தம் உறவினர்கள் மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மார்ச் மாத கூட்ட அறிக்கை சங்க செயலாளரால் வாசிக்கப்பட்டது. சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்த சங்க பல்வேறு நிகழ்வுகளையும் பட்டியலிட்டு பேசியது சிறப்பு. பொருளாளர் அளித்த நிதி நிலை விவரம் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. "மே" மாத முதல் வாரத்தில் கோடையினை எதிர்கொள்கின்ற வகையில் நீர்மோர் வழங்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. "மே" மாத இறுதியில் அல்லது ஜூன் மாதம் முதல் வாரத்தில் ஆன்மீக சுற்றுலா சென்றுவர முடிவாகியது.

சங்க செயற்குழு உறுப்பினர் திரு. R. தில்லை கோவிந்தன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

க. சரவணன், தலைவர்.

அண்ணாநகர்

சங்க கூட்டம் 10.4.2022 அன்று கொரட்டூர் சங்க குடியிருப்பில் தொடங்கி நடைபெற்றது. தலைவர் திரு. கோபாலகிருஷ்ணன் அவர்கள் கூட்டத்தை தொடங்கிவைத்து பேசும்போது, சங்கத்திற்கு புதிய வங்கி கணக்கு ஒன்று யூகோ பேங்க், கொரட்டூரில் தொடங்கி இருப்பதாகவும், புழல் திருமூலநாதர் கோவில் அபிஷேக, ஆராதனை, அன்னதானத்திற்கு, வரவு செலவு கணக்குகளை சமர்ப்பித்தும் பொதுக்குழு மற்றும் ஆண்டுவிழாவை ஜூன் மாத இறுதியில் நடத்தலாம் என தெரிவித்தார். அதற்கு உறுப்பினர்கள் ஒப்புதல் தெரிவித்தார்கள்.

செயலாளர் பேசும்போது, நமது சங்க உறுப்பினர் திரு. சௌந்தர் அவர்கள் 28.3.2022 அன்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவி ஏற்று இருப்பதற்கு சங்கத்தின் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்தும், ஆண்டு விழாவை எளிமையான முறையில் நடத்தவேண்டும் எனவும், கூட்டத்திற்கு வரும் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய சங்க பொறுப்பாளர்களையும் சுயஅறிமுகம் செய்து கொள்ளவும், கருத்துகளை சொல்ல அனுமதிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். இதற்கும் உறுப்பினர்கள் ஒப்புதல் தெரிவித்தார்கள். மற்றும் இந்த வருடம் ஆண்டு விழா மலர் போட வேண்டாம் எனவும், அடுத்த வருடம் போடலாம் எனவும் தெரிவித்தார்கள்.

இரண்டு வருட கொரோனா காலத்தில் சங்கத்தின் நிதி வருவாயை நிர்வகித்த துணைத்தலைவர் திரு. இராஜேந்திரன் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. நிறைவாக துணைத்தலைவர் நன்றி தெரிவிக்க கூட்டம் நிறைவு பெற்றது. நன்றி!

என். ஆனந்தகணபதி, செயலாளர் 9094682811

குரோம்பேட்டை

கார்குல செம்மல், சுதந்திரப் போராட்ட வீரர், தியாகி பரலி. சு. நெல்லையப்பர் நினைவு நாளான 28–03–2022 திங்கட்கிழமை அன்று குரோம்பேட்டை G.S.T. Road, தபால் நிலையத்திற்கு அருகிலுள்ள அன்னாரது சிலைக்கு குரோம்பேட்டை சங்க தலைவர் திரு. R.S. அகோரம், சங்க ஆலோசகரும் சென்னை கார்காத்தார் சங்க தலைவருமான திரு. சபா. சிவகுமார் மற்றும் ஆலோசகர்கள் மனிதநேயம் திரு. T.N. முத்துக்குமாரசாமி, திரு. T. முருகேஷ், Dr. U.S.S.R. நடராஜன், Dr. K.K.R. K. குமார் அவர்கள் மாநில பொதுச் செயலாளர் வ.உ.சி. நலப்பேரவை, மாநில கூட்டமைப்பு தலைவர் Dr. K.K.R.K. சுரேஷ், மண்டல செயலாளர் திரு. S.மனோகர், மண்டல துணை தலைவர் திரு. G. தியாகராஜன் மற்றும் நமது சங்கச் செயலர். J. தீபன், சங்க துணைச்செயலர்கள் திரு. M. முருகன்,

திரு. S. கலையரசன் செயற்குழு உறுப்பினர்கள் திரு. A. மூர்த்தி , திரு. R.M. சத்யமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

அவ்வமயம் அன்னார் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆற்றிய அரும்பணி, மக்களுக்கு ஆற்றிய தொண்டு ஆகியவை நினைவு கூறப்பட்டது. குறிப்பாக திரு. U.S.S.R. நடராஜன் பேசுகையில் அன்னார் குரோம்பேட்டையில் வாழ்ந்தபோது அவர் நன்கொடையாக அளித்த 5000 சதுரடி நிலமானது இப்பொழுது யாருக்கும் பயனற்று பாழடைந்து உள்ளது. இந்த நிலத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர முயற்சிகள் செய்தும் எந்த பலனும் இல்லை. எனவே இதனை நமது ஒத்துழைப்புடன் மீண்டும் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று அந்த இடத்தை விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அவர்கள் ஆவன செய்வதாக கூறினார்கள்.

Dr. KKR. சுரேஷ் அவர்கள் மாநில கூட்டமைப்பு சார்பாக வந்திருந்தோர் அனைவருக்கும் காலை சிற்றுண்டியும் நமது சங்கம் சார்பாக அனைவருக்கும் நீர் மோர் வழங்கப்பட்டது. சங்கத் தலைவர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூற, நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

- J. தீபன், செயலர். 9659632577

பெண்ணாகடம்:

கார்காத்த வேளாளர் சங்கத்தின் முதலாவது மங்கல சந்திப்பு, பெண்ணாகடம் சரோ இரத்தின அரங்கத்தில் 16.04.2022 சனிக்கிழமை காலை 9.45 மணியளவில் மங்கல இசையுடன் தொடங்கியது. இறைவணக்கத்துடன், அரங்கம் நிறைந்த கார்குல சொந்தங்களுடன் தொடங்கிய நிகழ்விற்கு, மெய்கண்டார் கோவில் நிர்வாகி, கொத்தட்டை கார்காத்தார் சங்க பொருளாளர் திரு. சீனி. பழமலை பிள்ளை அவர்கள் தலைமையேற்றார். அவர்தம் தலைமையுரையில், பெண்ணாகடம் பகுதி கார்குல மக்களின் நீண்ட நாள் கனவை, நிறைவேற்றித் தந்த மாநிலத்தலைமைக்கு தன் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்தார். கொத்தட்டை கார்காத்தார் சங்க தலைவர் திரு. ஜெ.மு. திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர் திரு. K. சுரேஷ் (எ) ராஜசுந்தரம் பிள்ளை அவர்கள் மங்கல சந்திப்பு வரன்கள் தொகுப்பு புத்தகத்தை வெளியிட முதல் பிரதியை திரு. ஜெ.மு.திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள் பெற்றுக்கொண்டார். முதலில் வரன் பதிவு செய்த திரு. இர. பாலசுப்பிரமணியன் பிள்ளை இரண்டாவது பிரதியை பெற்றுக்கொண்டார். தமிழாசிரியை திருமதி. ஜெ. சித்ரா அவர்கள் 'இல்லறம் நல்லறமாக' என்ற தலைப்பில் உரையாற்றினார். திரு. முத்துசெல்வம் பிள்ளை, திரு. என். முருகன் பிள்ளை, பெண்ணாகடம் சங்க தலைவர் திரு. பொ. சீனிவாசன் பிள்ளை, அகரஆலம்பாடி திரு. வேல்முருகன் பிள்ளை, பொதுச்செயலர். திரு. முத்தையா பிள்ளை, பொருளாளர் திரு. இராமநாதன் பிள்ளை, திரு. கைலை சண்முகம் பிள்ளை மற்றும் திருச்சி பாலசுப்பிரமணியன் பிள்ளை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக மாநிலத் தலைவர் திரு. சுரேஷ் பிள்ளை அவர்கள் சிறப்புரையாற்றினார். தம் உரையில், கார்குல சொந்தங்கள் பெரிய எதிர்பார்ப்புகளையும், அதிகமான பொருத்தங்களையும் பார்க்காமல், தகுந்த குணம் நிறைந்த வரன்களை தேர்வு செய்து இம்மங்கல சந்திப்பின் நோக்கம் வெற்றியடைய உதவவேண்டும் என்றும், இதுபோன்ற பலநிகழ்வுகளை இச்சங்கம் நிகழ்த்த வாழ்த்தினார். மேடையில் இருந்த சங்க நிர்வாகிகளுக்கு மங்கல சந்திப்பு விழாக்குழுவினர் சார்பாக நல்லாடை அணிவிக்கப்பட்டது. மங்கல சந்திப்பு நிகழ்ச்சியை திருச்சி கார்காத்தார் சங்கத்தினர் சிறப்பாகநடத்தினர். முன்னாள் தலைமையாசிரியர் திரு. த. மயில்வாகனன் அவர்கள் தொகுத்து வழங்கினார். மாநில துணைத்தலைவர் திரு. தி. திருநாவுக்கரசு பிள்ளை அவர்கள் மங்கல சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று பெருமைப்படுத்திய மாநில, மண்டல, மாவட்ட மற்றும் வட்ட நிர்வாகிகளுக்கும் மிகுதியாக பங்கேற்று சிறப்பித்த கார்குல சொந்தங்களுக்கும் இந்நிகழ்ச்சி சிறக்க உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். அனைவருக்கும் வழங்கிய மதிய உணவும், மங்கல சந்திப்பு முதல் நிகழ்வும் சிறப்பாக அமைந்ததாக அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர்

அரியலூர் :

சங்கத்தின் தமிழ் புத்தாண்டு குடும்ப விழா 15–4–2022 அன்று சங்க பொருளாளர் வெ. சிவசங்கர் கட்டடத்தில் மாநில பொருளாளர் கோ. இராமநாதன் அவர்கள் தலைமையில், சங்க தலைவர் கு. பாலகிருஷ்ணன் வரவேற்புரையுடன், மண்டல செயலாளர் இரா. ரவீஸ்வரன், முன்னாள் தலைவர். ப. இளங்கோவன், செயலாளர் த. செந்தில்குமார் முன்னிலையில், மாநில தலைவர் டாக்டர். K.K.R.K. சுரேஷ் (எ) ராஜசுந்தரம் பிள்ளை, மாநில அமைப்பு செயலாளர் கைலை. சண்முகம் ஆகியோரின் வாழ்த்துரையுடன், திருச்சி சங்க முன்னாள் செயலாளர் சிந்தனைச்செல்வர் திரு. க. சிவகுருநாதன் அவர்களின் சிறப்பு சொற்பொழிவுடன் நடைபெற்றது.

திறன்மிகு குழந்தை விருது மற்றும் பல விருதுகள் பெற்ற 4–ம் வகுப்பு மாணவி. பி.கீ. நிதார்தினி

கண்ணைக் கட்டிக்கொண்டு ஜனகனமன தேசிய கீத பாடலை பியானோவில் வாசித்தார்.

பின்னர் குழந்தைகளுக்குான விளையாட்டுபோட்டி, பேச்சுப்போட்டி, நினைவாற்றல்போட்டி, ஓவியபோட்டி மற்றும் பரதநாட்டியம் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் மற்றும் கலந்துகொண்ட குழந்தைகளுக்கு ஆறுதல் பரிசுகள் திருச்சி சங்க பொருளாளர் நா. பாண்டியன், S. முத்துகுமரசாமி கல்லூரி பேராசிரியர் (ஓய்வு), S. அம்பலவாணன் தலைமை ஆசிரியர் (ஓய்வு) A.S. ராதாகிருஷ்ணன் VAO (ஓய்வு) ஆகியோர் வழங்கினர். சங்க பொறுப்பாளர்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் கார்குல சொந்தங்கள் குடும்பத்துடன் பங்கேற்றனர். இரவு சிற்றுண்டியுடன் பொருளாளர் வெ. சிவசங்கர் நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது.

தமிழ் புத்தாண்டு முதல் அரியலூர் நகர கார்காத்தார் சங்கம் – ஸ்ரீராமகிருஷ்ண சேவா சங்கமும் இணைந்து கோடைகாலம் வரை இலவச சுயசேவை தண்ணீர் – நீர்மோர் ராஜாஜி நகர் சங்க தலைவர் இல்லம் முன்பு வழங்கப்படுகிறது.

- T. செந்தில்குமார், செயலாளர். 9629481601

விக்கிரமங்கலம் :

சங்க மகளிர் அணி கூட்டம் 12–2–22 அன்று கருப்ப பிள்ளை வீட்டில் இரா. இலஞ்சியம் தலைமையில் நடைபெற்றது. 21 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அம்பாப்பூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் வங்கி கணக்கு தொடங்கவும், துணை தலைவராக பு. ஜெயந்தி அவர்களும் இணைசெயலாளர்கள் சி. கனிமொழி, R. கலா தேர்வு செய்யப்பட்டனர். மாத சந்தா ரூ. 20/– என்றும், இரண்டு மாதத்திற்கு ஒரு முறை இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை நடத்துவது எனவும், கௌரவத்தலைவராக தேர்வு செய்யப்பட்ட திருமதி. பரிமளா பாலசுப்பிரமணியம் இல்லத்தில் கூட்டம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. திருமதி. செ. சிவகாமி நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

காட்டுமன்னார் கோயில்

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 03.04.2022 அன்று துணைத்தலைவர் திருமதி. S. லலிதா அம்மையார் இல்லத்தில் அறுசுவை விருந்துடன் நடைபெற்றது. தலைவர் திரு. R. பத்மநாபன் பிள்ளை தலைமையில் கூட்டம் துவங்கியது. செயலர் திரு. V.R. ஞானம் அனைவரையும் வரவேற்று பேசினார். இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் ஆண்டு விழா சிறப்பாக நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. துணைத்தலைவர் திரு. S. ஜெயசீலன் சங்க பொறுப்பாளர்கள் தங்களுக்கு தெரிந்த வரன்களை பற்றி ஒருவருக்கு ஒருவர் கலந்து பேசலாம் எனவும் மேலும் சங்க பொறுப்பாளர்கள் அனைவரும் குடும்பத்தாருடன் சுற்றுலா சென்று வரலாம் என்று கூறிய கருத்தும் ஏகமனதுடன் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இணைச்செயலர் திரு. K. இராஜீ அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- V.R. ஞானம்,
செயலர்.
9444876164

சீர்காழி

சங்க செயற்குழு கூட்டம் 02–04–2022 அன்று சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. S. முருகன் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. செயலர் K. சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து கார்குல சொந்தங்களுக்கும் நன்றியை தெரிவித்தார்கள். புதிய பொறுப்பாளர்களாக பதவி ஏற்றவர்கள் தலைவர்: K. சுகுந்தவனநாதன் பிள்ளை, செயலர்: G. அமுதன் பிள்ளை, பொருளாளர் : C. அகோரம் பிள்ளை ஆகியோர் இரண்டு வருடங்கள் (01–04–2022 முதல் 31–03–2024) பொறுப்பு வகிப்பார்கள். மேலும் துணைத்தலைவராக திரு. V. அகோரமூர்த்தி பிள்ளை, திரு. D. தனகோபால் பிள்ளை, திரு. K. ரவிக்குமார் பிள்ளை, திரு. K. ஜெயச்சந்திரன் பிள்ளையும், வட்டார பொறுப்பாளர்களாக திரு. K. அசோகன் பிள்ளை, திருப்பங்கூர். D. முருகன் பிள்ளை, வைத்தீஸ்வரன் கோயில். M. நடராஜன் பிள்ளை, சீர்காழி. J. சுந்தரர் பிள்ளை, வரவுகுடி ஆகியோர் நியமனம் செய்யப்பட்டார்கள். திரு. N. சோமசேகர் பிள்ளை, பாராட்டி பேசினார்கள். S. முருகன் பிள்ளை தான் பதவியில் இருந்த காலத்தில் உறுதுணையாக இருந்து சங்கத்தை சிறப்பாக செயல்பட உதவிய கார்குல சொந்தங்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். திரு. V. தியாகராஜன் பிள்ளை, கிராமத்திற்கு சென்று செயற்குழு கூட்டம் நடத்த வேண்டும் என்றும், நமது கார்குல சொந்தங்களின் திருமணம் மற்றும் எந்த காரியத்திற்கும் நமது சங்கத்திலிருந்து உறுப்பினர்கள் சென்று அவர்களுக்கு நம்மால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்து நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உதவ வேண்டும் என்று கூறினார்கள். நமது சங்கத்தின்

பொதுக்குழு கூட்டம் 24–04–2022 அன்று நடைபெறும் என்று திரு. K. சுகுந்தவனநாதன் பிள்ளை கூறினார்கள். திரு. S. பாலசுப்பிரமணியன் பிள்ளை அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

- G. அமுதன் பிள்ளை,
செயலாளர்.

இளந்தோப்பு

இளந்தோப்பு கிராமத்தை சேர்ந்த திருமதி. பூங்குழலி அவர்கள் சென்னை ஐ.ஐ.டி யின் வேதியல் துறையில் பணி புரியும் விஞ்ஞானி ஆஸ்துமா, மூட்டு அழற்சி, பூஞ்சை, சர்க்கரை நோய்களுக்கான மருந்துகள் பசுமை தொழில் நுட்ப முறையில் உருவாக்குவதை கண்டறிந்து அதற்கு மத்திய அரசிடமிருந்து காப்புரிமை பெற்றதற்கு சங்க கூட்டத்தில் பாராட்டுகளும், வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டது. இளந்தோப்பு கிராமத்தை சேர்ந்த திரு. V. மோகன் அவர்களின் தாயார் திருமதி. ஞானாம்பிகை அவர்கள் இயற்கை ஏய்தததற்கும், திரு. வேலாயுத செல்வம் அவர்களின் பெற்றோர்கள் திரு. M. ராஜப்பா, திருமதி. வசந்தா அவர்கள் இயற்கை எய்தியதற்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. திரு. R. ஞானசேகரன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– சீனுவாசன், செயலாளர்.
9487312591

மயிலாடுதுறை :

செயற்குழு கூட்டம் 10–04–22 அன்று சங்கக் கட்டிடத்தில் கூடியது. தலைவர் திரு. S. அன்பழகன் அவர்கள் தலைமையேற்க மகளிர் அணியின் இறைவாழ்த்துப்பாட கூட்டம் இனிதே தொடங்கியது. இளைஞர் அணி பொறுப்பாளர் திரு. S. விவேகானந்தன் வரவேற்புரை நல்கினார்.

செயலாளர் திரு. S. முருகேசன் மாதாந்திர அறிக்கை வாசிக்க தொடர்ந்து பொருளாளர் திரு. R. சந்திரசேகரன் அவர்கள் 2021 – 2022 ஆண்டிற்கான வரவு செலவு கணக்குகளை சமர்ப்பித்தார். அதற்கு செயற்குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

திரு. S. அன்பழகன் அவர்கள் நடந்து முடிந்த மகளிர் தின விழாவினை சிறப்பாக செய்திட்ட மகளிர் அணியினரை பாராட்டி பேசினார். பின்னர் பேசிய மேனாள் தலைவர் திரு. R. பாலசுப்ரமணியன் அவர்கள் மாநில தேர்தலில் ஓட்டுரிமை கோரும் 3–ம் நபர் பற்றி கூறி திரு. G. முருகையன் அவர்களை முன் மொழிந்தார். அவரை ஏகமனதாக அனைவரும் தேர்வு செய்தனர் அதே போல் மண்டல பொறுப்பிற்கு மகளிர் அணியின் சார்பாக மேனாள் மகளிர் அணி பொறுப்பாளர் திருமதி. தமிழ்செல்வி சாமிநாதன் அவர்களையும் இளைஞர் அணி சார்பாக திரு. ஜெயச்சந்திரன் அவர்களையும் ஒரு மனதாக செயற்குழுவினரால் தேர்வு செய்யப்பட்டனர்.

கட்டிடத்தில் உள்ள மரவேலைகள் செய்வது எனவும், ஜுன் மாதம் நம் இன கார்குல மக்களில் பணி ஓய்வு பெற்றவரையும், பதவி உயர்வு பெற்றவர்களையும் பாராட்டு விழா நடத்துவது எனவும் தீர்மானம் செய்யப்பட்டது.

இளைஞரணி பொறுப்பாளர் திரு. G.V. கவாஸ்கர் அவர்கள் நன்றியுரை நல்க சென்ற மாதத்தில் இறைவனடி சேர்ந்த நம் கார்குல உறவுகளுக்கு இரங்கல் தெரிவித்து ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டு கூட்டம் நிறைவடைந்தது.

- M.S. முருகேசன்,
செயலர்.

செம்பொன்னார்கோவில்

சங்க கூட்டம் 06–04–22 அன்று சிறப்புத் தலைவர் திரு. மு. சபாநாயகம் பிள்ளை அவர்கள் தலைமையில் அவர்களே இறைவணக்கம் பாடிடவும், சங்க செயலாளர் திரு. ச. நெடுஞ்செழியன் வரவேற்புரை ஆற்றிடவும், சங்க சென்ற மாத கூட்ட அறிக்கை மண்டல செயலாளர் திரு. கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும், கூட்டம் அதனை ஏற்றது. சிறப்புத்தலைவர் அவர்களும், முன்னாள் மாநில துணைதலைவர் திரு. கணதிநடனம் அவர்களும் நமது சங்க உறுப்பினர்களின் தொழில் பெரும்பாலும் வேளாண்மை தொழிலில் ஈடுபட்டுள்ளதால் குறிப்பிட்ட காலத்தில் வேளாண்மை தொழிலை செம்மையாக செயல்பட்டு வேளாண்மை நல்ல லாபம் அடைவதற்கு உரிய வழிமுறையில் செயல்பட வலியுறுத்தி பேசினார்கள். மேலும் 27.3.2022 அன்று திருக்கடவூர் கோவில் மகா கும்பாபிஷேக விழாவிற்கு 27–வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் நடை பயணமாக செல்லும் போது செம்பொன்னார் கோவில் ஸ்ரீ மருவார்குழலி உடனுறை சுவர்ணபுரீஸ்வரர் ஆலயத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு ஆசி வழங்கிய போது செம்பொன்னார் கோவில் நகர கார்காத்தார் சங்க பொறுப்பாளர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு குருமகா சந்நிதானத்திற்கு சால்வை

அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. சந்நிதானம் அவர்களும் பொறுப்பாளர்களுக்கு சால்வை அணிவித்து ஆசிர்வாதம் வழங்கினார்கள். சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி வழங்குவதற்காக பெற்ற விண்ணப்பங்களுக்கு அவர்கள் படிக்கும் வகுப்புக்கேற்றவாறு கீழ்க்கண்ட விவரபடி சங்க நிதியிலிருந்து சங்க பொறுப்பாளர்களின் அனுமதி பெற்று ரொக்கமாக வழங்கப்பெற்றது.

வ.எ	பெற்றோர் பெயர்	மாணவன் – மாணவி பெயர்	கல்வி பயிலும் வகுப்பு	வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகை.
1.	T. ரமேஷ் பிள்ளை	R. கோபிகா	12–ஆம் வகுப்பு	ரூ. 1200/–
2.	T. ரமேஷ் பிள்ளை	R. மித்ரா	9–ஆம் வகுப்பு	ரூ. 900/–
3.	க. செல்வம் பிள்ளை	S. ராகுல்ராஜி	பாலிடெக்னிக் I year	ரூ. 1100/–
4.	R. அருள்பிரகாசம் பிள்ளை	A. அனன்யா	ஆறாம் வகுப்பு	ரூ. 600/–
5.	R. அருள்பிரகாசம் பிள்ளை	A. அபிஷேக்	மூன்றாம் வகுப்பு	ரூ. 500/–
6.	R. கார்த்திகேயன்	K. இந்துஜா	9–ஆம் வகுப்பு	ரூ. 900/–
7.	R. கார்த்திகேயன்	K. மதுமித்ரா	2–ஆம் வகுப்பு	ரூ. 500/–
8.	க. சந்தோஷ்	S. ரெத்தினகுமார்	2–ஆம் வகுப்பு	ரூ. 500/–

மேலே கண்டுள்ள விவரபடி ரூ. 6200/– வழங்கப் பெற்றது. திரு. க. ராஜா அவர்கள் நன்றி கூறிட கூட்டம் நிறைவு பெற்றது.

S. நெடுஞ்செழியன், செயலாளர்.

பரசலூர்

14–4–2022 அன்று பரசலூர் ஆனந்தபுரம் திரு. V. சிவக்குமார் இல்லத்தில் திருமதி. சபிதா சிவக்குமார் இறைவணக்கம் பாட, திரு. V. சிவக்குமார் பிள்ளை வரவேற்புரைநிகழ்த்த,தலைவர்திரு.க.கோவிந்தராஜன் பிள்ளை தலைமையில் தமிழ்புத்தாண்டு கூட்டம் சுபகிருது பஞ்சாங்கம் வாசித்தல் நிகழ்வுடன் கூட்டம் துவங்கியது. செயலர் சென்ற மாத கூட்ட அறிக்கையையும், பொருளர் நிதிய அறிக்கையையும், தலைவர் கார் நிதிய அறிக்கையையும் வாசிக்க கூட்ட உறுப்பினர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க பொறுப்பாளர்கள், மகளிரணி பொறுப்பாளர்கள் தருமை ஆதீனம் 27–வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களிடம் புது வருட பஞ்சாங்கம் சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்டு அருளாசி பெற்றனர்.

கூட்டத்தில் 60–க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பரசலூர் சங்கத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று பெரும்பாலான உறுப்பினர்கள் கருத்துக்கள் தெரிவித்தனர். வருகிற மாநிலத்தேர்தலில் பரசலூர் சங்கத்தின் சார்பாக செயற்குழு உறுப்பினர் திரு. R. கனகசபையை, மாநில துணைத்தலைவராக நியமிக்கச் செய்வது என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. 17.4.2022 ஞாயிறு அன்று தலைவர் க. கோவிந்தராஜன் அவர்களது பெரு முயற்சியில் 20 பேர் கொண்ட குழு நவகிரக ஆலயம் ஆன்மீகப் பயணம் சென்று வந்தது குறிப்பிடதக்கதாகும். மாநில பொறுப்பாளர்களுக்கு பஞ்சாங்கம் தபாலில் அனுப்பப்பட்டது. பரிசு குலுக்கலில் ஆண்களுக்கான பரிசை N. நரேஷும், பெண்களுக்கான பரிசை M. லதாவும் V. சிவக்குமார், S. சபீதா வழங்க பெற்றுக்கொண்டனர். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் இரவு உணவு V. சிவக்குமார் சபீதா குடும்பத்தினரால் வழங்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு திரு. G. சேகர் பிள்ளை அவர்கள் சால்வை அணிவித்தார்கள். திருமதி. செந்தமிழ்ச்செல்வி இராமலிங்கம் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

- V. கண்ணன், செயலர்.

ஆக்கூர்

சங்க கூட்டம் 10–04–2022 அன்று ஆக்கூர் ஸ்ரீதான்தோன்றியப்பர் கோவிலில் தலைவர் திரு. G. செல்வக்குமார் பிள்ளை அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை அவர்கள் இறைவணக்கம் பாடி வரவேற்புரையாற்றினார். கௌரவத்தலைவர் திரு. Dr. K. பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்கள், தலைமை உரை ஆற்றும் போது, உறுப்பினர்கள் அனைவரும் கருத்தொற்றுமையுடன் செயல்பட்டு சங்கம் சிறப்பாகச் செயல்பட ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டு உறுப்பினர்களுக்கு ''சுபகிருது'' ஆண்டு பஞ்சாங்கம்

வழங்க ஆலோசனை தெரிவித்தார்கள். தலைவர் திரு. G. செல்வக்குமார் பிள்ளை மூத்த உறுப்பினர், திரு. G. பிரகதீஸ்வரன் பிள்ளை அவர்கள், பேசினார்கள். செயலர் திரு. R. கோவிந்தராசு பிள்ளை அவர்களால் சென்றக் கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. தொடர்ந்து திரு. M. சுந்தரேசன் பிள்ளை, பொருளர் அவர்களால் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட, சங்கம் அதனை கரவொலி மூலம் ஏற்றுக்கொண்டது.

திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை அவர்களால் தமிழ்புத்தாண்டு அன்று மாலை 7.00 மணியளவில் ஆக்கூர், சிவன்கோவில் பஞ்சாங்கம் படனம் (படித்தல்) நிகழ்வு நடைபெற்றது. அதற்கான ஏற்பாடுகளை தலைவர் திரு. G. செல்வக்குமார் பிள்ளை அவர்கள் செய்திருந்தமை பாராட்டிற்குரியது.

- G. செல்வக்குமார், தலைவர். 9942480320

மணிக்கிராமம்

சங்க கூட்டம் 15.03.2022 / 14.04.2022 ஆகிய தேதிகளில் ஸ்ரீ திருமேனி அழகர் கோவிலில் சங்க தலைவர் திரு. ஆ. சிங்காரவேலன் தலைமையில் நடைபெற்றது. பொருளர் இறைவணக்கம் பாட தலைவர் சிவபுராணம் பாடினர். செயலர் திரு. G. அன்பழகன் சென்ற மாத அறிக்கை வாசிக்கவும் பொருளர் திரு. T. கபிலன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை ஏற்றுக்கொண்டது. மாரியம்மன் கோவில் வருட பிறப்பு அன்று வீதி உலா சந்தனகாப்பு அலங்காரம் ஆகியவற்றை உறுப்பினர்கள் திரு. A. சிவராமன், திரு. T. ரவிசங்கர், திரு. S, செல்வம் ஆகியோர் சிறப்பாக செய்து இருந்தார்கள். அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக பாராட்டு தெரிவிக்கப்பட்டது. சங்க முன்னாள் தலைவர் திரு. A. சந்திரசேகரன் பிள்ளை இயற்கை எய்தியதற்கு இரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன், செயலர்.

பூம்புகார்

சங்கக் கூட்டம் 03–04–2022 அன்று செயலர் பரணீதரனுடைய இல்லத்தில் தலைவர் திரு. R.S. வரதராஜன் தலைமையில் துணைத்தலைவர் திரு. V.S. இராஜேந்திரன் முன்னிலையில் செயலர் திரு. பரணீதரனுடைய இறைவணக்கத்துடன் துவங்கியது.

செயலரின் வரவேற்புரைக்குப்பின் தலைவர் சிறப்புரை ஆற்றினார். திரு. V.S. சந்தானம் அவர்கள் ஏயர்கோன் கலிக்காம நாயனார் பற்றி உரை நிகழ்த்தினார். தலைவர் திரு. வரதராஜன் அவர்கள் தமது 73–ஆவது பிறந்த நாளை முன்னிட்டு உறுப்பினர்களுக்குப் பஞ்சாங்கம் வழங்கி சிற்றுண்டி மற்றும் தேநீர் விருந்தளித்தார். உறுப்பினர்கள் அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்தும் நன்றியும் தெரிவித்தனர்.

எதிர்வரும் கல்வியாண்டில் கல்வி உதவித்தொகை பெற உறுப்பினர்கள் விரைவிலேயே விண்ணப்பம் அளித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

மணிக்கிராமம் கார்காத்த சங்கத்தலைவர் திரு. சந்திரசேகர் பிள்ளை அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இறுதியில் பொருளர் திரு. ஜெயபாலன் அவர்களுடைய நன்றியுரைக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- M. பரணீதரன், செயலர். 9443574217

மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு கார்காத்தார் சங்க மாதாந்திரக் கூட்டம் 21–04–2022 அன்று திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் துவங்கியது. சங்க செயலாளர் திரு. R.K. ராஜசேகரன் அவர்கள் வரவேற்று பேசினார்கள்.

தமிழ் புத்தாண்டுக்கு "சுபகிருது" வருட சுத்த வாக்கிய பஞ்சாங்கம் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கியமைக்கு சங்க உறுப்பினர்கள் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்தனர். தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் நன்றி கூற அனைவராலும் தேசிய கீதம் பாடப்பட்டு சங்க கூட்டம் இனிதே நிறைவேறியது.

- B. இலட்சுமணன், தலைவர். 9443783743

விசலூர்

சங்க உறுப்பினர்கள் சந்தாதொகை கொடுத்து சங்கத்துக்கு வலு சேர்த்திடவும் வரவிருக்கும் மாநில கார்காத்தார் சங்க தேர்தலில் விசலூர் சங்கத்தில் இருந்து மாநில துணைத்தலைவர், மண்டலசெயலாளர் ஏதாவது ஒரு பொறுப்பை செம்பை ஒன்றியமும் அதை சுற்றி உள்ள சங்கமும் மாநில சங்கமும் சேர்ந்து விசலூர் சங்கத்துக்கு ஒதுக்குமாறு பணிவன்போடு கேட்டுகொள்கிறோம். சங்க பொருளாளர் S. கந்தசாமி பிள்ளை திருமண விழாவில் சங்கம் சார்பாக அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மணமக்களுக்கு சந்தனமாலை அணிவித்து வாழ்த்து மடல் கொடுத்து வாழ்த்தப்பட்டது.

– செயலர், பாபு (எ) ராமசெல்வம், 9750806991

நெடுங்காடு :

சங்க கூட்டம் நெடுங்காடு திரு. செல்வகுமார் இல்லத்தில் 3–4–22 அன்று நடைபெற்றது. சுபகிருது ஆண்டு பஞ்சாங்கம் அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது. 16–4–22 அன்று சித்திரை நிறைமதி விழா வரிச்சிக்குடியில் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

44–வது நிறைமதி விழா – வரிச்சிக்குடி, பெருமாள் கோவில் தெரு, திரு. G. ரவிச்சந்திரன் பிள்ளை இல்லத்தில் நடைபெற்றது.

திரு. கணபதி சுப்பிரமணியன் பிள்ளை இறைவணக்கம் பாடினார், தியாகி. திரு. V. வேலாயுதம் பிள்ளை வரவேற்புரை ஆற்றினார். திரு. ப. பாலசுப்பிரமணியன் – செயலர், ஆண்டறிக்கை வாசித்தார். திரு. R. மணிவேலன் – பொருளாளர் சங்க நிதியறிக்கையும், திரு. ராகவன் – கார்நிதிய அறிக்கை வாசித்தார்கள்.

விருந்தினர்களான திரு. கணபதி நடனம் மற்றும் திருமதி. கணபதி நடனம், காளியாகுடி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. சரஸ்வதி பாண்டியன் அவர்களுக்கு பொன்னாடை போற்றி, நினைவுப்பரிசும் அளிக்கப்பட்டது. திரு. கணபதி சுப்பிரமணியன், திரு. ப. பாலசுப்பிரமணியன், திரு. சாய்முரளி, திரு. K.S. விஜயன், திரு. A.V. பரமேஸ்வரன், திரு. M.C. செல்வராஜ், திருமதி. சரஸ்வதி, திரு. வடிவேல் பிள்ளை அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

புதுப் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

தலைவர் – திரு. பன்னீர்செல்வம் பிள்ளை, துணைத் தலைவர் – திரு. S. பத்மநாபன் பிள்ளை, செயலர் – திரு. G. செல்வக்குமார் பிள்ளை, பொருளாளர் – திரு. K.S. கணபதி சுப்பிரமணியன் பிள்ளை, இளைஞரணி செயலர் – திரு. K. ராகுல், மகளிர் அணி செயலர் – திருமதி. K.V. விஜயா, திருமதி. அருள்மணி சிவகுமார்,

சிறப்பு பரிசு : முதல் பரிசு – திரு. பன்னீர்செல்வம், இரண்டாம்பரிசு – திருமதி. செல்விபாலசுப்பிரமணியன், மூன்றாம் பரிசு – திரு. நெடுஞ்செழியன். நன்றியுரை : திரு. முத்துக்குமாரசாமி, அனைவருக்கும் நிலா விருந்து அளிக்கப்பட்டது. இல்லத்தலைவருக்கு தியாகி. V. வேலாயுதம் பிள்ளை பொன்னாடை போர்த்தி சிறப்பு செய்தார்.

- P. பாலசுப்பிரமணியன்,
செயலர்.

கும்பகோணம்

03–04–2022 அன்று சங்கத்தின் மங்கல சந்திப்பு குழுவினர் வரன் விபரப்பட்டியலை திருலோகி அருள்மிகு சுந்தரேஸ்வர் ஆலயம் சென்று சிறப்பு அர்ச்சனை வழிபாடு செய்தனர். நிகழ்ச்சியில் வரன்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

10–04–2022 அன்று இராமகிருஷ்ணா ஹாலில் காலை 8.00 மணி அளவில் சுயம்வர பார்வதி கலா ஹோமம் நடைபெற்றது. 10.00 மணி அளவில் A.S. பழனி இந்துமதி தம்பதியினர் விளக்கேற்ற சங்க தலைவர் T.M. வைத்தியநாதன் தலைமையில் திருமதி. கலையரசி அவர்கள் இறைவணக்க வாழ்த்துடன் திரு. MRK. பாண்டியன் வரவேற்றார். முன்னிலை வகித்த து.த. N. சுப்புராயன் வாழ்த்துரை வழங்க செயலாளர் S. விஜயகுமார் மங்கல சந்திப்புரையில் 1997–ல் ஜாதக பரிவர்த்தனை (மங்கலசந்திப்பில்) தொடங்கி வைத்த குடவாசல் திரு. K. செல்வ தியாகராஜன் மற்றும் குடந்தை C. கண்ணன் ஆகியோர் 26–வது மங்கல சந்திப்பில் நினைவு கூறப்பட்டார்கள். து.செ. A.S. பழனி அவர்கள் மங்கல சந்திப்பு குழுவினர் M. சாமிநாதன், V. சிவகுமார், S. குணசீலன் ஆகியோரின் சிறப்பான பணிக்கும் நன்றி கூறினார்கள். நிகழ்ச்சியில் பதிவு செய்யப்பட வரன்களை திரு. S. உதயகுமார், திருமதி. மைதிலி வைத்தியநாதன் அவர்கள் அறிமுகப்படுத்த காணொளி வாயிலாக நிழல் படத்தை திரு. B. முத்துக்குமரன் காட்சிபடுத்தினார்கள். மதிய உணவுக்குப்பின் விழா தொடர்ந்து நடைபெற்று 3.00 மணி அளவில் நிறைவுற்றது.

- S. விஜயகுமார், செயலாளர்.

தஞ்சாவூர்

செயற்குழுக் கூட்டம் 27–03–2022–அன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. K. தண்டாயுதபாணி தலைமை வகித்தார்கள். திருமதி. R. கலைச்செல்வி வரவேற்று பேசினார்கள். சங்க செயலாளர் திரு. S. மதியழகன் இதுவரை இரண்டு ஆண்டுகளில் நடைப்பெற்ற சங்கப் பணிகளை எடுத்துரைத்தார்கள்.

திரு. K. வேல்முருகன் M.E., Ph.D., அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். அவர்கள் தனது உரையில் "தமிழும் தமிழர் வாழ்வும்" என்ற தலைப்பில் சங்கத் தமிழ் நூல்கள், நமது வாழ்வு செம்மையாகவும் சிறப்பாகவும் இருக்கத் தேவையான வாழ்வியல் முறைகள், எண்ணங்கள், உணர்வுகள், செயல்பாடுகள், அனைத்தையும் வகுத்து, தொகுத்து, எளிதாக சொல்லுகின்றன என்றும், ஆசனங்கள், பிராணாமத்தை பற்றியும் அதன் நன்மைகளைப் பற்றியும் திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளதை கோடிட்டுக் காட்டினார்கள். இன்றைய அவசர வாழ்க்கைமுறை வெளி சுழல் அதனால் உண்டாகும் மன அழுத்தத்தின்

தீர்வு சங்க தமிழ் நூல்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றும், நமது கார்குல சொந்தங்கள் சங்கத்தமிழ் நூல்களைப்படித்து அவர்கள் வாழ்வு மேம்பட்டு சிறக்க வேண்டுகிறேன் என சிறப்புரையாற்றி முடித்தார்கள்.

பணி ஓய்வுப்பெற்ற திரு. S. ராஜ்குமார் மற்றும் திரு. S. முரளி, சர்க்கரை ஆலை திரு. J. மனோகர் (Pharm Product) மற்றும் திரு. பாலச்சந்திரன் ரயில்வே ஓர்க்ஷாப் பொன்மலை ஆகியோருக்கும் நமது சங்க உறுப்பினர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள். திருமதி. T. துர்க்கா செல்வி திருஞானசம்மந்தம் அவர்களுக்கு திரு. R. கலைச்செல்வி பொன்னாடை போர்த்தியும், திருமதி. V. காந்திமதி வன்மீகலிங்கம் மற்றும் திருமதி. R. லதா ராஜசேகரன் நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்கள்.

திருமதி. அ. பானுமதி, பணி ஓய்வுப் பெற்றவர்களை வாழ்த்தி பேசினார்கள். புதிய உறுப்பினர்கள் (6) பேர் தம்மை அறிமுகம் செய்து கொண்டார்கள்.

நமது சங்கத்திற்கு திருமதி. B. செந்தாமரை கண்ணன் அவர்கள் தனது புதல்வர் திருமண விழாவினை முன்னிட்டு ரூ. 10,000/– வழங்கினார்கள். காமதேனு அறக்கட்டளைக்கு திருமதி. R. கலைச்செல்வி ரூ. 5,000/– நன்கொடை வழங்கினார்கள். இருவருக்கும் பாராட்டும், நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் வந்திருந்த அனைவருக்கும், மதிய உணவு மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கும் சங்க நிர்வாகிகளுக்கும் ‘‘பொன்னாடைகளை போர்த்தி சிறப்பு செய்த திருமிகு. S. திருஞானசம்மந்தம் மற்றும் திருமதி. T. துர்க்கா செல்வி அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் மனமார்ந்த நன்றியும், பாராட்டுக்களையும் சங்கத்தின் சார்பாக தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக திரு. S. பாலசுப்ரமணியன் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

S. மதியழகன்,
செயலாளர்.

இராதாநல்லூர்

மாதாந்திர கூட்டம் 17–04–2022 அன்று தலைவர் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயலர் RMA. செந்தில் அவர்கள் வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 2022–ம் ஆண்டிற்கான சந்தாதொகை (ரூ. 100/– வீதம்) நிலுவையை வசூல் செய்ய பொருளாளர் M. சீனிவாசன் அவர்களை கேட்டுக்கொண்டும், ஸ்ரீ மாரியம்மன் கோயில் தீமிதி உற்சவம் 15.04.2022 அன்று திருகாப்பு அணிவித்தல் விழாவை தொடர்ந்து நடைபெற உள்ள விழாக்களுக்கு அனைவரும் ஒத்துழைப்பு அளித்து 24–04–2022 அன்று நடைபெற உள்ள தீமிதி விழா சிறப்பாக நடைபெற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட தீர்மானிக்கப்பட்டது.

பொருளாளர் M. சீனிவாசன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– தி. முத்துக்குமரசாமி, தலைவர்.

சங்கரன்கோவில்

சங்கரன்கோவில் சங்கத்தின் பத்தாம் ஆண்டு ஐம்பெரும்விழா சங்கரன்கோவில் கிருஷ்ணா மஹாலில் 10–4–2022 சிறப்பாக நடைபெற்றது.

திருமதி. எஸ். பவானி குத்துவிளக்கு ஏற்றினார். தலைவர் திரு. என். கோமதிநாயகம் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். ஆசிரியை திருமதி. எஸ். பார்வதி சிவகாமிநாதன் வர்ணனையுடன் விழா துவங்கியது. மகளிர் அணித்தலைவி டாக்டர். கோ. அகிலாண்டபாரதி அவர்கள் பலவிதமான விளையாட்டு போட்டியினை நடத்தினார்கள். விளையாட்டில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மற்றும் பெரியவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் சிறப்பாகவும் வெகு அற்புதமாகவும் சிலம்பாட்டம் ஆடிய இராஜவல்லிபுரம் திரு. இரத்தினம் பிள்ளை மகன் (7–ம் வகுப்பு பயிலும்) திரு. நடராஜனுக்கு பரிசுகள் வழங்கியதுடன், 2022–ம் ஆண்டு இச்சங்கத்தின் சிறந்த ஆட்ட நாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கார்குல விழாக்களும் அதன் நடைமுறைகளும் மலர் –2. புத்தகத்தினை நம் இன எழுத்தாளர் திரு. கலாப்ரியா அவர்கள் வெளியிட முதல் பிரதியினை பொருளாளர் டாக்டர். கோபாலகிருஷ்ணன் பெற்றுக்கொண்டார். இம் மலரினை தொகுத்து வழங்கிய கௌரவ ஆலோசகர் திரு. அ. சக்திவேலு பேசிடுகையில் இக்கால இளைஞர்கள் எளிதில் அறிந்திடும் வண்ணம் விழா நிகழ்வின் அடிப்படையில் இம்மலர் தயாரித்ததாய் கூறினார். இப்புத்தகம் தேவைப்படுவோர், திரு. அ. சக்திவேலு (செல் எண் : 9443486370) ல் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

தற்போது நடைபெற்ற மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி மன்ற தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் திருநெல்வேலி மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திரு. கிட்டு என்ற இராமகிருஷ்ணன் மற்றும் திருமதி. லக்ஷ்மி, உமாபதிசிவன், மாறாந்தை ஊராட்சி மன்ற தலைவி திருமதி. மீனா சுப்பிரமணியன் உறுப்பினர்

திரு. சுப்பிரமணியன் அம்பாசமுத்திரம் ஊராட்சி மன்ற உறுப்பினர் திருமதி. முத்துலட்சுமி, வீரசிகாமணி, உறுப்பினர் திரு. சண்முகசுந்தரம், சங்கரன்கோவில் நகராட்சி உறுப்பினர், திருமதி. அண்ணாமலை புஷ்பம் மற்றும் இராஜேஸ்வரி அவர்கள் கலந்து கொண்டார்கள். நம் இன மக்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்படின் அதனைத் தீர்த்திட அனைத்து முயற்சியும் செய்வதாய் அனைவரும் உறுதியளித்தார்கள். அவர்கள் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

2022–24ம் ஆண்டிற்கு புதிய நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர் : திரு. எம். பாலசுப்பிரமணியன், துணைத்தலைவர் : திரு. எஸ். மீனாட்சிசுந்தரம், செயலாளர் : திருமதி. எஸ். நெல்லை மாணிக்கம், இணைச்செயலாளர் : திரு. ப. சரவணன், பொருளாளர் : டாக்டர். எஸ். கோபாலகிருஷ்ணன், மகளிர் அணிச் செயலாளர் : திருமதி. எஸ். பார்வதி சிவகாமிநாதன், இளைஞர் அணி தலைவர் திரு. எஸ். சிவபாலன், கல்வி வளர்ச்சி ஆசிரியை : திருமதி. எஸ். பார்வதி சங்கர், மற்றுமுள்ள பதவிகளுக்கு ஏற்கனவே அப்பதவியிலிருந்தவர்கள் மீண்டும் நியமிக்கப்படுகின்றனர்.

மாணவ மாணவிகளுக்கு டாக்டர். திருமதி. எஸ். வேலம்மாள் மற்றும் ஆலங்குளம் அருணகிரி புக்சென்டர் திரு. நடராஜன் கல்வி உபகரணங்கள் மற்றும் பல நினைவு பரிசுகளை வழங்கினார்கள். தேசிய கீதத்துடன் விழா நிறைவுற்றது. அதன்பின் சங்கரன்கோவில் கௌரவ ஆலோசகர் திரு. அ. சக்திவேலு குடும்பத்தினர் சுவைபட வழங்கிய சொதி சாப்பாடு விழாவிற்கு வந்தவர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. சொதி சாப்பாடு மட்டுமல்ல ஐம்பெரும் விழாவும் இனிமையாகவும் சுவையாகவும் அமைந்ததாய் அனைவரும் பாராட்டினார்கள்.

– எம். பாலசுப்பிரமணியன்,

தலைவர்.

வருந்துகிறோம்

பெருமாள்புரம் திருமதி S. ரத்தினசிவகாமி (வயது 75) அவர்கள் 13.04.2022 அன்று இயற்கை எய்தினார். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு என்.ஜி.ஓ. காலனி, பெருமாள்புரம் சங்கம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
15.06.1938

மறைவு
05.02.2022

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தெய்வதிரு சதாசிவம் பிள்ளை, தெய்வத்திருமதி. பாக்கியத்தம்மாள் இவர்களின் மகனும், திருமதி R. பானுவின் கணவருமாகிய

S. ராமசந்திரன் பிள்ளை

Technical Supervisor P&T Dept (Retd.)

சென்னை, அசோக் நகரில் சனிக்கிழமை 5.2.2022 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

R. பானு (மனைவி)

R. வசந்தன் (மகன்)
V. செல்வி (மருமகள்)
V. ஆகாஷ் (பேரன்)

R. வசந்தி (மகள்)
S. மனோகர் (மருமகன்)
M. ஆதித்யா (பேரன்)
M. அவினாஷ் (பேரன்)

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
06–08–1944

மறைவு :
31–03–2022

K.S. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை

ஆசிரியர் ஓய்வு.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் கன்னியாகுடி கிராமம் வெள்ளாழத்தெரு தெய்வத்திரு. S. சம்பந்தம் பிள்ளை – பட்டம்மாள் இவர்களின் மூத்தகுமாரரும், வைதீஸ்வரன் கோவில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஆசிரியருமான திரு. K.S. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை அவர்கள் 31.03.2022 அன்று மாலை 4.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் நினைவில் வாழும்

K. **ஆண்டாள்** (மனைவி)

சகோதரர் :

S. சிவப்பிரகாசம் - சுந்தரி

S. சோமசுந்தரம் - மீனாட்சி

கன்னியாகுடி

சகோதரி :

வாசுகி - பாலகிருஷ்ணன்

சென்னை.

மைத்துனி :

சிவயோகம் குருமூர்த்தி

தஞ்சாவூர்.

மைத்துனர்கள் :

T. செல்வநாயகம் - சுலோச்சனா

T. முத்து - அவயாம்பிகை

G. முத்துக்குமரசாமி - மாலதி

கன்னியாகுடி

உ

சிவாய நம

முதலாம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம்
04.05.1924

நினைவு
27.05.2021

தெய்வத்திரு. **கமலத்தம்மாள் சீனிவாசன்**

அகவை 97 வரை வாழ்வாங்கு வாழ்ந்து இயற்கை எய்திய நெய்தவாசல் தெய்வத்திரு. தி. சீனிவாசம்பிள்ளை அவர்களின் அன்புத்துணைவியார் தெய்வத்திரு. **சீ. கமலத்தம்மாள்** அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் விழா எம் இல்லத்தில் (15/84, குமரன் குடில், வெங்கடேசா நகர், விருகம்பாக்கம், சென்னை – 92) 16.05.2022 திங்களன்று சிறப்புற நிகழ்வுறும்.

எங்கள் வாழ்வு வளம்பெற நலம்பெற அயராது உழைத்த அவர்தம்
பொன்னடி நாளும் போற்றும்

மகன் / மருமகள்
புலவர் **சீ. சூரியமூர்த்தி**
கோமதி சூரியமூர்த்தி
வானின்று போற்றும் **சீ. இராசசேகர்**
வாழ்நல் **விஜயலட்சுமி இராசசேகர்**
வானின்று போற்றும் **சீ. கண்ணன்**
வானின்று போற்றும் **இலலிதா கண்ணன்**
வானின்று போற்றும் **சீ. பாலசுந்தர்**
வாழ்நல் **மணிமேகலை பாலசுந்தர்**
சீ. பாஸ்கரன்
கீதா பாஸ்கரன்
சீ. தமிழ்ச்செல்வன்
அம்பிகா தமிழ்ச்செல்வன்

மருமகன் / மகள்
கு. மெய்யழகன்
சந்திரா மெய்யழகன்
மற்றும்
வழித்தோன்றல்கள்
(பெயரன் பெயர்த்திகள்)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10.06.1947



மறைவு
26.05.2021

தெய்வத்திரு பழ. இளங்கோ பிள்ளை

(எண்ணநகரம்)

தந்தை என்ற சொல்லின் திருஉருவமே!
பிறர் கைநாடா பிறவி பெருங்கடலே!
தன்னம்பிக்கையை தனித்துவமாய் கொண்டாயே!
உன் மனஉறுதியே என்றும் வெல்வது இறுதியே!
உறவுகளையே உம் சிந்தனையாய் கொண்டாயே!
உம் நினைவுகளை மட்டும் பரிசாக தந்தாயே...

நீங்கள் காட்டிய நல்வழி பாதையில்
உங்கள் நினைவுடன் வாழும்,
மனைவி: **இள. சரஸ்வதி**

மகன் : **இள. பழனி**
மருமகள் : **ப. பூம்பாவை**

மகன் : **இள. அருணாச்சலம்**
மருமகள் : **அ. தேவி**

பேரக்குழந்தைகள்

சகோதர, சகோதிரிகள் மற்றும் உறவினர்களும், நண்பர்களும்,

எண்ணநகரம், சிதம்பரம்.

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
10–4–1937

மறைவு :
22–4–2022

S. வேணுகோபாலன்

கடலூர் மாவட்டம், திட்டகுடி வட்டம், பெண்ணாடம் குருகுலராய தெய்வத்திருவாளர்கள் செல்லப் பிள்ளை – ராஜாம்பாள் அவர்களின் இளைய புதல்வர் S. வேணுகோபாலன் பிள்ளை, நிறுவனர், பாரதி மெட்ரிகுலேசன் பள்ளி, பெண்ணாடம் இவர் 22–4–22 அன்று இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்களின் உழைப்பால் எங்களை உயர்த்தி, அனைவரது அன்பிற்கும் உரியவராக வாழ்ந்த அவர்களை மறக்க இயலா நினைவுகளோடு வாழும்,

மகன் : **V. ராஜவேலு,** B.E., தலைவர், பாரதி மெட்ரிகுலேசன் பள்ளி, பெண்ணாடம்.

மருமகள் : **Dr. R. கலைவாணி,** M.E., Ph.D.,

பேரன் : **R. சர்வேஷ்குமார்,** MS., Canada.

மகள்கள் :

கு. கலையரசி - குமரேசன், ஐதராபாத்.

ஜெ. அன்பரசி - ஜெயக்குமார், பெண்ணாடம்.

சு. சாந்தி - சுவாமிநாதன். விருத்தாசலம்.

பேரன்கள் & பேத்தி

கு. சிவகுரு, USA, **கு. பாரதி,** USA, **ஜெ. பாலாஜி,** USA, **சு. விவேக்,** பெங்களூர்.

மற்றும் **கொள்ளு பேரன்கள்.**

கண்ணீர் அஞ்சலி

மண்ணில் மலர்ந்தது :
16–03–1953

விண்ணில் உதித்தது :
18–03–2022

பூஉலகில் வாழ்ந்தது போதும் என்று
வானுலகில் வாழ சென்று விட்டாயோ!

பூர்வீகம் : கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம்

வான் நிற்கும் பாலசுந்தரம் பிள்ளை – செண்பகவள்ளி அம்மாள்
(பணிநிறைவு ஆசிரியர்)
இவர்களின் மூத்தகுமாரரும், எனது கணவருமாகிய

திரு. **பால. சிவகுமார்,** B.Sc., Dip.Co.op அவர்கள்
(பணிநிறைவு, மேலாளர் முத்தியால்பேட்டை தெ.கூ. சங்கம்
உபதலைவர் – தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு, புதுச்சேரி கிளை.)

18–3–22 அன்று காலை 7 மணியளவில் இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

Er. சிவ. சந்திரகுமார், B.Tech
சந்திர கவிபிரியா, MSc. M.Phil
Er. வே. சக்திவேல், B.A
ச. வினோதினி, B.Sc

நீங்காத நினைவுகளுடன்
சசிகலா சிவகுமார்
பாண்டிச்சேரி.
8124144371

சகோதர – சகோதரிகள் :

வான்நிற்கும் **மங்கையர்கரசி கோபாலன்.** ஸ்ரீ முஷ்ணம்
திருமதி. **சுசிலா சண்முகம்** BA. கோமாளூர் (பணிநிறைவு கிளை அஞ்சலக அலுவலர்)
B. ஜெயகுமார் – கடலூர்.
B. ரவிகுமார் – பாண்டிச்சேரி.

எனது பெரியப்பா ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்
சக்திவேலன் ரவிகுமார். ITI (Rf. A/C Mech)

கண்ணீர் அஞ்சலி

உதித்தது
08–03–1947

உதிர்ந்தது
08–04–2022

திரு. R. சந்திரமோகன், B.E.

Rtd. SE, PWD (ELECTRICAL)

மயிலாடுதுறை மாவட்டம் முளப்பாக்கம் தெய்வத்திருவாளர்கள் M.G. இராமமூர்த்திப் பிள்ளை – ஞானம் ஆகியோரின் புதல்வரும் சிதம்பரம் வட்டம் சிறுகாலூர் தெய்வத்திருவாளர்கள் A. திருநாவுக்கரசுப் பிள்ளை – செல்லபாப்பு ஆகியோரின் மருமகனும் மடிப்பாக்கம் தெற்கு இராம் நகர் திரு. பாபு (எ) C. இராம்குமார் அவர்களின் அன்புத் தந்தையுமான திரு. R. சந்திரமோகன் அவர்கள் 08–04–2022 வெள்ளிக்கிழமையன்று இறைவனடியில் இணைந்தார்கள் என்பதனை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எங்களது துயரத்தில் பங்கேற்று ஆறுதல் கூறிய நல் உள்ளங்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

என்றும் தங்களின் நீங்கா நினைவில்

சகோதரிகள் :

ஹேமா குணசேகரன்
ஷோபனா இராமானுஜம்
காஞ்சனா மனோகரன்
கீதா சுப்பையன்
இராதிகா சேகர்
மீரா கார்த்திகேயன்

C. தமிழரசி – மனைவி
C. இராம்குமார் (பாபு), CTS – மகன்
R. திவ்யமங்கை, HCL – மருமகள்
R. இரச்சனா – பெயர்த்தி

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
02.05.1941

மறைவு
22.03.2022

V. வேலாயுதம் பிள்ளை

(Joint Director (Retd.), Department of Industries & Commerce, Government of TamilNadu)

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா, துணிசிரமேடு கிராமம், தெய்வத்திரு P. விஸ்வநாதம் பிள்ளை – நாகரத்தினம் அம்மாள் அவர்களின் மகனும், திருமதி. இந்திரா அவர்களின் அன்புக் கணவரும், எங்களது அன்பு தந்தையுமான திரு. V. வேலாயுதம் பிள்ளை அவர்கள் 22.03.2022 அன்று மாலை 7 மணியளவில் சிவலோக பதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

தங்கள் நினைவில் வாழும்

மனைவி : திருமதி. இந்திரா வேலாயுதம்

மகன்கள் :

திரு. **V. நடராஜன்**

திரு. **V. கண்ணன்**

திரு. **V. விஸ்வநாதன்**

மருமகள்கள் :

திருமதி. **N. கீதா**

திருமதி. **K. செந்தில் மீனா**

திருமதி **V. விஷ்ணுப்ரியா**

பேரன் & பேத்திகள்

செல்வன். **விக்ரம் சர்வேஷ்வர்**

செல்வன். **அஜய் ஆதித்யா**

திருமதி. **திவ்யதர்சனா** – திரு. **கோகுல்**

செல்வி. **ரிதி வர்ஷிதா**

கொள்ளு பேத்தி

செல்வி. **அனன்யா கோகுல்**

மற்றும் **உறவினர்கள்** & **நண்பர்கள்**

19/7, VOC Colony, IIIrd Street, Aminjikarai, Chennai - 600 029.
Mobile : 97899 64323 / 98400 43666 / 93454 27733

கண்ணீர் அஞ்சலி

மலர்ந்தது
15.07.1967

உதிர்ந்தது
18.04.2022

R. கார்த்திகேயன், M.Tech., ADE, TNEB

மயிலாடுதுறை

பூம்புகார் தெய்வத்திரு G. ராமலிங்கம் பிள்ளை அவர்களின் குமாரர் மயிலாடுதுறை திரு. **கார்த்திகேயன்** அவர்கள் 18.04.2022 திங்கள்கிழமை காலை 10.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் அவர்கள் நினைவில் வாழும்:

மனைவி: திருமதி **B. கீதா,** ஆசிரியை

மகன்: **K. சரவணராம்**

மருமகள்: **அ. அன்னபூரணி**

மகள்: **K. அஞ்சலி**

திருவிழந்தூர்

S. அழகேசன்பிள்ளை

பல்லவராயன்பேட்டை

R. தமிழ்செல்வி, தலைமை ஆசிரியை

தஞ்சாவூர்

R. பொற்செல்வி, ஆசிரியை

N. வெங்கடகிருஷ்ணன்

சென்னை.

உ

மயிலாடுதுறை மாவட்டம், மல்லியக்கொல்லை
கயிலை மணி, சித்தாந்த ரத்தினம்
தெய்வத்திரு. **A.அரங்கநாதன்,**
07.04.2022 அன்று இறைவன் திருவடியில் அமைதி காணும்

பக்தனுக்கு பக்தி மாலை

மல்லிகைப்பூ மணம் வீசும் மல்லியக்கொல்லையில்
அப்புப்பிள்ளை அலமேலுவின் தலைமகனாய் பிறந்து
ஆசையுடனும் பாசத்துடனும் வளர்க்கப் பெற்று
பாங்குடனே மயிலையில் ஆரம்ப கல்வியை கற்று
தரணி போற்றும் தஞ்சையிலே கூட்டுறவு கல்வி பயின்று
பலருக்கும் பணியாற்ற கூட்டுறவு துறையில் பணி ஏற்று
ஏற்றமுடன் உன் பணியை சிறப்பாய் செய்திட்டாய்
ராஜாவிற்கு ஏற்ற ராஜாமணியை மணம் முடித்து
பண்பான இரு தவ புதல்வர்களுடன்
ஆசைக்கு ஒரு பெண்ணாய் அழகு சிவகாமியையும் பெற்று
முத்தான மூவரையும், முறையாக வளர்த்தவரே
மாசு மருவற்ற மருமகனை பெற்றிட்டாய்
பண்பான மருமகள்களை பாங்காக பெற்றதோடு
கொஞ்சி மகிழ்ந்திட்டாய் பேரப் பிள்ளைகளுடனே
எவ்வித குறையும் இன்றி வாழ்ந்திட்டாய்
ஈசனின் அருளை முழுமையாய் பெற்றதால்
கயிலையிலே கைலாசநாதரை கண்டு களித்தாய்
"கயிலை மணி" எனும் பட்டத்தையும் பெற்றிட்டாய்
சைவ சித்தாந்தத்தை கற்று தேர்ந்ததால்
சைவ **"சித்தாந்த ரத்தினம்"** என பட்டம் பெற்றிட்டாய்
எல்லோருக்கும் நன்னெறி, நல்வழி சொல்லி அவர்தம்
வாழ்வை நல்வழி படுத்திய பெருந்தகையே
ஈசனின் இனிய தொண்டனாய், நன்னெறி செல்வராய்
ஒழுக்க சீலராய், ஈகை குணம் கொண்டவராய்
நம்பிக்கை நாணயத்திற்கு உரியவராய் விளங்கிட்டாய்
இறைவன் உன் மீது பற்று கொண்டு அகவை எண்பதிலே
தன்னிடம் அழைத்து கொண்டானோ
அவர்தம் காலடியில் உங்கள் ஆன்மா அமைதிகாண வேண்டுகிறோம்.
உங்கள் வழிபின்பற்றி நாங்கள் வாழ்ந்திடவே
எங்களை என்றென்றும் வாழ்த்தி அருள வேண்டுகிறோம்.

இவண்

R.ராஜ்குமார்	**B.புகழேந்தி**	**R.ரமேஷ்குமார்**
R.காமாட்சி	**P.சிவகாமசுந்தரி**	**R.ஜோதி லெட்சுமி**
R.அனுஷா	**P.இனியன்**	**R.தசரதராம்குமார்**
உதயராஜ் ராஜேந்திரன்	**P.இன்பன்**	**R.சாய்சக்தி**
R.மினுஷா	**E.இராதா, E.வியன்**	

ஆக்கம்: **ம.அ.சீனுவாசன்,** மல்லியக்கொல்லை

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th May 2022

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple

We Sincerely Thank Our Honourable Ex-Chief Minister of Tamilnadu Thiru.Edappadi K. Palaniswami's Family for Staying with us and shower their Blessings

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**